கல்கி

Kalki 1.1.84 ரூ1.20

"கொடுக்கிறதாச் சொன்னவர், இப்ப கிட்ட நெருங்கவிடாம, தள்ளித் தள்ளிப் போறீங்களே!"

"அதுசரி! இப்ப என் சட்டைக்குள்ளே காலண்டர்கள் இருக்கே, கசங்கிடுமே!"





பாம்புக்கு ஒரு முத்தம்



புகைப்படத்தில் பாம்புக்கு முத்தமளிப்பது காங்கேயம் கே. ஆர். சிவக்குமார். கடந்த இரண்டு வருடங்களாகவே கொடிய விஷமுள்ள பாம்புகளையும் சாதாரண விஷ ஜந்துக்களான தேள், பூரான், உடும்பு போன்றவைகளையும் எந்தவித ஆயுதங்களும் இல்லாமல் பிடித்து வந்துள்ளார்.

எப்பேர்ப்பட்ட விஷப் பாம்புகளையும் எளிதில் பிடிக்க வல்லவராதலால், நண்பர்கள் வட்டாரத்தில் செல்லமாக 'ஸ்நேக் சிவக்குமார்' என அழைக்கப்படுகிறார். பாம்பு பிடித்தலில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளபடியால், கடந்த பிப்ரவரி மாதம் கல்கத்தா சென்று அங்குள்ள பிரபல பாம்புப் பண்ணைக்காரரான தீபக் மித்ரா என்பவரிடம் மூன்று மாதங்கள் தங்கியிருந்து பாம்புகளிடம் விஷம் எடுத்தலில் பயிற்சி பெற்று வந்துள்ளார். அவருடன் கல்கத்தா தொலைக்காட்சியிலும் சில நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டார்.



நடிகர், டைரக்டர் பாக்யராஜிடம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளபடியால், 'முந்தானை முடிச்சு' படத்தில் நடிக்க வாய்ப்புக் கிட்டியது.

பெரியவர்கள் முதல் சிறு குழந்தைகள் வரை கொஞ்சம் கூட பயமேயின்றிப் பாம்புடன் பிரியமாகப் பழகும் வண்ணம் பழக்கி இருக்கிறார். படத்தில் பாம்புகளைக் கழுத்தில் மாலையாக அணிந்துள்ள குழந்தைகள் அவரது சகோதர, சகோதரிகளின் குழந்தைகள்.

பாம்புப்பண்ணை ஒன்றை அரசு அனுமதியுடன் நிறுவ வேண்டும்; எல்லா மிருகங்களையும் பிடித்துத் தம் வீட்டில் வளர்க்க வேண்டும் என்பது இவர் ஆசை.

இரண்டு வருடங்களில் ஒரே ஒரு முறை தான் நாகப் பாம்பு தீண்டியுள்ளது. உடன் சிகிச்சை பெற்றுக் குணமடைந்தார்.

கட்டுரை, புகைப்படங்கள்:

கே. ஆர். தயாளன்

எதிர்ப் பக்கம்

காஷ்மீர் காதல்!

காஷ்மீர் சுற்றுலாப் பயணிகள் காணத் தவறாத பகல்கம் பகுதி அவர்கள் காதலிக்கத் தவறாத பிரதேசமாகவும் விளங்குகிறது.

ஸன்னி என்ற பெயர் கொண்ட குதிரை மீது கம்பீரமாகவும் அச்சமின்றியும் ஆரோகணித்திருக்கும் அழகி குமாரி சபிதா, இயற்கை அழகுகளை நோட்டம் விடுகிறார் படத்தில். அமிர்தசரஸ் கல்லூரி மாணவி இவர். பஞ்சாபில் படித்தாலே பயம் போய்விடும் போலும்! சபிதாவைச் சுமப்பதே பெருமை என்பதுபோல ஓடத் தயாராய் நிற்கிறது ஸன்னி.

தகவல், வண்ணப்படம்: ராஜு



○ திருமணம் என்று?



○ "நிம்மிழந்தவர்

நீங்கள் கேட்டவை

தராசு

○ ஸ்ரீ ராகவ் ராஜ், சேலம்.
? பெரியார் தமிழ் பிரஸ்தாபிக்கப்படுவதைத் தாங்கள் விரும்புகிறீர்களா?
! ஓ! வெங்காயமும் பகுத்தறிவுவாதமும் பிடிக்கும். தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும் நாத்திக வாதமும் பிடிக்காது.

○ சே. புகழேந்தி, பழனி.
? இன்று தமிழகத்தில் தட்டுப்பாடின்றிக் கிடைப்பது எது?
! சொற்பொழிவுகள்.

○ என். சண்முகம், உள்ளி
? ஒரு பெண் தானும் ஒரு பெண் என்று எண்ணி மகிழ்வது எப்போது?
! தாய்மை அடையும்போது.

○ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.
? எம். ஜி. ஆரின் வானொலி உரையை ஒலிபரப்ப அனுமதி மறுக்கப்பட்டதாமே?
! அ. இ. ரேக்கு சில கோட்பாடுகள் உண்டு. அந்தக் கோட்பாடுகள் தேவையா இல்லையா என்பது வேறு பிரச்னை. ஆனால் அவை உள்ளவரை அனைவருக்கும் பொதுவாக அந்த விதிமுறைகள் செயல்படுவது நல்லது. அந்த விதிமுறைகளுக்கு எம். ஜி. ஆர். தம்மை உட்படுத்திக் கொள்ள மறுத்துப்பேச்சை ஒலிபரப்பாதிருந்து விட்டார். இது அ. இ. ரேடியோவின் தவறல்ல.

○ எஸ். எஸ். நாகராஜன், சென்னை 88.
? அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றாமலேயே நம் நாட்டில் ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வர முடியுமா? இவ்விஷயத்தில் பிரதமரைப் பற்றி வரும் தேஹஷ்யங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லையே?
! அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றுவது பிரதமருக்கு அப்படி என்ன கஷ்டமான காரியமா? உங்கள் கேள்வியை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே?

○ என். மோகனசுந்தரம், பொள்ளாச்சி.
? டிசம்பர் 15 ம் தேதி எதிர்க்கட்சிகள் நடத்திய மறியல் பற்றி....?
! மறியல் காரணமாக விலைவாசி இறங்கி விடாது. ஆனால் விலைவாசி உயர்வால் மக்கள் மனக் கொதிப்படைந்திருப்பதை மத்திய மாநில அரசுகளுக்கு வேறு எப்படித்தான் உணர்த்துவது?

○ எல். ஆர். விஜயகுமார், சென்னை 28.
? உடல் தெரிய உடை உடுத்தும் பெண்களை எப்படித் திருத்துவது?
! உற்றுப் பார்த்தும் இதுபோல் கேள்வி கேட்டும் இந்தப் போக்குக்கு மதிப்புத் தராமல் அலட்சியம் செய்தால் ஃபாஷன் மாறிவிடும். ஆனால் மாறி விடுமோ என்று உள்ளூரக் கவலைப்படுகிறவர்கள் தான் இன்று அதிகம்!

○ கோடைசேகர், புதுக்கோட்டை.
? சிவாஜி அ. தி. மு. க. வில் சேரப் போகிறேன் என்று அறிவித்தால் எப்படி இருக்கும்?
! அ. தி. மு. க. வில் சேர்ந்தால் என்ன, அ. தி. மு. க. வுடன் கூட்டுச் சேர்ந்தால் என்ன? கிட்டத்தட்ட எல்லாம் ஒன்று தான்.

○ எஸ். எஸ். டி. ராஜன், சிறுதையூர்.
? பாக்யராஜ் பூர்ணிமா திருமணம் உண்மையில் நடக்குமா? மோகன் என்ன சொல்கிறார்?
! மறுமணம் செய்து கொள்ளப் போவதாக பாக்யராஜ் அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தியபின் திருமணத் தேதியை சஸ்பென்ஸாகவே வைத்திருந்து கிசுகிசுக்களுக்கு இன்னும் அதிக வாய்ப்புத் தருவது மூவருக்குமே



○ பூசலைத் தவிர்ப்பாரா?



○ தேவதையைத் தருவித்தவர்

நல்லது என்றுதான் மோகன் சொல்வார்.

○ ஆர். கோபாலன், ஸ்ரீரங்கம்.
? பாலமுரளி கிருஷ்ணா கேரளத்தில் கச்சேரி செய்து கல்யாணி பாடுகையில் கல்யாணி ராக தேவதையே வந்து ரசித்து விட்டுப் போனதாகத் தகவல் பற்றி....
! போதுமைய்யா போதும்! மிருதங்கச் சக்கரவர்த்தியில் ராக தேவதைகளை— அந்தக் கண்ணறாவிக் காட்சியைப் பார்த்ததிலிருந்து ராக தேவதை என்றாலே வயிற்றைக் குமட்டுகிறது.

○ வலங்கை ஜி. ராஜசேகரன், கும்பகோணம்.
? எம். ஜி. ஆர்., கலைஞர், சோ மூவரும் சந்தித்தால் எதைப்பற்றிப் பேசிக் கொள்வார்கள்?

! நீங்கள் நினைப்பதுபோல், மொட்டையா, வழுக்கையா, தொப்பியா எது சிறந்தது என்று நிச்சயம் பேசிக் கொள்ள மாட்டார்கள்!

O மங்களதேவன், சென்னை 45.
? 1984 பற்றித் தங்கள் கணிப்பு என்ன?
! 'தொடரும் துன்பங்கள்' என்று கூற ஜோசியம் தெரிய வேண்டியதில்லை. ஆட்சியிலிருப்போரைப் பற்றி அறிந்திருந்தால் போதும்.

O கே. கணேஷ், சென்னை 6.
? நிரேந்திர பிரும்மச்சாரி விவகாரம் பற்றிக் கொஞ்சம் விளக்குங்களேன்.
! பிரதமர் இல்லத்திலுள்ள முக்கியஸ்தர்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கும் வரை இவர் செய்த தவறெல்லாமும் நன்மைக்கே. அவர்களுக்கு இவரைப் பிடிக்காமல் போன பிறகு இவர் என்ன செய்தாலும் அது தவறே!

O வி. வைரவன், கோவை.
? இந்தத் தராக கேள்வி பதிலெடுத்துவிட்டு இந்தப் பக்கத்தில் வேறு மொழி கற்றுக் கொடுத்தால் என்ன?
! எவ்வளவோ கேட்டுப் பார்த்தும் ஆங்கிலம் கற்றுத்தர போ டெரிக் முன் வராததுதான் காரணம்.

O எஸ். ரவீந்திரன், கடலூர்.
? நானும் விடுதலைப்புலிதான் என்று மதுரை ஆதீனம் கூறி இருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
! அவரைப் பற்றி நினைக்காமலிருப்பதே உத்தமம் என்று நினைக்கிறேன்.

O கே. என். ராமகிருஷ்ணன், கரூர்-2 ★
? தமிழக ஜனதா தலைமைக்கு எட்டு பேர் போட்டியிட்டது ஜனநாயகமா? கோஷ்டி அரசியலுக்கு ஆரம்பமா? ஆரோக்கியமானதா? ஏகமனதெல்லாம் சென்றது எங்கே?
! ஏகமனது என்ற பம்மாத்து வேலையைக் காட்டிலும் போட்டியும் தேர்தலும் ஆரோக்கியமானதே. தேர்தலுக்குப்பின் புதிய தலைவருக்குத் தோற்றவர் உட்பட அனைவரும் பூரண ஒத்துழைப்புத் தருவது ஜனநாயகம். தராமல் கோஷ்டிப் பூசலை ஆரம்பித்து வைப்பது அராஜகம். தோற்றவர்களை மதித்து அவர்களுக்குக் கட்சியில் முக்கிய பணிகளை, பொறுப்புகளை அளித்து ஒத்துழைப்பைக் கோரிப் பெறுவது புதிய தலைவரின் புத்திசாலித்தனம்.

O வி. பழனி, பாண்டிச்சேரி.
? சினிமா தியேட்டரில் பிளாக்கில் பழைய டிக்கெட் வாங்கி ஏமாந்திருக்கிறீர்களா?
! இதோன் வாத்யாரே! ஒரு தபா ரொம்ப ரஷ்ஷா? படம் படா த்ரில்லா? ஹவுஸ் ஃபுல் போர்டு பார்த்து ரொம்ப டவுன் ஆயிட்டேன். அப்போ இந்த பிரகர் வாராரு. 'டு ஃபிப்டி டிக்கெட், த்ரீ ஃபிப்டி தான்! இன்னும் பத்து நிமிஷம் போனா ஃபைவ் ருபீஸ் ஆயிடும்'னாரு. வாங்கிட்டேன் தொரே! கதவண்டை போனா டிக்கெட் கிழிக்கிறவர் அபௌட் டர்ன் பண்ண வெச்சுட்டாரு! ரொம்ப வெக்கமாப் போச்சு! சும்மா சொல்லக் கூடாது... எவ்னோ கரீக்டா ரெண்டு பழைய டிக்கெட்டுங்களை சேர்த்து ஒட்டி நடுவாலே தொளைங்க போட்டு... புச்சு மாதிரியே செய்திருந்தான். கலைமாமணி பட்டம் தரணும் வாத்யாரே! ஏமாந்தது அந்த ஒரே ஒரு தடவைதான். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதாதா? என்ன சொல்றே?

O என். நம்பி, திருவாரூர்.
? சமீபத்தில் நீங்கள் மகிழ்ச்சி அடைந்தது எதற்கு?
! டெலிஃபோன் பில் மிக அதிகமாக வந்தால் 'முதலில் பில்லைக் கட்டுங்கள். பிறகு புகார் மனு கொடுங்கள்' என்று கூறிவந்தது டெலிஃபோன் இலாகா. இது தவறு என்று குஜராத் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. புகார் இல்லாத மூன்று காலாண்டுகளில் என்ன பில் தொகையோ அதன் சராசரியைக் கணக்கிட்டுத்தான் பணம் வசூல் செய்யலாம். டெலிஃபோன் தொடர்பைத் துண்டிக்கக் கூடாது. புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னொரு தீர்ப்பு கல்கத்தா உயர்நீதி மன்றம் வழங்கியுள்ளது. இதன்படி டெலிஃபோன் வேலை செய்யாத காலத்துக்கு அதற்கான வாடகையை டெலிஃபோன் இலாக்கா வசூலிக்கக்கூடாது. டெலிபோன் தொடர்பைத் துண்டிக்கவும் கூடாது.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
கே. என். இராமகிருஷ்ணன்,
84-ஜே. இரண்டாவது குறுக்குத் தெரு,
வையாபுரி நகர், கரூர்-2.

பிடிக்கும் பிடிக்காது



84 பற்றி கணிப்பு என்ன?

வாரம் ஒரு புத்தகம்

பாலாற்று வளம்



○ பாலாற்று மடியில் பிறந்தவர்

- பங்களூரிலிருந்து 55 கி. மீ. தொலைவில் உள்ள நந்திமலை மீது காந்தியடிகள் இருமுறை உடல் நலன் ஓம்பத் தங்கியிருந்தார். இந்த நந்தி மலையிலிருந்து தான் உற்பத்தியாகிறது பாலாறு.
- பாலாற்றில் வேறு பல ஆறுகள் வந்து சேருகின்றன. 'நாலாறு கூடிப் பாலாறு' என்ற பழமொழியே ''கூட்டுறவு'' ஆறான பாலாற்றினால் வழங்கி வருகிறது.
- பாலாறு வெறும் மணல் பாங்காயிருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம். ஆனால், 'ஊற்றுக் கால்வாய் தோண்டினால் வெள்ளம் மிகும், குழந்தை வருட தாயின் மார்பில் பால் சுரப்பது போல' என்று சேக்கிழார் பாடியது இன்றும் பொருந்துகிறது. புதுப் பட்டினம், மறைமலைநகர் போன்றவற்றுக்குப் பாலாற்றில் கிணறுகள் தோண்டி நீரேற்றுக் குழாய் வழி குடிநீர் செல்கிறது.
- வீடு கட்டுவதற்கு அளவிலா மணலை வாரி வழங்குகிறான் பாலாற்றன்னை.
- உயிர் காக்கும் பாலாறு உயிர்போக்கும் புதை மணலும் கொண்டிருக்கிறது. நொய்ய மணல் மிகுந்திருக்கும். மழைக் காலத்தில் அவ்விடங்களில் சிக்கிப் புதைந்து மடிவோர் பலர்!
- கதரின் வெற்றி போன்ற நாடகங்களை நடத்தி சுதந்திர உணர்வூட்டிய கிருஷ்ணசாமி பாவலர் பாலாற்றின் தென் கரையில் தென்பட்டினம் என்ற ஊரைச் சேர்ந்தவர். இவர் இங்கிலாந்து விம்பிள்டனில் பிரிட்டிஷ் கண்காட்சியினும் தம் நாடகங்களை அரங்கேற்றிப் பாராட்டுப் பெற்றவர்!
- இவ்வாறு பல ரசமான தகவல்களைத் தரும் ''பாலாற்று வளம்'' என்ற நூல் தோன்றிய விதமும் ரசமானதுதான். ''காவிரி, வைகை, பொருநை ஆறுகளின் கரைகளில் தோன்றிய கலைகள் பற்றிப் பலர் எழுதி விட்டனர்; ஆனால் பாலாற்றங்கரை நாகரிகம் குறித்து யாரும் எழுதவில்லையே?'' என்று ஏக்கத்தை வெளியிட்டார் பாலாற்று மடியில் பிறந்த அறிஞர் அண்ணா. கேட்டுக் கொண்ட **தி. நா. அறிவு ஒளி** செயல் பட்டார். நூல் உருவாயிற்று
- உணர்ச்சிக் குறிகளையும் ஓ! ஆ! அடடா! போன்ற வியப்பொலிகளையும் பல பக்கங்களில் அள்ளித் தெளித்திருந்தாலும் புலமை நோக்குடன் பல்வேறு பாலாற்றங்கரை வளங்களைப் பட்டியலிட்டிருப்பதால் பாடப் புத்தகம் படிப்பது போலிருக்கிறது. ஒரு பயண நூல் போல எழுதியிருந்தால் ஆராய்ச்சி நூலாக மட்டுமின்றி ஜனரஞ்சகமாகவும் விளங்கியிருக்கும்.

—குட்டிகிருஷ்ணன்


கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 79, பிரகாசம் சாலை, சென்னை—108. விலை: ரூ. 12.

செய்தி வெடிகள்

★ வேண்டாம் கோஷ்டிச் சண்டை.
—மரகதம் சந்திரசேகர்.

- 'கோஷ்டிச் சண்டை வேண்டாமென்றால், வேறு எந்தச் சண்டை போடுவது? அதையாவது சொல்லுங்கள்' என்கிறார் ஒரு தமிழக இ. காங்கிரஸ்காரர்.

★ அரசியல்வாதிகள் தலையிடுவதால் தான் வகுப்புக் கலவரங்கள் ஏற்படுகின்றன



என்று ஓய்வு பெற்ற நீதிபதி கன்னா சொன்னார்! —ஹைதராபாத் செய்தி.

- நீதிபதிகள் 'கன்னாபின்னா' என்று பேசுவதாக அரசியல்வாதிகள் முணுமுணுக்கலாம்!


★ மணியாச்சி அருகே சரக்கு ரயில் தடம் புரண்டதால் நெல்லை எக்ஸ்பிரஸ் 6 மணி நேரம் தாமதமாக வந்தது.
—சென்னைச் செய்தி.

- தங்கள் தங்கள் வேலைக்குப் போக, 'மணியாச்சி' என்று பிரயாணிகள் முணுமுணுத்திருப்பார்களோ!


★ தமிழக இந்திரா காங்கிரசின் உட்பூசல்கள் பேசித் தீர்க்கப்படும்.
—இந்திராகாந்தி.

- ஏசித் 'தீர்ந்து போவதற்கு' முன், பேசித் தீர்த்துக் கொள்வார்களாக!

-மகரம்




இப்படியே
சுத்தி சுத்தி
இருக்க வேண்டியது தானா?
பேச்சு வார்த்தை


பாதுகாப்பு
மக்களின் உயிர், உடைமைக்குப் பாதுகாப்பு

கல்கி

1984 ஜனவரி 1
ருத்ரோத்காரி மார்கழி 17
மலர் : 42 இதழ் : 22



முழுப்பூசணி – 1, 2

ரெ. 1: முதல் மாருதி கார் தயாராகி அதனைப் பிரதமர் வெள்ளோட்டம் விட்டதை அறிந்து மகிழ்கிறோம். வேறு பல அரசுத்துறை நிறுவனங்கள் போல் மெத்தனம் காட்டாமல் மிகக்குறுகிய காலத்தில் தொழிலகம் செயல் படத் தொடங்கி உற்பத்தியும் ஆரம்பமாகியிருப்பதற்குப் பாராட்டுக்குரியவர்கள் ஒத்துழைப்புத்தரும் ஜப்பானிய ஸுஸுகி நிறுவனமும் மாருதியின் செயல்திறன் மிக்க நிர்வாகத் தலைவர் வி. கிருஷ்ணமூர்த்தியும். வாழ்த்துகிறோம். ஆனால்...

தொடக்க விழாவை சஞ்சய்காந்தியின் பிறந்தநாளன்று வைத்துக் கொண்டது; சஞ்சய்காந்தியின் மிகப் பெரிய படத்தை நடுக்கூடத்தில் வைத்து மரியாதை செலுத்தியது ஆகியன கசப்புணர்வைத் தோற்றுவிக்கின்றன. போதாக்குறைக்குத் தொழில் அமைச்சர் ''சஞ்சய் வானுலகிலிருந்து புன்னகைத்துக் கொண்டிருப்பார்'' என்று துதிபாடினர். பிரதமரோ ''மாருதி நிறுவனம் தொடர்பாக எத்தனை அவதூறுகளையும் குற்றச்சாட்டுகளையும் சுமத்தினார்கள்...! இன்று பாருங்கள்...'' என்று ஒரு குட்டி நாடகம் நடத்தினர்.

சஞ்சய்காந்தியின் மாருதி நிறுவனத்துக்கும் இன்றைய மாருதி உத்யோக் நிறுவனத்துக்கும் சம்பந்தமே கிடையாது. மாருதி உத்யோக் முற்றிலும் புதிய நிறுவனம். சஞ்சய்யின் மாருதியோ அதிகாரத்தில் உள்ள ஒருவரின் வாரிசு எப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடாது என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது. பொது மக்களின் (அரசின்) சொத்து அநீதியான முறையில் அபகரிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மோட்டார் கார் விநியோகஸ்தர்களின் கோடிக்கணக்கான பணம் கபளீகரமாயிற்று. மாருதி விவகாரத்தை விசாரித்த கமிஷன் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒதுக்கப்படலாம்; ஆனால் அதிலுள்ள பூசணிக்காய் உண்மைகளைச் சொற்பொழிவுச் சோற்றிலே மறைக்க முடியாது!

ரெ. 2: நாற்பது லட்சம் டன் நிலக்கரி போன இடம் தெரியவில்லை! நிலக்கரி இந்தியா லிமிடெட் நாற்பது லட்சம் டன் நிலக்கரியைத் தன் கணக்குப் புத்தகத்திலிருந்து 'ரைட் ஆஃப்' செய்து விட்டது! அதாவது கிடங்குகளில் கையிருப்பாக இருக்க வேண்டிய இந்த அளவு நிலக்கரி இல்லாததால் அது என்ன ஆயிற்று என்று விசாரியாமல் போனால் போகட்டும் என்று தள்ளுபடி செய்து கணக்கை நேர்ப்படுத்தி விட்டது! கணக்குத்தான் நேராயிற்றே தவிர நிலக்கரி போனது போனதுதான்! அரோகரா! அரசுத் துறை நிறுவனத்தில் இவ்வாறு ஒழுங்கீனங்கள் நடந்தால் நஷ்டம் யாருக்கு? சந்தேகமே வேண்டாம், வரி செலுத்தும் நமக்குத்தான்.

இதற்கு நிலக்கரி இந்தியா நிறுவனம் கூறும் காரணம் அதிவிசித்திரமானது. அகழ்ந்தெடுக்கப்பட்ட நிலக்கரியைக் காட்டிலும் 2.5 சதம் அதிகமாகவே கணக்கில் வரவு வைப்பது வழக்கம் என்றும் அப்படி கணக்கெழுதியதால் கூடிக் கொண்டே போன நிலக்கரியை இப்போது 'ரைட் ஆஃப்' செய்வதாகவும் கூறுகிறது! இதைவிட ஆச்சர்யம் என்னவெனில் இதனை நிலக்கரி வர்த்தகர்கள் சங்கம் வரவேற்றுள்ளது மட்டுமல்ல, இதேபோல் இன்னும் ஒரு கோடி டன் 'ரைட் ஆஃப்' செய்யலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறது!

உற்பத்தி ஆகாததை உற்பத்தி ஆனதாக மாதக்கணக்காக வரவு வைப்பானேன்; பிறகு அதைத் தள்ளுபடி (ரைட் ஆஃப்) செய்து கணக்கை நேராக்குவானேன்? யாருக்குக் கரி பூசப் பார்க்கிறார்கள்? முழுப்பூசணிக்காய் சோற்றில் மறைய மறுக்கிறது!



அத்தியாயம் 9

பிரியாவிடை

கழற்றிப்போட்ட பூமாலை போல ஆதித்தன் காலடியில் ஒரு குவியலாகக் கிடந்தாள் இளங்கோப்பிச்சி.

''பிரபோ உங்களால் என்னை மன்னிக்க முடியாது. மரண தண்டனை கொடுங்கள். ஏற்கிறேன்; சித்திரவதைக்கு உள்ளாக்குங்கள் பொறுக்கிறேன். ஆனால் தயவு செய்து என்னை உங்களிடமிருந்து ஒதுக்கி விடாதீர்கள். கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். உங்களிடமிருந்து பிரிந்திருப்பது என்ற கொடுமையை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது!''

''அன்பே!'' என்று குனிந்து அவள் தோள்களைப் பற்றி எழுந்திருக்கச் செய்து அணைத்தான். கன்னங்களில் உருண்ட நீர் முத்துக்களை மேலுத்தரீயத்தால் ஒற்றி எடுத்தான். ''கண்ணே! உண்மையைச் சொல்வதென்றால் நீ செய்த காரியம் சட்டப்படி குற்றமென்றாலும் எனக்கு மகிழ்ச்சியையும் அளித்த ஒன்றுதான்!''

''பிரபோ?'' என்று விளக்கம் கோருபவளாக அவனை ஆவலுடன் ஏறிட்டு நோக்கினாள்.

''ஆம் கண்ணே! விக்கியண்ணனைப் பாதாளச் சிறையில் அடைக்க நேர்ந்ததில் எனக்கு வருத்தமில்லை என்று நினைக்கிறாய்? சோழ நாட்டின் குஞ்சரமல்லர்களுக்குத் தளபதி மட்டுமா அவன்? என் ஆருயிர் நண்பனுமாயிற்றே! கடந்த பல நாட்களாக எத்தனை வேதனையை நான் என் உள்ளத்திலே தேக்கி அவதிப்பட்டு வந்திருக்கிறேன் தெரியுமா?''

'களி'ரென்று சிரித்து அவன் நெஞ்சில் கன்னம் பதித்துக் கரங்களை மாலையாக்கினாள். ''அப்படியானால் சற்றுமுன் தாங்கள் காட்டிய சீற்றம் வெறும் விளையாட்டுத்தானா! பொல்லாதவர்! நான் மெய்யாலுமே பயந்து விட்டேன்!''

''இல்லை, இளங்கோப்பிச்சி! அது நடிப்பு அல்ல. அந்தக் கோபம் உண்மையானது மட்டுமல்ல, நியாயமானதும் கூட. சோழ நாட்டின் பேரரசியாகிய நீ இப்படித் தனியே வெளியே சென்றிருக்கலாமா? வேளக்காரப் படையினர் எதற்கு இருக்கிறார்கள்? விரலைச் சொடுக்கினால் போதுமே. உடன் வந்து தலையைக் கொடுத்தேனும் உன்னைப் பாதுகாப்பார்களே!''

''பிரபோ நம்பியைச் சந்திக்கத் தமிழ்ப் பள்ளிக்குச் செல்லும்போது பரிவாரங்கள் புடைசூழச் செல்லாது அடக்கமாக நடந்து கொள்ள எண்ணி...''

''பகல் போதானாலும் பாதகமில்லை—; இருள் கவிந்தபின்...''

''பாடம் கற்பித்தலும் பிரதி எடுப்பதும் ஆய்வு நடத்துவதும் அன்றையப் போதுக்கு முடிந்து நம்பி ஓய்வாக இருக்கும் மாலை நேரத்தில் சென்றால் சாவகாசமாகச் சற்று நேரம் பேசலாமே என்ற கருத்தில்...''

''எல்லாவற்றுக்கும் பதில் வைத்திருக்கிறாய். ஆனால் விடைகளில் சாரமில்லை. பல்லக்கில் விக்கியண்ணன் புகுந்தது போல் வேறு யாரேனும் பாய்ந்திருந்தால்...? அல்லது விக்கியண்ணனே இருட்டில் உன்னை இன்னாரென்று தெரியாமல், தன்னைக் காத்துக் கொள்வதற்காக உனக்கு ஏதேனும் தீங்கு இழைத்திருந்தால்......? உனக்கு நேர்கின்ற துன்பம் ஒருபுறமிருக்க, சோழ தேசத்துக்கும் சோழ மன்னர் பரம்பரைக்குமே நேரக் கூடிய அபக்கியாதி பற்றி யோசித்தாயா?''

''அவ்வளவு தூரம் நான் சிந்திக்காதது தவறுதான் பிரபோ'' என்ற பிச்சி, அவன் நெஞ்சிலே ஒரு விரலால் கோலம் வரைந்தாள். ''ஆனால் நல்ல வேளையாக நீங்கள் அஞ்சுவது போல் ஏதும் நடக்கவில்லையே!''

''நடந்திருப்பதெல்லாம் போதாதா? தப்பி ஓடிவந்த கைதியைப் பல்லக்கில் ஒளித்துவைத்தது மின்றி பாவம்... பரம சாதுவான நம்பியாண்டார் நம்பியையும் இந்தச் சூழ்ச்சியில் சிக்க வைத்து அவரையும் விக்கியண்ணனுக்கு உதவுமாறு செய்து...''


''பிரபோ அதுவும் தங்களுக்குத் தெரியுமா?''வியப்பும் கலவரமும் போட்டி விடும் முகத்தால் அண்ணாந்து பார்த்தாள்.

''பிச்சி! சோழச் சக்கரவர்த்திக்குத் தெரிய வராமல் சோழ சாம்ராஜ்ஜியத்தின் எந்த மூலை முடுக்கிலும் அவனுக்கு எதிரான ஒரு சின்னச்சதிச்செயல் கூட நிறைவேற முடியாது!'' என்று ஆதித்தன் கூறிய போது தோல்வியின் விளைவான நாணத்தால் பிச்சியின் பட்டுக் கன்னங்களில் இரத்தச் சிவப்பேறி அந்தக் குவிந்த அழகுகளைத் தட்டிக் கொடுக்க ஆதித்தனின் உள்ளங்கைகளுக்கு அழைப்பு விடுத்தது. அதை மகிழ்ச்சியோடு ஏற்றான்.

''அன்பே! உங்கள் ஒற்றர் தலைவன் யார்? அவனுக்கு நான் பரிசு தர வேண்டும்'' என்றாள் அரசி.

''ஒற்றர் தலைவன் யார் என்பது நாலு பேருக்குத் தெரிய வருமானால் அவன் ஒற்றர் தலைவனாயிருக்கவே அருகதையற்றவன்'' என்று ஆதித்தன் கூறிப் பிச்சியை மேலும் திகைப்பில் ஆழ்த்திய சமயம், கூடத்துக்கு வெளியே காலடியோசையும் ''ஆதித்தா'' என்று அழைக்கு மொலியும் கேட்கத் தன் அரவணைப்பினின்று பிச்சியை விடுவித்தான் ஆதித்தன்.

குவளை ஒருத்திக்குத்தான் அவர்கள் தனிமை




கி.ராஜேந்திரன்
அபிமானவல்லி

யில் குறுக்கிடும் அதிகாரமும் துணிவும் உண்டு என்பதால் ஏதேனும் அவசரக் காரியமெனில் அவள் மூலம்தான் அதிகாரிகள் அகால நேரத்தில் மன்னரை அணுகுவார்கள். குவலையும் அபூர்வமாகவே தனக்குள்ள உரிமையை எடுத்துக் கொள்ளும்போது வேண்டுமென்றே இப்படிச் சத்தப்படுத்திக் கொண்டோ அல்லது உரக்கப் பேசிக் கொண்டோ வந்து மன்னரும் மனைவியும் ஒருவரிடமிருந்து ஒருவர் விலகி நிற்க வசதி செய்து தருவாள்.

''வாருங்கள், அன்னையே'' என்று அவள் நிலைவாசலை நெருங்கு முன்னரே வரவேற்றான் ஆதித்தன்.

''மைந்தா! என்ன இது நான் கேள்விப்படுவது? நீ ரொம்பக் கோபமாய் இருக்கிறாயாமே? அந்தப்புரத்தில் அனைவரும் உன் சிம்மக் குரல் கேட்டு நடுநடுங்கிப் போயிருக்கிறார்கள்!''

''அம்மா! என்றால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட விக்கியண்ணன் பாதாளச் சிறையிலிருந்து தப்பி விட்டான். அவனுக்கு இவள் அடைக்கலம் தந்திருக்கிறாள். எனக்கு ஏன் கோபம் வராது?''

''வர வேண்டியதுதான். ஆனால் அதை யார் மீது காட்டுவது என்பதில்தான் நமக்கிடையே கருத்து மாறுபாடு. உன் சினம் சிறை அதிகாரிகள் மீதல்லவா திரும்ப வேண்டும்? பாதாளச் சிறையிலிருந்து ஆயுள் தண்டனை பெற்ற ஒரு கைதி தப்பிச் செல்வதென்பது சோழ சாம்ராஜ்யத்தில் இவ்வளவு எளிதான காரியமாகி விட்டதென்றால்... உன் ஆட்சித்திறன் இந்த லட்சணத்தில் இருக்கிறதென்றால் நீ கோபப்பட வேண்டியது முதலில் உன் பேரிலேயேதான்!''

''அன்னையே!'' என்று அதட்டலாக ஆதித்தன் குரல் ஒலிக்கவும்,

''மகனே! என்னையும் இளங்கோப்பிச்சி போல் பயப்படச் சொல்கிறாயா?'' என்று கேட்டுச் சிரித்தாள் குவலை. ''உன்னை என் மடியில் போட்டு வளர்த்தேன் என்ற உரிமையால் பேசவில்லை; அறம் என் பக்கத்தில் இருக்கும் துணிவில் சொல்கிறேன்!''

உடம்பெல்லாம் சூடேற ஆதித்தன் வேறு புறம் பார்த்தான். அடி உதட்டைப் பற்கள் காயப்படுத்திக் கொண்டிருந்தன.

''ஆதித்தா, ஏன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாய்? எங்கே என் முகத்தைப் பார்த்துப் பதில் சொல்லு! எனக்கொரு சந்தேகம்...''

''என்ன?'' என வினவினானேயொழிய அவள் முகத்தைச் சந்திக்கவில்லை அவன்.

''விக்கியண்ணன் ஏதோ தன் சாமர்த்தியத்தால் பாதாளச்சிறையிலிருந்து தப்பி வந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கலாம்; ஆனால் உண்மையில் விக்கியண்ணன் தப்புவதற்கு நீயேதான் வழி வகுத்திருக்கிறாய்! சற்றுமுன் சிறைச்சாலைத் தலைவன் உனது இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியதைக் கூறிப் போகத்தான் வந்திருக்கிறான்!''

''அம்மா!'' என்ற ஒரு சொல்லுக்கு மேலாகப் பேச முடியாமல் சற்றுநேரம் வியப்பில் திணறிய ஆதித்தன், கண்களில் நீர் பனிக்கக் குவலையை மெல்லத் திரும்பிப் பார்த்தான். ''உங்கள் கூர்மதியை வெல்லச் சோணாட்டில் யாருமே இல்லை'' என்றான்.

''பிரபோ!'' என்று மகிழ்ச்சி பொங்க ஓடிவந்து நெருங்கிய இளங்கோப்பிச்சி, அங்கே குவலை இருப்பதையும் மறந்து



விழாக்காலச் சிறப்புத் தள்ளுபடி !
20%
டிசம்பர் 19 முதல் பொங்கல் வரை
அனைத்து ரகங்களுக்கும் உண்டு.
வருக:
ஹேண்ட்லூம் ஹவுஸ்
7, ரத்தன் பஜார், சென்னை-3.
● ஞாயிறும் திறந்திருக்கும்.
மற்றும் கோயம்புத்தூர் 27/28, திவான்பகதூர் ரோடு.
ஆர்.எஸ். புரத்தில் எமது ஷோரூமிலும் இச்சலுகை உண்டு.

அவனுடைய கரங்களைப் பற்றி உயர்த்தி முத்தமிட்டாள். "மாயத்தில் வல்லவனான கண்ணனையும் வென்று விடுவீர்கள் போலிருக்கிறதே! நாடறிய விக்கியண்ணனுக்குத் தண்டனை வழங்க வேண்டியது; பிறகு அவன் தப்பவும் வழி வகுப்பது.... மறுபடி அவனுக்குச் சோழ தேசத்தில் உயர் பதவி வகிக்க முடியாதென்றாலும் வேற்று நாடு ஏதேனும் ஒன்றில் சுதந்திர மனிதனாகவாவது உலாவி வரலாமே, இல்லையா? பொல்லாதவர்தான் நீங்கள்!"

"நான் வேறென்ன பண்ணுவேன் பிச்சி? என் நண்பன் கொலை செய்திருப்பான் என்று என்னால் கருத முடியவில்லை. மாவீரனான அவன், தன் மானத்துக்கோ, கௌரவத்துக்கோ இழுக்குத் தேடித் தந்தவனை வாட்போருக்கோ, மல்யுத்தத்துக்கோ அழைப்பானே தவிர உறங்கும்போது கொலை செய்யவே மாட்டான். ஆனால் சாட்சியங்களெல்லாம் அவனுக்கு எதிராய் இருக்கும்போது தண்டனை தராவிடில் 'நண்பன் என்பதால் விட்டுவிட்டேன்; நீதி தவறிவிட்டேன்' என்ற பேச்சு எழும்."

"பிரபோ! அப்படியானால் நான் குற்றமற்றவள்தானே? எனக்குத் தண்டனை ஏதுமில்லையே?" என்று இமைகளைப் படபடத்துப் புன்முறுவலுடன் வினவினாள் இளங்கோப்பிச்சி.

"அப்படி எண்ணுவதற்கில்லை பிச்சி! மன்னனாகிய நான் தண்டனை தரலாம், தண்டனையைத் தளர்த்தவும் செய்யலாம். அதற்கு எனக்கு அதிகாரம் உண்டு. ஆனால் ராஜநீதி செயல்படாமல் இடையூறு செய்ய யாருக்குமே உரிமை இல்லை. நீ விக்கியண்ணனுக்கு உதவிய போது என் கருணை பற்றிய இந்த விவரம் உனக்குத் தெரியாது. தப்பியோடி வரும் கைதிக்கு உதவுவதாக நினைத்தே அபயமளித்தாய். நம்பியை அதில் சம்பந்தப்படுத்தி அவரையும் என் ஆணைக்கு விரோதமான காரியத்தில் இறங்கத் தூண்டினாய்! இதற்கெல்லாம் தண்டனை பெற வேண்டியவள்தான் நீ!"

அவமானத்தால் உடல் குன்றித் தளர்ந்த இளங்கோப்பிச்சியை நெருங்கிய குவளை அவள் முதுகை ஆதரவாக ஒரு முறை தடவிக் கொடுத்து விட்டு மகனைப் பார்த்துக் கூறினாள்: "ஆதித்தா! விக்கியண்ணனுக்காகப் பெருக்கெடுக்கும் உன் கருணை உன் மனைவிக்காகச் சுரக்காதது வியப்புத்தான்!"

"தாயே! கடுமையோடு கருணையை இணைக்க என்னைப் பழக்கியவரே தாங்கள் தான். நீங்கள் கோரி நான் மறுப்பேனா? அதனால் இவள் பெற வேண்டிய தண்டனையை இப்போதைக்கு ஒத்திப் போடுகிறேன். ஆனால் என்றேனும் ஒருநாள் இன்று விதிக்கப்பட வேண்டிய தண்டனையை நிறைவேற்றும் காலம் வரும். அந்தத் தருணத்தில் இவள் முகம் சுளிக்காமல் அதை ஏற்கட்டும்" என்றான் ஆதித்தன்.

இளங்கோப்பிச்சி உடல்சிலிர்க்கக் கண்களை மூடினாள். ஏனோ அப்போது அவள் மனத்திரையில் அபிமானவல்லி தோன்றினாள். ஒருவேளை தான் பெறப்போகும் தண்டனை அபிமானவல்லி அரண்மனைக்கே வந்து வாசம் புரிய வசதியாக அமையுமோ என்கிற எண்ணமும் கூடவே உருவாகி அவள் மனம் கசந்து போகச் செய்தது. ஆனால் அந்த மனக்கசப்பு அதிக நேரம் நீடிக்கவில்லை. அபிமானவல்லியை அறவே மறந்து ஆதித்தனிடம் தன்னைப் பூரணமாக ஒப்படைத்துக் கொண்டாள் இளங்கோப்பிச்சி.

"நாளை சந்திப்போம்" என்று கூறிக் குவளை விடைபெற்றதும் அதற்கெனவே காத்திருந்தவன் போல ஆதித்தன் இளங்கோப்பிச்சியைத் தன்பால் இழுத்து அணைத்தான். சமீபத்திய உணர்ச்சிக் கொந்தளிப்புக்களால் அலைப்புண்டிருந்த அவன் மனம் அமைதியை நாடியது. பிச்சி மீது ஆதித்தனுக்கு ஏற்பட்ட கோபம், அன்பு காரணமாகவே எழுந்ததென்பதாலும் அரசியின் துயரம் மன்னன்பால் அவளுக்குள்ள காதலையே வலியுறுத்தியது என்பதாலும் இருவருமே நெகிழ்ந்து போயிருந்தார்கள். வெளியுலகையும் சுய நினைவையும் இழந்தவர்களாகப் பிரேமைப் பிரவாகத்தில் மூழ்கினார்கள்.

* * *

நாட்கள் சில சென்று தஞ்சையை விட்டுக் கிளம்பி மறுபடியும் நம்பி தலயாத்திரை புறப்பட்டபோது சற்றுத்தூரம் மரியாதைக்காக உடன் சென்று வழியனுப்பி வைத்தான் ஆதித்தன். மன்னன் தஞ்சைக் கோட்டை வாசலருகே குதிரையில் வந்திறங்க அதற்குச் சில கணங்கள் முன்னர்தான் சிவிகையில் அங்கு வந்து சேர்ந்திருந்தார் நம்பி. இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டு பிறகு மனமொன்றிய நண்பர்களாய்க் கோட்டை வாசல், அகழிப்பாலம் எல்லாம் கடந்து ராஜபாட்டையில் நடந்தனர். பரிவாரங்கள் பணிவான தூரத்தில் பின்தொடர்ந்தன. அவர்களிடையில் மழுங்க மொட்டையடிக்கப்பட்ட தலையிலும் கழுத்திலும் ருத்திராக்கங்கள் அணிந்து உடலெங்கும் பட்டைபட்டையாகத் திருநீறுபூசி ஒற்றைத் துணியை இடுப்பிலே சுற்றிச் சிவப்பழமாக நடக்கும் விக்கியண்ணனை ஆதித்தனின் கூரிய கண்கள் கவனித்துக் குறும்பிலே மின்னின.

"புலவரே! நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதா? சோழ நாட்டின் விலை மதிப்பற்ற பொக்கிஷத்தை உம்மிடம் ஒப்படைத்திருக்கிறேன்" என்றான் ஆதித்தன்.

"பத்திரமாகப் பாதுகாத்து சமயம் வரும் போது அல்லது நீர் கேட்கும் போது உம்மிடமே திருப்பித் தருவேன்" என்றார் நம்பி.

"சிவத்தொண்டரே! மூவர் பாடிய தேவாரங்களைத் திருமுறைகளாகத்தொகுத்த பின்னர் என்ன செய்வதாக உத்தேசம்?"

"சைவப் பணிக்கு எல்லை ஏது? பாண்டி நாட்டில் வரகுணனுக்கு அமைச்சராயிருந்த மாணிக்கவாசகர் என்பார் அற்புதமான

பாடல்களைப் பாடியிருக்கிறார் என்று கேள்வி. இருநாடுகளிடையே பகைகுன்றி நட்பு வளருமானால் அவற்றையும் தொகுக்க ஆசை. ஆனால் அதற்கெல்லாம் என் வாழ்நாள் போதுமா என்பதை அறியேன். பின்னால் வருவோர் செய்வார்கள்.''

''அப்படிப் பேசாதீர்கள்; உங்களால் ஆக வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. சிவநேசச் செல்வர்கள் பலரது வாழ்க்கைச் சரிதங்களைச் சுருக்கமாகவேனும் எழுதி வைக்க வேண்டும் நீங்கள். காவிரியாற்றின் இருமருங்கிலும் உள்ள சிவாலயங்களைக் கற்றளியாக மாற்றும் அவாவுடன் இருக்கிறேன். அதற்கும் யோசனைகள் கூறி உதவ வேண்டும். இன்னும் கேட்டால் தில்லைச் சிற்றம்பலத்தின் மேல் முகட்டுக்குப் பொன் வேய்ந்து அம்பலவாணனைப் பொன்னம்பல வாணனாகச் சிறப்பிக்க வேண்டும் என்ற ஆசையுடன் இருக்கிறேன்.''

''இறையருள் கூடினால் என்னதான் நடக்காது?'' என்று அப்போதே பொன்னம்பலத்தை மானசீகமாகத் தரிசித்துப் பரவசமானார் நம்பி.

''புலவரே! நாம் எல்லோரும் இன்றில்லாவிட்டால் ஒருநாள் மடிந்து தான் போகப் போகிறோம். எனது செல்வமும் அணிமணிகளும் அதிகாரங்களும் அரண்மனைகளும் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறையக் கூடும். ஆனால் நீங்கள் தொகுத்திருக்கிறீர்களே இந்தத் திருமுறைகளுக்கும் நான் எடுப்பிக்கின்ற கற்றளிகளுக்கும் எனது பரம விரோதி கூட தீங்கு இழைக்க மாட்டான். இவை நம் பெயரையும் சொல்லிக் கொண்டு என்றென்றும் வாழும்; நம்மைச் சிரஞ்சீவிகளாக்கும்.''

''மன்னவா! அழகாகப் பேசினீர்கள்; ஆழ்ந்த கருத்துக்களையும் சொன்னீர்கள். தங்களுடன் பேசிக் கொண்டே வழி நடந்தால் அலுப்போ சிரமமோ தெரியாமல் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்லலாம். ஆனாலும் பிரபோ, இனியும் தாங்கள் உடன் வருவது முறையல்ல; உமக்குக் கௌரவமும் அல்ல.''

''நல்லது. எனக்கும் கடமைகள் காத்திருக்கின்றன. நீங்கள் சிவிகையில் அமருங்கள்'' என்று கூறிப் பட்டத்துக் குதிரையை அருகில் கொணரச் சைகை காட்டினான் ஆதித்தன். ''உங்கள் பரிவாரத்துடன் இரண்டு குதிரை வீரர்களையும் அனுப்புகிறேன். இருக்கட்டும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவசரத் தேவை எனில் செய்தி கூறி அனுப்பலாம்.''

''சென்று வருகிறேன் ஆதித்தா! மறுபடி நாம் சந்திப்பது எப்போதோ?''

''நீங்கள் எதிர்பார்ப்பதை விடவும் சீக்கிரமே பார்க்கலாம்!'' என்ற ஆதித்தன் லாகவ கம்பீரத்துடன் அந்த உயர் ஜாதி அராபியப் புரவி மீது ஆரோகணித்து அதனைத் தட்டி விட்டான்.

சில கணங்களில் அவன் தஞ்சைக் கோட்டை வாசலைத் திரும்பவும் வந்தடைந்தபோது அங்கே ஏதோ கலவரம் நிகழக் கண்டு குதிரையை இழுத்துப்பிடித்து நிறுத்தினான்.

மன்னரைக் கண்டதும் அதுவரை அதிகாரத் தொனியில் கூச்சலிட்டுக் கொண்டிருந்த கோட்டைக் காவலர்கள் வணங்கி நிற்க, அவர்களுக்கிடையில் அயலூர்க்காரர்களைப் போல் தோன்றிய நால்வர் தயக்கத்துடன் நின்றிருந்தனர். அவர்கள் எதிரே பெரியதொரு மரப்பெட்டி தரையில்இறக்கி வைக்கப்பட்டிருந்தது.

''என்ன ரகளை இங்கே!'' என்று அதட்டலான குரலில் வினவி அந்நால்வரையும் கூர்ந்து நோக்கினான் ஆதித்தன்.


(தொடரும்)

இந்திய கப்பற் படையினர் அளிக்கும்
(கப்பற் படையினரின் நலனுக்காக)
புத்தாண்டு/போங்கல் திருவிழாகால



இந்திய கடற்படை
பம்பர் குலுக்கல்

இப்பரிசு
சீட்டுக்களை
தமிழகத்தில்
விற்பனை செய்ய
தமிழக அரசின்
அனுமதி பெற்றது.



முதல்
பரிசு
ரூ. 2.22 கோடி

குலுக்கல்
நாள்:
14.1.1984

பரிசுச்
சீட்டின்
விலை
ரூ. 5/-

2வது பரிசு: ரூ. 10 லட்சம்

ஹர்சந்த் சிங்
(இந்திய கப்பற்படைத் தலைவர்)
நிர்வாக கூட்டு அதிகாரி
நேவல் தலைமை அலுவலகம்
சேனா பவன், புதுடெல்லி-110 001.

ஆர்கனைஸிங் ஏஜன்ட்:
M/s. மார்வா & கோ
12, மோகன் சிங் ப்லேஸ்
கனாட் ப்லேஸ், புதுடெல்லி-110 001
தொலைபேசி: 312080, 310 132



✕ யக்ஞராமன்...

● 'தாலி அணிவது தேவைதானா?' — கி. வா. ஜ. வின் விளக்கம் இக்காலத்துப் பெண்களும் விரும்பி ஏற்கும் வண்ணம் அமைந்திருந்தது.
குன்னத்தூர். ம. ரங்கநாயகி.

● 'சிரிகமபதநிஸ கச்சேரி' கல்கி நடுப்பக்கத்தில் களை கட்டியிருந்தது.
அயனாவரம். சுகுணா நாராயணமூர்த்தி.

● நடன ரத்தினங்களைப் பற்றிய மணியான சம்பவங்கள், அவர்களின் உள்ளத்திற்கு மட்டுமல்லாமல் எல்லோரின் நெஞ்சங்களுக்கும் நெகிழ்வை அளிப்பதாய் அமைந்தது.
பெங்களூர்—16. டால்பின்ஸ்.

● ''வளர்ந்த தமிழகம் தாழ்ந்தது'' என்பதற்கான காரணங்கள்... சிறந்த... சிந்திக்கத் தூண்டும் ஆதாரங்களுடன் வலியுறுத்தப்பட்டிருந்தது.
அயன்புரம். த. சத்தியநாராயணன்

● இசை உலகில் நாதஸ்வர மேதையாக விளங்கும் திரு. கிருஷ்ணன் அவர்களின் புகைப்படத்தை 'கல்கி' அட்டையில் அலங்கரித்து, அவரைப் பற்றிய அருமை பெருமைகளையும் பிரசுரித்ததற்கு நன்றி.
திருவானைக்காவல், வி. கே. துரைசாமிஐயர்.

● 'நேர்மையின் அவதி' அல்லது சாதாரண மனிதன் அரசு உத்யோகஸ்தனுக உயர்ந்த பரிணும வளர்ச்சி — திருவள்ளுர் பார்த்தசாரதியை, நல்ல முறையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
தஞ்சாவூர்—9 விஜயா ரகுநாதன்.

● அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் சில நிகழ்ச்சிகளை யதார்த்தமான முறையில் படம் பிடித்துக் காட்டியது 'விரல்' சிறுகதை!
சென்னை—5. எஸ். சம்பத்குமார்.

● மாணவர் திரு. து. முத்துகுமாரின் 'புரிந்து கொள்ள முடியாதவர்கள்' சிறுகதை வெரி நைஸ்.
பாண்டிச்சேரி—8. தெ. நாராயணமூர்த்தி

● வீணை பாலசந்தர் பற்றிய குராகபதில் பார்த்தேன். குமுதம் வாயிலாக சுவாதித் திருநாள் மகாராஜாவை மிகவும் இழிவுபடுத்தியிருக்கிறார் பாலசந்தர். மகாராஜா சின்ன வயதிலேயே பல மொழிகளிலும் பாண்டித்யம் பெற்ற மேதை. பக்திமான். சிறந்த இசைக் கலைஞர்களைத் தம் ஆஸ்தான வித்வான்களாகக் கௌரவித்து இசைக் கலையை வளர்த்தவர். தாமும் சிறந்த ஸ்தோத்திரங்களையும், காவியங்களையும், கிருதிகளையும் படைத்திருக்கிறார்.

கவிதைகளையோ, நாவல்களையோ படிக்கும்போதே இது இன்னாருடைய பாணி என்று சொல்லி விடுகிறோம். அப்படிப்பார்க்கையில் ஸ்ரீ சுவாதித் திருநாள் கிருதி மாலையிலுள்ள அனைத்துப் பாடல்களும் ஒருவருடைய கற்பனையிலேயே உருவாகியிருக்கிறது என்பது சந்தேகத்துக்கிடமின்றி விளங்குகிறது. பல பேருடைய பாடல்களைச் சேர்த்துத் தொகுத்த ஒரு தொகுப்பில் ஸாஹித்யங்களில் கற்பனை ஒன்றுக்கொன்று இசைவாக அமையுமா?
மன்னார்குடி, ஜே. சரஸ்வதி.

● ''உடைந்து போகுமா ஒருமைப்பாடு?'' கலந்துரையாடலில் ராஜன்பாபுவின் ஒரே ஒரு வோட்டினுல் ஹிந்தி சாஸனத்தில் முக்கியத்துவம் பெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டவர் ராஜன்பாபு அல்ல; அன்றைய காங்கிரஸ் அக்கிராசனர் பட்டாபி சீதாராமையா அவர்களே.
சென்னை—34. எஸ். நாகேஸ்வரன்.

● 'விருதுகள் விவகார'த்தில் கிருஷ்ண கான சபாவை, விவகாரம் எதுவுமே இல்லாமல் விருது வழங்குகிறது என்பதனுல் தான் விட்டு விட்டீர்களோ?
சென்னை—7. ஆனந்தன்.

(குறிப்பிட்ட கலைஞரின் தகுதியை மட்டுமே கருத்தில் கொண்டு, அந்த வருடத்திய சூடாமணியின் பெயரைப் பதினைந்து பேர் கொண்ட கமிட்டிக்குத் தெரிவிக்கிறார் செயலாளர் ஆர். யக்ஞராமன். எந்தவித ஆட்சேபணையுமின்றி குழு உறுப்பினர்கள் அந்தப் பெயரை அங்கீகரித்து விடுகிறார்கள். இந்தக் குழுவில் இசை-நடனக் கலைஞர் யாரும் கிடையாது. அவர்கள் இருந்தால் தானே விவகாரம் எல்லாம்! -ஆசிரியர்)

ஆரவாரமில்லாத விழா

வட்டமேஜை



CASBS-112-203 TAM

"இந்த வார கல்கிலே துர்கா அருமை யான கதை ஒண்ணு எழுதி இருக்காங்க... வேலை கிடைக்காம, வீட்டுக்குப் பாரமா இருக்கமேன்ற தாழ்வு மனப்பான்மையோட தவிக்கிற ஓர் இளைஞனை யதார்த்தமா வெளிப்படுத்தி, அவனோட பரிதவிப்பைச் சரியாய்ப் புரிஞ்சுக்க உதவியிருக்காங்க. நீங்க அதைப் படிக்கணும் டாக்டர். இன்னிக்கு இருக்குற பெண் எழுத்தாளர்கள்ள இவங்க கிட்டதான் அதிகமான சமுதாய விழிப்புணர்வு இருக்குன்னு நான் நினைக்கறேன்."

"என்ன சொன்னே சாந்தி? பெண் எழுத்தாளர்னு! அப்படின்னு எழுத்தாளர்களைப் பெண், ஆண்னு பிரிச்சுப் பார்க்கற மனசு உனக்கும் இருக்கா? ஐம் ஸர்ப்ரைஸ்ட்! கௌரி கிட்ட நீ இப்படிப் பேசியிருந்தா, அவ்வளவுதான்... எழுத்துக்களோட தரத்தை வேஷ்டி, புடவைகளை அளவு கோலா வச்சி மதிப்பிடற சனத்தனம் அவளுக்குக் கட்டோட பிடிக்காது தெரியுமா?" —

"ஸாரி டாக்டர்... ஏதோ ஒரு வேகத்தில அடையாளம் காட்டணும்ன்ற அவசரத்துல அப்படிக் குறிப்பிட்டேனே தவிர, எந்த எழுத்துக்களையும் படிக்கறப்போ, இதை எழுதினது ஆணா, பெண்ணான்ற மஞ்சக் கண்ணாடியை நான் மாட்டிக்கறதில்லே... ப்ளீஸ் பிலீவ் மீ..."

"குட்... உன் மாதிரி தான் நானும் ஒருநாள் யோசிக்காம பெண் எழுத்தாளர்னு சொல்லப் போய், அன்னிக்குக் கௌரி கிட்ட சரியா வாங்கிக் கட்டிக்கிட்டேன். இதே போல, (நீனா:) பெயரைச் சில பேர் அனு



வசியமா பெரிசு படுத்தறதும் கௌரிக்குப் பிடிக்காத விஷயம். ஒரு சமயம் ஒரு விமர்சகர். 'பெண் பெயர்ல எழுதும் ஆண்க ளெல்லாம் கோழைகள்'னு சொன்னதும், பத்து பேர் நடுவுல கௌரி அவா கிட்ட சண்டை போட்டுட்டா... அதெப்படி ஒட்டு மொத்தமா இப்படி ஜெனரலைஸ் பண்ண லாம்? பேர்ல என்ன இருக்கு? மற்றவர் கிட்டேயிருந்து பிரிச்சுக் காட்டற அடை யாளமா பயன்பட்றதானே பேர் தேவைப் படுது! இயற்கையிலேயே இரு பாலர்களுக் கும் வைக்கிற பாபு, ரத்தினம், மணின்ற பேர்ல ஒருத்தர் எழுதினா அதை எழுதினவர் ஆண்னு புரிஞ்சிப்பீங்களா? இல்லே பெண் ணுன்னு பிரிப்பீங்களா? லக்ஷ்மிநாராயணன், கௌரிசங்கர், சீதாராமன் இப்படிப் பேர் இருக்கறவங்க எல்லாரும் உங்களைப் பொறுத்த வரை கோழைங்கதானு'ன்னு ஆளைத் திணற அடிச்சிட்டா. விமர்சகர் மென்று விழுங்கித் தவிச்சது தான் மிச்சம்..''

சாந்தி கையிலிருந்த டீக் கோப்பையை வைத்துவிட்டு முன்னால் சாய்ந்து உட் கார்ந்து கண்கள் ஜொலிக்க, பாலாஜியை ஏறிட்டாள்.

''க்ரேட்! மேடம் கிட்ட எனக்குப் பிடிச்ச பல விஷயங்களில் இப்படி வேஷம்போடாம இருக்கற குணமும் ஒண்ணு டாக்டர். சுத்தி இருக்கறவங்க என்ன நினைப்பாங்களோன்ற அனாவசியப் பயம் இல்லாம தன் தெளி வான சிந்தனையை வெளிப்படுத்த அவங்க தயங்கவே மாட்டாங்க, இல்லே?''—

''நூத்துக்கு நூறு சரி... வேஷம் போட றதும் கௌரிக்குப் பிடிக்காது; வேஷம் போடறவங்களையும் அவளால சகிக்க முடியாது. அரசியல்வாதி நண்பர் ஒருவர் எப்பப் பாரு சினிமாக்காரங்களைக் குத்தம் சொல்லிகிட்டே இருப்பாரு. 'வேஷம் போடறவங்க; உண்மையா இருக்கத் தெரி யாதவங்க. பொ இடங்களுக்குச் சாதா ரணமா வந்தாக்கூட கவர்ச்சி குறைஞ்சிடும்னு மேக் அப் போட்டுக்கிட்டு வருவாங்க. திரைல வேஷம் கட்டற மாதிரி வாழ்க்கை லேயும் வேஷம் போட்டு, உண்மையா இல் லாம மக்களை ஏமாத்தறாங்க' ன்னு — நாலு பேர் நடுவுல கன்னாபின்னான்னு பேசுவார். இந்தப் பழக்கம் கௌரிக்கு அடியோட பிடிக்காது. 'யார் தான் கவர்ச்சியா இருக்க ணும்னு நினைக்கறதில்லே! பளிச்சினு உடுத்தி அலங்கரிச்சிக்கணும், அட்ராக்டிவா இருக்க



சிவசங்கரி

னும்னு எல்லாரும் நினைக்கறது இயற்கையானதுதானே! உங்க மனைவி பச்சை புடவைக்கு நீல ஜாக்கெட் போடுவாங்களா? வேஷ்டி மேல கோட்டைப் போட்டுகிட்டு நீங்க வெளில வருவீங்களா? என்றதும் நண்பருக்கு ஏக்கச்சக்க கோபம். "பண்புக்காக நாம ட்ரெஸ் பண்ணிக்கறதும், ஷோவுக்காக அவங்க அலங்கரிச்சுக்கறதும் எப்படி ஒண்ணாகும்! புரிஞ்சிக்காம பேசறீங்களே!"ன்னு பெரிசா சத்தம் போட்டார்...

சற்று மௌனமா இருந்த கௌரி மெதுவா "ஐம் ஸாரி ஸார் — தலை முடி நரை தெரியக் கூடாதுன்னு தலைக்கும், என் மீசைக்கும் கூட சாயம் போட்டு, இளமையா, கவர்ச்சியா இருக்க முயற்சிக்கும் நீங்க இப்படிப் பேசறது வியப்பா இருக்கு! உங்களுக்கு ஒரு அளவுகோல், மத்தவங்களுக்கு இன்னொன்றா? தனிப்பட்ட விரோதத்தோட, குறிப்பிட்ட ஒரு வட்டத்தையே திரும்பத் திரும்பத் தாக்கற நீங்கதான் எங்க கண்ணுக்கு வேஷதாரியாத் தெரியறீங்க"ன்னு சொன்னதும் கத்தி இருக்கறவங்க அசந்து போயிட்டாங்க."

சாந்தி குழந்தையின் ஆர்வத்துடன் கைகளைத் தட்டினாள்.

"ஆயிரம் சொன்னாலும் மேடம், மேடம் தான். என்ன குணம், என்ன புத்தி.... ஷி வாஸ் ரியலி க்ரேட் டாக்டர்..."

பாலாஜி வருத்தத்தோடு புன்னகைத்தார்.

"அத்தனை உசத்தியையும், இருவது வருஷம் கூடவே வைச்சி அனுப்பிச்சிட்டு இழந்ததாலதான் சூன்யமும், வலியும் அதிகமா இருக்கு."—

சாந்தி உதட்டைக் கடித்தாள்.

"ஐம் ஸாரி டாக்டர்" என்று முனகினாள்.

புடவையை நீவி விட்டாள்.

"சூடா இன்னொரு கப் டீ சாப்பிடறீங்களா டாக்டர்?"—

"ப்ளீஸ்"—

எழுந்து உள்ளே போனாள்.

பத்து, பதினைந்து நாட்களாக இது ஒரு புதுப் பழக்கம்.

மாலையில் வேலைகள் முடிந்ததும், வீட்டுக்கு டாக்டருடன் வந்து புல்வெளியில் க்ராஸ்வேர்ட் பூர்த்தி செய்தோ ஸ்க்ராபல்ஸ் விளையாடியோ, புத்தகங்களை விமர்சித்தோ ஒரு மணி நேரத்தைக் கழித்து விட்டு வீட்டுக்குப் போகும் பழக்கம்.

சமையல் கட்டில் சன்னக் குரலில் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்த ருக்மிணியம்மாவும், ரங்கனும் இவளைக் கண்டதும் பேச்சை அவசரமாய் நிறுத்தி விட்டு விழித்தார்கள்.

"டாக்டருக்கு இன்னொரு கப் டீ வேணுமாம், ருக்மணிம்மா..."

"அனுப்பறேன்."

ருக்மணிம்மாவின் முகத்தில் கொஞ்சம் கடுமை காணப்பட்ட மாதிரி தெரிய என்ன காரணம் என்று யோசித்துக் கொண்டே வாசலுக்கு வந்தவள், டாக்டருடன் ஸ்க்ராபிள்ஸ் ஆட உட்கார்ந்ததும் அதுபற்றிச் சுத்தமாக மறந்து போனாள்.

அடுத்து வந்த நாட்களில் யார் முதலில் குறுக்கெழுத்து புதிரை முடிப்பது என்ற போட்டி வரத் துவங்க, டாக்டர் ஆபரேஷன் தியேட்டரில் இருந்த நாழிகையில், மண்டையை உடைத்துக் கொண்டு சாந்தி புதிரைப் பூர்த்தி செய்தாள் என்றால், அவள் தனக்கு முன்பாகப் போட்டு விடுவதை முறிக்கவென, காலையில் அரைமணி முன்னால் எழுந்து பேப்பர் வந்த கையோடு க்ராஸ் வேர்டைப்போட பாலாஜி முனைந்தார்.

ஒரு சில நாட்கள் மதியம் பாலாஜியின் வற்புறுத்தலுக்குப் பணிந்து சாந்தி தன் தயிர்சாத டப்பாவை அப்படியே வைத்து விட்டு வீட்டுக்கு வந்து டாக்டரோடு அமர்ந்து உணவு உட்கொண்டாள்.

அப்படிச் சாப்பிட்ட ஒருநாளில்தான் வருகிற செவ்வாய்க்கிழமை கௌரியின் பிறந்த நாள் என்பதை பாலாஜி வெளிப்படுத்தினார்.

"நாற்பத்தி மூணு! சாகிற வயசா இது சாந்தி?"—

பிசைந்த சோற்றை அளைந்தபடி அவர் பேச, வாய்க்குக் கொண்டு போன கவளத்தைச் சாந்தி கீழே போட்டாள்.

"பிறந்த நாளைத் தடபுடலா கொண்டாடறதுல கௌரிக்கு நம்பிக்கை இல்லே..... வழக்கமா காலைல கோவிலுக்குப் போவோம். முதியோர் இல்லத்துலே வடை, பாயசத்தோடு சாப்பாடு போடுவோம். அவ்வளவுதான். இந்த முறை இன்னும் விசேஷமா ஏதாவது செய்யணும் போல இருக்கு.... ஆனா, என்னன்னுதான் புரியலே..."

"நான் ஒண்ணு சொல்லட்டுமா, டாக்டர்?"

"ம்?"—

"அன்னிக்கு செய்யற ஆபரேஷன்பூராவையும் இலவசமா செஞ்சிட்டா?"

"விளக்கமாச் சொல்லு."—

"வாரத்துல நாலு நாளைக்குத் தினம் ஒண்ணு ஏழைக்கு இலவச ஆபரேஷன் செய்யறதுக்குப் பதிலா, செவ்வாய் அன்னிக்கு ஏழைகளா தேர்ந்தெடுத்து, அத்தனை பேருக்கும் காசு வாங்காம அறுவைச் சிகிச்சை பண்ணக் கூடாதா டாக்டர்?"—

பாலாஜி இடக் கையால் மேஜையில் தட்டினார்.

"ஃபெண்டாஸ்டிக்... அப்படியே அன்னிக்குப் பார்க்கற கன்ஸல்டேஷன் அத்தனைக்கும் பணம் வாங்காம இருந்திடறேன் எப்படி?"—

சாந்தியின் கண்கள் பனித்துப் போய்ப் பளபளத்தன. தொண்டையில் என்னமோ நம நம என்றதில் பதில் கூறத் தெரியாமல் போயிற்று.

"செவ்வாய்க் கிழமைக்கு இன்னும் சரியா எட்டு நாள் இருக்கு. உடனடியா ஆபரேஷன் தேவைப்படற பேஷண்டுகளின் லிஸ்ட் எடு... நாலஞ்சுக்கு மேலே போனா கூட பரவாயில்லே. அன்னிக்குக் கூடுமான வரையில் பெரிய மனுஷங்க கன்ஸல்டேஷன் எதுவும் வேணாம். சம்பத்தும், அந்தோணி மத்தவங்ககிட்டச் சொல்லி, அவங்களுக்குத் தெரிஞ்ச ஏழைங்கள்ல யார் யாருக்கு வைத்தியப் பரிசோதனை தேவைப்படுதோ அவங்க எல்லோரையும் வரச் சொல்லு. ராத்திரி



சென்னை நகர விற்பனை நிலையம்
50, ஹென்ஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-600017

பத்தாவதும் சரி, ... ஸி எவ்ரி ஒன். இனிமே ஒவ்வொரு வருஷமும் கௌரி ... பிறந்தநாள், இறந்தநாளே இப்படியே ஆக்க... பூர்வமா தொடர்ந்து செஞ்சா என்ன? வாட்டு டு யு ஸே?''

திட்டமிட்டபடி அடுத்த செவ்வாய்அன்று பைசா பணம் பெறாமல் ஆறு ஏழைகளுக்கு அறுவை சிகிச்சை செய்து, எழுபத்தி நாலு அவுட் பேஷண்ட்களுக்கு ஆலோசனையும் கொடுத்தபோது மனசு பூராவும் ஒருவித நிம்மதி வியாபிப்பதை பாலாஜியால் புரிந்து கொள்ள முடிந்தது.

கௌரிக்கு ரொம்பவும் திருப்தி தரக்கூடிய விஷயத்தை ஆர்ப்பாட்டமில்லாமல் செய்து முடிக்கச் சாந்தி பெருமளவுக்கு உதவியாய் இருக்க பின் அவர்கள் நடுவில் மலர்ந்திருந்த அந்யோன்யம் இன்னும் இறுக, இரண்டு பேரும் சேர்ந்து ஜே. கிருஷ்ணமூர்த்தியின் லெக்சருக்குச் சென்று வந்தார்கள். விக்ரமை அழைத்துக் கொண்டு மெரினாவில் அன்றைய கேஸ்கள், கணக்கு வழக்குகளைப் பற்றிப் பேசியபடி நீளமாய் நடந்தார்கள். சில நாட்களாய் எட்டு மணி வரைக்கும் கூட புல்வெளியில் அமர்ந்து இன்னதுதான் என்று இல்லாமல் தோன்றிய சப்ஜெக்ட்டுகளைப் பற்றிப் பேசித் தீர்த்தார்கள். அப்புறம்...

''சாந்தி, மணி என்ன தெரியுமா?''

''ஆறு பத்து டாக்டர்.''

''தாங்க்யூ... நான் எதுக்காக கேக்கறேன்னு புரியுதா? உட்கார்ந்துகிட்டே இருந்தா எப்படி? கிளம்ப வேணாமா?''—

''எங்க டாக்டர்?''—

''சேம்பர் ம்யூஸிக்ல ஸ்ரீனிவாஸ் மாண்டலின் கச்சேரி இருக்கு. சேர்ந்து போகலாம்னு சொன்னேனே, மறந்துட்டியா.''

''ஓ! அதுவா? வந்து... நீங்க பேஷண்ட் பாத்து முடிச்சப்புறம் நானே சொல்லணும்னு இருந்தேன். இன்னிக்கு என்னால வர முடியாது, ஸாரி டாக்டர்...''

''என்ன திடீர்னு?''

''இல்லே... ஒரே தலைவலி..., ஜுரம் வர மாதிரி இருக்கு. அதான்...''

''முன்னாலேயே சொல்லக் கூடாதா சாந்தி? என்ன மாத்திரை சாப்பிட்டே?..., டிரைவரைக் கூப்பிடு; வீட்டுக்கு கார்ல கொண்டு விடச் சொல்றேன். கிளம்பு...''

மறுநாள் மாலை வீட்டுக்கு வந்த சாந்தி ஸ்கிராபிள்ஸ் ஆட உட்காராமல் தெரிந்தவர் வீட்டில் விசேஷம் என்று காரணத்தைச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

அதற்கும் அடுத்த நாள் கடைக்குப்போக வேண்டும் என்ற சாக்கு.

வாட்ஸ் ஹாபனிங்!

ஏன் சாந்தி திடீரென்று விலகி நிற்கப் பார்க்கிறாள்?

என் மேல் கோபம்?

நான் ஏதாவது கத்தினேன்?

பணம் போதவில்லை?

வீட்டில் பிரச்சினை?

நாலாவது நாள் பொறுமை இழந்து பாலாஜி நோயாளிகளைப் பார்த்து முடித்ததும் அவளை அறைக்குள் அழைத்தார்.

''என்ன விஷயம் சாந்தி?''—



ஹைதராபாத்திலுள்ள மத்திய சிறைச்சாலைக் கைதிகள் தங்களுக்கு வழங்கப்படும் ரேஷன் உணவின் அளவைக் குறைத்து, அதனால் மீதமாகும் பணத்தை 'வெள்ள நிவாரண நிதிக்கு' வழங்கியுள்ளனர்.

ஏ. தங்கமுத்து.

''ஒண்ணுமில்லையே டாக்டர்''—

''என்கிட்ட பொய் சொல்லாதே. நாலு நாளா நீ சரியா இல்லே... வாட்ஸ் ராங்? என் மேல கோபமா?''—

''ச்சேசே.... அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே டாக்டர்''—

''அப்புறம்?''—

''ப்ளீஸ் டாக்டர், எனக்கு வேலை இருக்கு.''—

''டாம் யுவர் வேலை... உட்காரு...என்ன விஷயம்னு சொல்லாட்டி நான் விடப் போறதில்லே.''—

''.......''

''சிட் டௌன் சாந்தி''—

முத்து முத்தாய் மேல் உதட்டில் வியர்வைத் துளிகள் பூக்க உட்கார்ந்தவள் பார்வையைப் பூமியில் படர விட்டாள்.

''சொல்லப் போறியா, இல்லியா?''—

சாந்தி பதில் கூறிய போது குரல் கம்மி இருந்தது.

''பல ... டாக்டர், ரிஸப்ஷனிஸ்ட் பிணைப்பை மட்டும் வைச்சிக்கிட்டு நாம பழகறதுதான் இனி எல்லாத்துக்கும் நல்லதுன்னு நான் நினைக்கறேன் டாக்டர்.''

''அப்படின்னா?''—

''மூணு நாலு மாசமா நண்பர்களா மாறி நெருங்கிப் பழகினது தப்போனு தோணுது டாக்டர்...''

''அப்படின்னா?''—

சாந்தி நாக்கால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள்.

''வெளில நம்மைப் பத்தி க...கண்டபடி பேசறாங்க டாக்டர்.''

''அப்படின்னா?''—

சாந்தி சடக்கென்று பார்வையை நிமிர்த்தினாள். ''ப்ளீஸ் புரிஞ்சிக்கங்க நா... வந்து... நீங்க... ப்ளீஸ் டாக்டர். மேற்கொண்டு ஒண்ணும் கேக்காதீங்க.... ப்ளீஸ்...'' கெஞ்சலாய்க் கெஞ்சிய போது வெடித்துக் கொண்டு எழுந்த அழுகையை அடக்க அவள் ரொம்பவும் பிரயத்தனப்பட வேண்டி இருந்தது. (தொடரும்)

கண்கள்...



இவற்றினால் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்

சிரிப்பு. மகிழ்ச்சி. சினம்.
சிருங்காரம். அத்தனையும்
சிறப்பாக எடுத்தியம்ப
முடியும்... சிங்கார் டிலக்ஸ்
கண்மையுண்ட உங்கள்
கண்களால். கருமைப்
பளபளப்பு மிக்கது.
சிங்கார்—அடடா! எத்தனை
குளுமை... விசேடமான
தயாரிப்பு சிங்கார்
...ஆகவே அத்தனை
அழகு... கண்களுக்கு
எரிச்சல் இல்லாதது.

கண்களுக்கு
எரிச்சல் இல்லாத
சிங்காரின் சிறப்புத்
தயாரிப்பு.



சிங்கார்

டிலக்ஸ் கண்மை

இது ஒன்றே கண்களுக்கு
நலமான கண்மை.

everest/83/SH/179rtm

இது தான் வாழ்க்கை நியதி

கீதா பென்னெட்

"பேரு ராமானுஜம். அவிட்ட நட்சத்திரம். ஒரு அர்ச்சனை பண்ணிடுங்கோ!"

அர்ச்சனைத் தட்டை வாங்கிக்கொண்டு அர்ச்சகர் உள்ளே போனார். ஆண்டாள் கண்களில் பக்தி பெருக மனத்தில் கர்வம் பொங்கக் கைகளைக் கூப்பினாள்.

மறுபடி அர்ச்சகர் நீட்டிய தட்டில் இருந்த கற்பூர ஒளியை ஒற்றிக் கண்களில் வைத்துக் கொண்டு, கைப்பையிலிருந்து ஒரு டலாரைப் போட்டாள்.

"என்னம்மா பிள்ளையாண்டான் பேரிலே அர்ச்சனை? ஏதாவது விசேஷமா?" — ஆண்டாள் அடிக்கடி அங்கு வருவதால் அர்ச்சகருக்கு அவளைத் தெரியும்.

"ஆமாம். இன்னிக்குப் பொறந்தநாள். அதுதான் பெருமாளுக்கு ஒரு அர்ச்சனை பண்ணிடலாம்னு..."— சொன்னவள் கண்களை மூடி அங்கேயே மௌனமாக நின்றாள்.

"கடவுளே! என் மகனுக்கு நிறைய நிறையப் பிறந்த நாட்களைக் கொடு. தகப்பன் இல்லாமல் வளரும் அவன் என்னிடத்தில் இன்று போல் என்றும் அன்பாய் வாழ வழி செய்து கொடு. எங்களை என்றென்றும் பிரிக்காதே..."— என்று உணர்ச்சி வசத்தில் அவள் கண்களில் நீர் வழிந்தது.

பெருமான் பணக்காரர் போலும். அர்ச்சகர் கைகளில் வைரம். பல்லில் தங்கம், கழுத்தில் குண்டுகுண்டான மணிமாலை ருத்ராட்ச சரம். சட்டைபோடாத மார்பு. அர்ச்சகர் மற்றொரு தம்பதிகளிடம் போனார்.


மலைமேல் இருக்கும் இந்த "பிட்ஸ்பர்க்" திருப்பதி வேங்கடாசலபதியைப் பார்க்க நூற்றுக்கணக்கான மைல்களில் இருந்து நிறைய நிறைய இந்தியர்கள் வருவார்கள். அதுவும் வார விடுமுறை என்றால் கேட்கவே வேண்டாம். குழந்தைக்கு ஆண்டு நிறைவு, பெண்ணுக்கு நிச்சயதார்த்தம் என்று வேண்டிக் கொள்பவர்கள் நிறைய.

அர்ச்சகர் இந்தியாவிலிருந்து பூஜை செய்வதற்காகவே வரவழைக்கப்பட்டவர். கோயிலில் கல்யாண மண்டபம் உண்டு. உற்சவங்கள் தவறாமல் நடைபெறும். லட்டு, புளியோதரை என்று இந்தியப் பிரசாதங்களை அமெரிக்கப் பக்தர்களும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

ஆண்டாள் கர்ப்பக் கிருகத்துக்குள் இருக்கும் சிலையைப் பார்த்தாள். அவள் கணவரோடு பத்து வருடங்களுக்கு முன் பிட்ஸ்பர்க் வந்தாள். இங்கே ஒரு பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் விஞ்ஞானத்தில் ரிஸர்ச் செய்ய வந்தவர் ஓர் அமெரிக்கப் பெண்ணோடு கலிபோர்னியா போனவர்தாம். அன்று முதல் அவளும் ராமானுஜமும் தனி. அதன்பின் ஆண்டாள் மிகச் சிரமப்பட்டு இங்குள்ள தென்னிந்தியர்களின் உதவியால் ஓர் இந்திய மளிகைக் கடை ஆரம்பித்தாள்.

கோவிலுக்குப் போகும் கார்கள் மலை இறங்கி வரும்போது அடிவாரத்தில் இருக்கும் அவள் கடையில் நிற்காமல் போகமாட்டா. வார இறுதிகளில் வீட்டில் செய்த போண்டா, பகோடா, இட்லி, சட்னி போன்றவையும் விற்பனையாகும். மளிகைச் சாமான்களுடன் நியூயார்க்கில் இருந்து வரவழைக்கப்பட்ட புடவைகளும் கிடைக்கும்.

ஏதோ சுமாராய் லாபம் வருகிறது. இத்தனை நாள் அவள் மகன் ராமானுஜமும் கூட இருந்தான். இந்த ஒரு வருடமாகத்தான் பக்கத்தில் இருக்கும் கல்லூரியில் படிக்க அங்கேயே டார்மிடோரியில் தங்குகிறான். அவன் தான் அவளுக்கு எல்லாம். கணவர் விட்டுப் பிரிந்தபின் உயிரை மாய்த்துக் கொள்வோமா என்று நினைத்தது எத்தனை முறை? அப்போதெல்லாம் ராமா



னுஜம் முகத்தைப் பார்த்து மட்டுமே தன்னைத் தேற்றிக் கொள்வாள்.

''இந்த இளம் சிறுவனை நல்ல முறையில் வளர்ப்பேன். இவனுக்காக மட்டுமே வாழ்வேன்'' — எத்தனையோ எதிர் நீச்சல் போட வேண்டிய கட்டங்கள்! அவனுக்கு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என்பதாலேயே அவள் இந்தியாவிற்குத் திரும்பிப் போகவில்லை.

ராமானுஜத்திற்குப் பிறந்த நாள். அவன் தன் அம்மா வீட்டிற்குப் போல தாய்த்தான் இருந்தான். ஆனால் அதற்குள் ஒரு முக்கியமான காரியம் நடக்க வேண்டியிருக்கிறது.

அவன் டார்மிடோரியில் தன் அறையில் தன் படுக்கையில் மல்லாந்து படுத்திருந்தான். அந்த அறை பக்கா மாணவன் அறை. சாமான்கள் எங்கும் நிறைந்து கிடந்தன. படுக்கையை ஒட்டியிருந்த மேஜைமேல் பாடப் புத்தகம் பிரிக்கப்படாமல் கிடந்தது.

கதவு தட்டப்பட்டபோது 'கம் இன். தி டோர் ஈஸ் ஓப்பன்' என்றான்.

உள்ளே வந்தவளுக்கு அவன் வயதுதான். அவனது வகுப்பில் படிக்கும் மாணவி அவள்.

''ஹாய் கேட்டி'' என்றான் ராமானுஜம்.

''என்ன இன்னும் படுத்திருக்கே. எழுந்திரு. என்னை டின்னருக்குக் கூட்டிட்டுப் போறேன்னு சொன்னியே.''

அவன் கடகடவென்று சிரித்தான். கேட்டி அவனருகில் வந்தாள். தலைக்குப் பின்னால் கைகளை மடக்கித் தலையணையாய் வைத்துப் படுத்திருப்பவனின் கண்களை உற்று நோக்கினாள்.

''மை காட். யூ ஆர் ஸ்டோன்ட் அவுட் ஆஃப் யுவர் மைண்ட்'' — சொன்ன கேட்டிக்கு வயது பத்தொன்பது இருக்கும். சிவப்பு நிறக் கூந்தல். உண்மையான சிவப்பா, சாயமா என்று அவளுக்கும் அவளுடைய ஹேர் டிரஸ்ஸருக்கும் மட்டுமே தெரியும். அவள் முகம் சிறிதும் மேக்கப் இல்லாமல் தூய்மையாக இருந்தது. பற்கள் உள்ளே அமுங்கப் போட்டிருக்கும் ப்ரேஸஸ் சில சமயங்களில் ராமானுஜத்துக்குத் தடங்கலாய் இருந்ததுண்டு. அவள் அவனுடைய கேர்ள் ஃப்ரெண்டு.

''கம் ஹியர் பேபி. லெட்ஸ் மேச் லவ்.''



கேட்டி தன்னை விடுவித்துக் கொண்டாள். "வா ராம். இன்னிக்கு உனக்குப் பிறந்தநாள். உங்கம்மா உன்னைச் சாப்பிட கூப்பிடுருக்கான்னு சொன்னே. உங்க இந்தியன் சாப்பாடு சாப்பிடணும்னு எவ்வளவு ஆசையாயிருக்கேன். கமான். எனக்குப் பசிக்குது" — அவள் சிணுங்கினாள்.

ராமானுஜம் எழுந்திருக்கவில்லை.

"கேட்டி. இன்னிக்கு நாம் போக முடியாது. ஜானகன் கிட்டே ஒரு டீல் பண்றேன்னு ப்ராமிஸ் பண்ணிட்டேன். கொண்டு போய்க் கொடுக்கணும்"

"ராம்... பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான். என்னிக்காவது மாட்டிக்கப் போறே. உன் அம்மா உன்கிட்டே உயிரையே வச்சிருக்கான்னு சொல்றே. விஷயம் தெரிந்தால் அவள் எவ்வளவு மனம் உடைந்து போவாள்?"

"டோண்ட் ப்ரீச்.. நான் என்ன செய்யறேன்னு எனக்குத் தெரியும். லீவ் மீ அலோன்."

கேட்டி பெருமூச்செறிந்தாள். ஏன் இவன் இந்த வழியில் போகிறான்? அன்பு தரும் அம்மா இருந்தாலும் அதட்டி வளர்க்க அப்பா இல்லாததால் ஏற்பட்ட பழக்கமா இது?

ஒருகணம் கேட்டியின் மனம் ராமானுஜத்தின் அம்மாவுக்காக வருந்தியது.

தன் ஃபோக்ஸ்வாகனில் அர்ச்சனைச் சாமான்களை வைத்த ஆண்டாளின் மனமெல்லாம் வீட்டுக்குச் சீக்கிரம் போய்ச் சேர வேண்டும் என்பதிலேயே குறியாய் இருந்தது. ராமானுஜத்தின் பிறந்த நாளுக்காக ஸ்பெஷல் விருந்து. கூட கேட்டி என்ற பெண்ணையும் கூட்டி வரப் போவதாகச் சொல்லியிருக்கிறான். அவள் அவன் வகுப்பில் படிப்பவளாம். நல்ல பெண்ணாம். அவளுடைய தந்தை பீஸ் கோரில் — இந்தியாவில் — சிம்லாவில் சில வருடங்கள் இருந்திருக்கிறாராம்.

ஆண்டாள் இன்னும் கொஞ்சம் ஆக்ஸிலரேட்டரை அழுத்தினாள். மனத்தில், செய்ய வேண்டிய வேலைகள் பட்டியலாய் நீண்டது. வீட்டிற்குப் போனவுடனே முதலில் "வாக்யூம்" பண்ண வேண்டும். நேற்றைக்கே பண்ணி ப்ரிஜ்ஜில் வைத்திருக்கும் அவியலை அடி பிடிக்காமல் சூடப் பண்ண வேண்டும்...

இப்போது ஸ்பீடாமீட்டர் முள் அறுபத்தைந்து மைலைக் காண்பித்தது.

ராமானுஜம் இன்னொரு முறை டெலிபோனின் காதைப் பிடித்துத் தூக்கி மார்பில் வைத்து விரலால் எண்களைச் சுழற்றினான். மறுபக்கம் மணியடித்துக் கொண்டேயிருந்தது.

"ஹெல்... இன்னும் வீட்டுக்கு வரலே. கடையிலும் இல்லே" — டக்கென்று வைத்தான்.

எழுந்து ஒரு துண்டுப் பேப்பரில் நம்பரை எழுதிக் கேட்டியிடம் கொடுத்தான்.

"கேட்டி! இதுதான் என்மதரோட டெலிபோன் நம்பர். கூப்பிட்டு நாம் வரலேன்னு சொல்றியா! நான் போகணும்."

"நான் சொல்றதைக் கேள் ராம். வேண்டாம் போகாதே. மாட்டிப்பே."

"டோண்ட் பீ சிக்கன். என்ன பண்ணணும்னு எனக்குத் தெரியும்" — அவளை உதறி விட்டு மேஜை அருகே சென்று டிராயரைத் திறந்தான். ப்ளாஸ்டிக் பைகளில் கச்சிதமாய்க் கட்டி வைக்கப்பட்டவைகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டான்.

"ஸீ யூ..." — என்று அவன் வெளியே நடந்த போது. "இரு நானும் வரேன்" — என்று கேட்டி அவனைத் தொடர்ந்தாள்.

"வேண்டாம். இங்கேயிருந்து என் அம்மாவைக் கூப்பிட்டுச் சொல்லு. நாம் அம்மா வீட்டுக்குப் போகாட்டா என்ன? இன்னிக்கு ராத்திரி உனக்கு நான் விருந்து தரேன்" — என்று அவளைப் பார்த்து ஒரு கண்ணை மட்டும் மூடிச் சிமிட்டினான்.


அவன் மேலே நடக்க, கேட்டி மறுபடி அவன் அறைக்கே வந்தாள். ஏன் இப்படிக் கெட்டலைகிறான்? ஜானகனைத்தான் சொல்ல வேண்டும். ராமானுஜத்தை எவ்வளவு தூரம் மாற்றியிருக்கிறான்? இப்போதெல்லாம் அவனைச் சுயநினைவோடு பார்ப்பதே அரிதாயிருக்கிறது. கஞ்சா போதாது என்று எல்.எஸ்.டி. வேறு. இந்தப் பழக்கமெல்லாம் வந்தால் சீக்கிரம் போகாது என்று எத்தனை முறை சொல்லியாகிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாய் 'அடிக்ட்' ஆகி இப்போது அது இல்லாவிட்டால் முடியாது என்ற நிலைக்கு வந்து விட்டான். அதோடு மட்டுமில்லை. ஜானகனுக்கும், கல்லூரியில் இந்தப் பழக்கம் உள்ள பல மாணவர்களுக்கும் நடுவில் அவன் தான் டீலர் (Dealer). விலை அதிகமான போதைப் பொருட்களை வாங்கப் பணம் வேண்டுமே! அம்மா கொடுக்கும் மாத அலவன்ஸ் எப்படிப் போதும்? அதற்குத்தான் இந்த நடு டீலர் வேலை.

கேட்டி பெருமூச்செறிந்தாள். ஆண்டாளின் நம்பரை டெலிபோனில் சுழற்றிவிட்டு எதிர்ப்பக்கப் பதிலுக்குக் காத்திருந்தாள்.

ஆண்டாளுக்கு மிக அவசரம்தான். அவள் ஃபோக்ஸ் வாகனின் பின்னால் நெருங்கிய கார் அவளை வேறு லேனுக்கு

ஏப்ரல் ஒன்றும் தேதி முட்டாள்கள் தினம் என்பது பலருக்குத் தெரியும். அதே தினம் ஸ்காட்லாண்டில் குயில் தினமாகவும் பிரான்சில் மீன் தினமாகவும், ஜப்பானில் பொம்மை தினமாகவும் கொண்டாடப்படுகிறது! —மஞ்சுதேவன்.




டு-இன்-ஒன்
போர்ஹென்ஸ்
டபிள்–ஆக்ஷன்
டூத்ப்ரஷ் உங்கள்
பற்களை சுத்தம்
செய்யும்போதே
ஈறுகளையும்
தேய்த்துக்
கொடுக்கிறது.
பற்களை சுத்தம்
செய்யும்
உறுதியான
நீலக் குச்சங்கள்
ஈறுகளைத்
தேய்த்துக்
கொடுக்கும்
மென்மையான
வெள்ளைக்
குச்சங்கள்
போர்ஹென்ஸ்
டு-இன்-ஒன்
டூத்ப்ரஷ்
அடல்ட்
மற்றும் ஜூனியர்

மாறும்படி நெருக்கியது. அது மூன்று லேன் (Lane) உள்ள ஹைவே. சீரான வேகத்தில் பறக்கும் கார்கள் இடதுபுறம் மாறி இன்னும் வேகமாகப் போகும் கார்களுக்கு வழிவிடும். பழக்கம் காரணமாகக் கண் பார்த்து மூளை இயங்கித் தானும் லேன் மாறிவிடலாம். அதேபோல் அவள் இடது பக்கக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டு இடது சாரிக்கு மாற ஸ்டியரிங்கைத் திருப்பினாள். லேசான மழையும், காரின் ஹெட்லைட்டைப் போடலாமா என்று யோசிக்க வைக்கும் அரையிருட்டும், வளைந்த சாலையும், ராமானுஜத்தைப் பற்றிய நினைத்துக் கொண்டிருந்த மனமும் இடது லேனில் வந்து கொண்டிருந்த காரை அவள் மூளையில் பதிய வைக்கவில்லை.

அவள் இடது லேனில் மாற, அந்தக் காரும் அறுபது மைலில் அதே லேனில் வர இரண்டு கார்களும் கண் இமைக்கும் நேரத்தில் —

மோதின. கண்ணாடிகள் சிதறின. பின்னால் வந்து கொண்டிருந்த போக்குவரத்து ஒரே கணத்தில் ஸ்தம்பித்து நின்றது.

போலீஸ் வண்டிகளும், ஆம்புலன்ஸ் வண்டிகளும் நொடிகளில் தலையில் நீலம், பச்சை, சிவப்பு, விளக்குகள் சுற்றி சுற்றிவர 'ஊய் ஊய்' என்று விசிலடித்துக் கொண்டு வந்தன.


ஒரு ஆம்புலன்'ஸ் ஆண்டாளின் வண்டியிடம் நின்றது. மெஷின்கள் போல மிக விரைவாய் இயங்கிய சிப்பந்திகள் அவளை ஸ்ட்ரெச்சரில் ஏற்றினார்கள். தலையிலிருந்து வழிந்த ரத்தம் அவளது புடவையை அதே நிறத்திற்கு மாற்றியிருந்தது. ஆம்புலன்ஸ் தலை விளக்குகள் மறுபடி சுழல, மற்றக் கார்கள் மரியாதையாய் ஒதுங்கின.

கேட்டி டெலிபோனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ராமானுஜத்திற்கு ஏதும் கெடுதலாய் நடக்கக் கூடாதே என்று என்றைக்குமில்லாமல் ஏன் மனம் அடித்துக் கொள்கிறது? அவள் யோசித்தாள். சிறு வயதில் அப்பா தன்னை விட்டுவிட்டுப்போன கோபம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுய இரக்கமாக மாறி அதை மறக்க வேண்டும் என்று போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருக்கிறான். அவனை எப்படித் திருத்துவது?

ஆம்புலன்ஸ் ஜெனரல் ஆஸ்பத்திரி வாசலில் நின்றது. ஸ்டிரெச்சரில் இருந்த இந்திய'' பெண்மணியை உடனடியாக எமர்ஜென்ஸி வார்டுக்குத் தள்ளிக் கொண்டு போனவுடன் டாக்டர்கள் பரபரவென்று சூழ்ந்து கொண்டார்கள்.

''லுக்ஸ் லைக் அன் இண்டியன் லேடி. அவளுடைய ஹேண்ட் பேக்கில் ஐடென்டிஃபிகேஷன் இருக்கிறதா பார்'' — ஒரு நர்ஸ் அவளது கைப்பையைப் பார்க்க, ரத்தம் ஏற்ற ஒரு நர்ஸ் ஏற்பாடு செய்தாள். ஒரு டாக்டர் மூளையில் நல்ல அடி என்று முடிவு பண்ணினார்.

போய்விடலாமா? கேட்டி எழுந்தாள். டெலிபோன் ஒலித்தது.



அவர்: ஏன் காரைத் தள்ளிக்கிட்டுப் போறீங்க...? ரிப்பேரா?
இவர்: (எரிச்சலில்).. சேச்சே அதெல்லாம் ஒண்ணுமில்லே, கார் வாக்கிங் போகணும்னு சொல்லிச்சி... அதான் கூட்டிக்கிட்டுப் போயிட்டிருக்கேன்...
—சிவலட்சுமி.

''ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து நர்ஸ் பேசுகிறேன். மிஸ்டர் ராமானுஜம் ராகவனுடன் பேசலாமா?''

''அவன் இல்லை. என்ன விஷயம்?''

''ஆண்டாள் ராகவன் என்னும் இந்தியப் பெண்மணி கார் ஆக்ஸிடெண்டில் அடிபட்டு இங்கே எமர்ஜென்ஸியில் இருக்கிறாள்.''

''சீரியஸான விஷயமா? நல்ல அடியா?''

''ஐ ஆம் ஸாரி டு ஸே... ஷீ ஈஸ் இன் எ கோமா! மண்டையில் நல்ல அடி. எப்போது நினைவுக்கு வருவாள் என்று சொல்ல முடியாது. வராமலும் போகலாம். ஐ ஆம் ஸாரி அகெய்ன். அவளுடைய மகனிடம் பக்குவமாய் விஷயத்தைச் சொல்லு. தயவு செய்து உடனே ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்'' — போன் வைக்கப்பட்டது.

கேட்டி ஸ்தம்பித்து அமர்ந்தாள். ஆண்டாள் நிறையக் கடவுள் பக்தியுள்ளவள் என்று ராமானுஜம் சொல்லியிருக்கிறான். அவளுக்கு ஏன் இந்தக் கடும் தண்டனை?

டெலிபோன் மறுபடி உயிர் பெற்றது.

''ஹலோ...'' — கேட்டியின் குரலில் உயிர் இல்லை.

''கேட்டி... திஸ் ஈஸ் ராமானுஜம். நான் போலீஸ் ஸ்டேஷனில் லாக்கப்பில் இருக்கிறேன். என் அம்மா நம்பரைக் கூப்பிட்டேன். வீட்டில் இல்லை. எந்தப் பாவியோ என்னைக் காட்டிக் கொடுத்திருக்கிறான்...''

ராமானுஜம் அதன் பின் பேசியது எதுவும் கேட்டியின் காதில் விழவில்லை. சில விநாடிகளில் மறுமுனை துண்டிக்கப்பட்ட ஒலிவந்த போதும் அவள் ரிஸீவரைக் கீழே வைக்காமல் வெறித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

நான் சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். கடவுள் ஆண்டாளுக்குக் கொடுத்தது கடும் தண்டனைதானா அல்லது வரப்பிரசாதமா? மகன் போலீஸில் அகப்பட்டான் என்ற செய்தியைக் கேட்கக் கூடாது என்பதற்காக அவள் விடுபடாத தூக்கத்தில் ஆழ்ந்து போனாளா? இந்த நியதிகளை யார் வரையறுக்கிறார்கள்? கேட்டிக்குப் புரியவில்லை.



✖ உணர்ச்சி வசப்படுகிறார் டாக்டர் விஸார்!

ஒரு தித்திப்பு செய்தி

டாக்டர். இ.எஸ்.எஸ். இராமன்

'முன்பைவிட நம் நாட்டில் மக்கள் மிகவும் இனிக்கிறார்கள்!' என்ற வாசகம் உண்மையில் சுவாரஸ்யமானதே. முக்கிய பதவியில் இருக்கும் யாரை விசாரித்தாலும் சர்க்கரை வியாதி தமக்கு இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டு விடுகிறார்கள். மேல் மட்ட வியாதி என்று ஒரு காலத்தில் வருணிக்கப்பட்ட வியாதி இன்று அடித் தளம், நடுத்தரம், என்றெல்லாம் கூட வேரூன்றிப் போயிருக்கிறது.

இப்படிப் பரவிப் பெருகி வரும் சர்க்கரை வியாதியஸ்தர்களுக்காகச் சென்னை நகரில் ஓர் ஆராய்ச்சிக் கழகம் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியில் செயல்பட்டு வருகிறது. சுமார் பத்து நோயாளிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பிரிவு இன்று வருடத்திற்கு இரண்டு லட்சம் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. ஒவ்வொரு 'கன்ஸல்டேஷ'னுக்கும் ஐம்பது, நூறு என்று 'அழ' வேண்டியிருக்கிற சென்னை மாநகரில் வாழ்நாள் முழுவதும் தொடரக் கூடிய நீரிழிவிற்கு நடுத்தர, கீழ்த்தள மக்கள் எங்கே போவது?

இதற்காகவே ஒரு தனிப் பிரிவை ஆரம்பித்துத் தம் சொந்த நிறுவனம் மாதிரி வளர்த்து வந்திருக்கிறார் இதன் தந்தை என்று போற்றப்படுபவரும், மருத்துவப் பேராசிரியருமான டாக்டர் விஸார் அஹமத் அவர்கள்.

கே. எம். சி. யில் இந்தப் பிரிவில் நுழையும்போது ஏதோ ஒரு தனியார் மருத்துவமனையில் நுழைந்த மாதிரி ஓர் உணர்வு. அவ்வளவு சுத்தம். புறநோயாளிகள் ரிஜிஸ்ட்ரேஷன் – பழைய நோயாளிகளின் பார்வையிடம் – 'வழக்கமான' ஊசி போடும் பிரிவு – ஈ. சி. ஜி. – எக்ஸ்ரே – ரத்தப் பரிசோதனை – எல்லாமே ஒரே பார்வையில் கச்சிதமாக இருக்கிறது. '45–க்குப் போ' 85–க்குப் போ, 45–க்கு மறுபடி போ என்று சில ஆஸ்பத்திரிகளில் நடக்கும் 'ரன்னிங் ரேஸ்' இங்கில்லை.

சாதாரண 'கிளினிக்'காக ஆரம்பிக்கப் பட்ட இப்பிரிவு பதினேழு லட்ச ரூபாய் செலவில் (முதல் கட்டம் தானும்; முடிக்கப் பெறும்போது ஒரு கோடி ஆகுமாம்!) ஒரு தனி ஆராய்ச்சி நிறுவனமாக மாறக் காரணம் ஒரு பத்திரிகையாளர் தான் என்று கேள்விப்பட்டதும் எனக்கு மேலும் சுவாரஸ்யம் தட்டியது. விசாரித்ததில் (நிரு!) அது உண்மை என்றும் தெரிந்தது.

'மெயில்' பத்திரிகையில் ஏதோ ஒரு செய்தியைப் பிரசுரிக்கக் கோரிப் போயிருந்த டாக்டர் விஸாருக்கு அதன் செய்தி ஆசிரியரான சத்தியநாராயணா அறிமுகமாகியிருக்கிறார். அவர் மனைவி சர்க்கரை வியாதிக்காரராக இருந்ததும் ஓர் அனுகூலமானது. அவர் மூலமாகப் பெரும் தனவந்தர்கள் அறிமுகமாகவே, அதைப் பயன்படுத்தி இப்பிரிவை மேம்படுத்த முனைந்து வெற்றியும் பெற்றிருக்கிறார் டாக்டர் விஸார்!

ஆனால் சென்ற அக்டோபரில் இப்பிரிவு கோலாகலமாக ஆரம்பிக்கப்படும் தருணத்தில் ரொம்ப வருத்தத்துடன் சொல்வார்

✖ முதல்வருக்கு மரியாதை



அவர்: 'இதைச் சேவை என்று நினைத்து வளர்க்க உதவிய அந்தப் பத்திரிகையாளரும் சரி, அவர் மனைவியும் சரி இன்று இதைப் பார்க்க உயிரோடு இல்லையே!'

இப்படி அவர் வருத்தப்பட்டாலும் அவர்கள் எல்லா நோயாளிகளையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் புகைப்பட வடிவத்திலே. ஆம். அவர்கள் மறக்கப்படாமல் ஒரு பெரிய புகைப்படத்தில் அப்பிரிவின் பிரதான ஹாலில் புன்சிரிப்போடு மாட்டப்பட்டிருக்கிறார்கள்.

ஆரம்ப விழாவிற்கு வந்திருந்து துவக்கி வைத்த தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். தம் சொந்தப் பொறுப்பிலிருந்து ரூபாய் ஐம்பதாயிரத்தை மேடையிலேயே அளித்திருக்கிறார். அவ்விழாவில் வரவேற்றுப்பேசிய பேராசிரியர் முத்துக் குமாரசாமி, ''போன மாசம் எம். எம். சி. விழாவிலே ரூபாய் ஒரு லட்சத்தை முதல்வர் அவர்கள் நன்கொடையாகத் தந்த போதே நாங்கள் நினைத்துக் கொண்டோம்... இன்று எம். எம். சி., நாளை கே. எம். சி. என்று...'' என்று சூசகமாகச் சொல்ல, அடுத்துப் பேசிய தமிழக முதல்வர், ''நான் சினிமாவில் நடித்துக் கொண்டிருந்தால் இன்னும் அதிகம் தந்திருப்பேன்... என்றால் இப்பொழுது தர முடிந்தது இதுதான்'' என்று சொல்லி ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு 'செக்' ஒன்றை அப்போதே கொடுத்து விட்டார். உடன்இருந்த மத்திய அமைச்சர் பட்டாபிராமராவ் 'செக்'கை தொகை எழுதாமல் 'பிளாங்க்' காய்க் கொடுங்களேன்' என்று வேடிக்கையாகக் கேட்க, முதல்வர், 'இது ஒன்னும் பரீட்சை பேப்பர் இல்லீங்களே!' என்று பதிலுக்கு நகைச்சுவையாகச் சொன்னார். சிறப்பாக அமைந்த அவ்விழாவில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் சார்பிலும் ஒரு பரிசு அளிக்கப்பட்டது! ஒரு பெரிய கடியாரம்! காலத்தை டாக்டர்களுக்கு உணர்த்துவோ, என்னமோ?

மிக நேர்த்தியாக அமைந்திருக்கும் இப்பிரிவுக்கு டாக்டர் அம்பேத்காரின் நினைவாகப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இங்கு வரப் போகும் 'AUTO ANALYSER' கருவியின் விலை பத்துலட்சமாம். ஒரு நிமிட நேரத்தில் பத்து ரிஸல்ட்டுகளைத் தரக் கூடிய இது வேறெங்கும் இதுவரை இல்லை என்பது ஒரு விசேஷம். கொடுத்திருப்பவர் தம் பெயரை வெளியிட விரும்பாத ஒரு செல்வந்தர்!

அருள்வாக்கு

இப்போது வெளிதேசங்களிலெல்லாம் நம்முடைய சங்கீதமும் நாட்டியமும் பரவி வருகிறது. அங்கே யுனிவர்சிட்டிகளில் இவற்றைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். பெரிய பெரிய உலக ஸ்தாபனங்களில் நம்முடைய சங்கீதக் கச்சேரி வைத்துப் புகழ்மாலை சூட்டுகிறார்கள். இதிலே நமக்கு ஒரு ஆறுதல். என்ன ஆறுதலென்றால் ஆதியில் நமக்கு லோகத்தில் எதனால் பெரிய கௌரவம் இருந்ததோ, அந்தப் பரமார்த்திகமான பெருமை இப்போது ரொம்பவும் எடுபட்டுப்போய், மற்ற திலுசிலும் பெருமை இல்லாமல் எல்லா தேசங்களிடமும் நாம் கப்பரை நீட்டுவதாகவும் அதில் போட்டு 'உபசரிப்பவர்களிடமும் நம் ஸ்தானத்துக்கு மீறி 'உபதேசம்' பண்ணி அவர்கள் நம்மை நன்றியில்லாதவர்கள் என்று மட்டமாய் நினைக்கும்படியாகவும் காரியங்கள் நடந்து வருகின்றன. இப்படியிருக்கிற போது நம்முடைய சங்கீத, நாட்டியக்காரர்களை அவர்கள்ரொம்பவும் கொண்டாடி, 'இந்தியாவில் உள்ள இந்தக் கலைகளைப் போல எங்கேயுமில்லை' என்று கற்றுக் கொள்வதற்கு முன் வருவதைப் பார்க்கும்போது 'நாம் பிக்ஷாபாத்திரம் நீட்டுபவர்களாக மட்டுமில்லாமல் அவர்களுக்குப் போடுபவர்களாக இருக்கிற கௌரவம் இது ஒன்றால்தானே நமக்குக்கிடைத்திருக்கிறது' என்று ஆறுதல் ஏற்படுகிறது.

கலை என்பதற்காகவே பரவட்டும். பரப்பட்டும். ஸந்தோஷம் தான். ஆனாலும் ஆதியிலிருந்து இந்தக் கலைகளுக்கு எது லக்ஷியமாயிருந்ததோ, அது மறந்து போகுமாறு விட்டுவிடக் கூடாது. ஈசுவரனிடம் கொண்டு நிறுத்துவதற்காகத்தான் இவை ஏற்பட்டிருக்கின்றன என்ற நினைப்பு போகக் கூடாது. சரபோஜி போன்ற ராஜாக்கள் கேட்டுக் கொண்டால் கூட ராஜஸதஸில் போய்ப் பாடுவதில்லை. 'நிதி வேண்டாம், ஈசுவர ஸந்நிதிதான் வேண்டும்' என்று வைராக்யமாயிருந்த தியாகையர்வாள் போன்ற மஹான்களின் 'ஐடியல்' எப்போதும் நினைவில் இருக்க வேண்டும். சாந்த சௌக்யத்தைத் தானும் அடைந்து, மற்றவர்களும் அடைவிக்கப்பண்ணுவதாகவே காந்தர்வ வேதத்தை உயர்த்தி வைத்துக் காத்துக்கொடுக்க வேண்டும்.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்





○ [illegible]ன காற்று, எது?



○ மௌனம் கலையாதவர்

● பாரதி இளைஞர் சங்கத்தின் 9 நாள் பாரதி விழாவின் தொடக்க நாள். விழாவைத் தொடங்கி வைத்த திரு. மந்திரம் பேசி முடித்ததும் அடுத்த அறைக்குப் போய்க் கதவைச் சாத்திக் கொண்டார். சிறிது நேரம் கழித்துத் திரும்பினார். அடுத்துப் பேசினவரும் பக்கத்து அறைக்குப் போய் விட்டுத் திரும்பினார். ஏறத்தாழ எல்லாப் பேச்சாளர்களும் இப்படிச் செய்யவே சின்ன கொலம்பஸுக்குப் பெரிய சந்தேகம். துப்பறிந்து, திரட்டிய தகவல்: விழா நடந்த அறையில், மழைகாரணமாய், ரேடியோக் காரர்களுக்குச் சிரமங்கள் இருந்ததால், பேச்சாளர்களை அடுத்த அறைக்கு அழைத்துப் போய், மறுபடி பேசச் செய்து, ஒலிப்பதிவு செய்து கொள்ளவே இந்த ஏற்பாடாம்.

● இ. நகரில் ஒரு விழாவில் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் பேசியபோது, லேசாகக் காற்றடிக்கவே, ''என்னடா காற்று இது?'' என்று ஒருவர் கொஞ்சம் உரக்கவே முணுமுணுக்க, டாக்டர் சி. பா. சொன்னார்: ''தெற்கே இருந்து வீசினால் தென்றல், வடக்கிலிருந்து வீசினால் வாடை, கிழக்கிலிருந்து வீசினால் கொண்டல், மேற்கேயிருந்து வீசினால் கோடை''.

● முன்னாள் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு கலந்து கொண்ட ஒரு விழாவில், பேச்சாளர் ஒருவர் 'சத்துணவுத் திட்ட முன்னோடி நெ. து. சு.' என்றார். அடுத்துப் வந்த கவிஞர், ''காமராஜ் முன்னோடி, இவர் சிற்பி'' என்றார். அடுத்து பேசிய தலைமை வகித்தவர் 'காமராஜ் வழிகாட்டி, நெ. து. சு. செயல்நாட்டி, எம். ஜி. ஆர். தான் சிற்பி' என்றார். நல்ல காலம் அப்புறம் யாரும் பேசவில்லை.



○ திரும்பி வந்தார்....

சத்துணவுத் திட்ட சிற்பி யார்?



○ முன்னோடியா? சிற்பியா?

● மயிலையில் ஒரு இலக்கிய விழா. 'பாரதியும், கம்பனும்' பற்றிப் பேசிய தொழிலதிபர் நல்லபெருமாள், 'பெண்கள் தம் காதலை வெளிப்படையாகச் சொல்வதில்லை'. இதைக் கம்பன் பாரதி இருவருமே சொல்லியிருக்கிறார்கள்'' என்று கூறிவிட்டுத் தம் கையிலிருந்த குறிப்புக்களை வேகமாகப் புரட்டினார், அந்த வரிகளைத் தேடி. திடீரென கூட்டத்தின் முன் வரிசையிலிருந்த ஒருவர் அந்த வரிகளைச் சொன்னதும், கூட்டத்தினர் வியந்தனர். அவர் பாரதிகாவலர் கே. ராமமூர்த்தி.

● மயிலை ஆர். ஆர். சபாவில் ஒரு விழா. இரண்டு பேர் பேசியதும் தலைமை வகித்தவர் எழுந்து போய் விட்டார். இது ரொம்ப சகஜம். ஒன்னரை மணி நேரமாகியிருக்கும். போனவர் மீண்டும் வந்து தலைமையுரையாற்றினார். இது கொஞ்சம் புதுசு. அவர் நீதிபதி எஸ். மோகன்.

● அந்த விழா அழைப்பிதழில் டாக்டர் ந. சஞ்சீவியின் பெயர் இல்லை. ஆனாலும் அடுத்த நாள் பேச வேண்டிய அவர் அன்றே வந்து பேசினார். ஏனென விசாரித்ததில், மறுநாள் அவர் மௌன விரதம். அதுதான் முதல் நாளே பேசினார் என்பது தெரிய வந்தது. விழா ஏற்பாடு செய்தவர்களுக்கு இது எப்படி முன்பே தெரியாமல் போனது?

● 'காதுல பூ' வைத்த எஸ். வி. சேகரின் காட்டுல மழை. அடுத்து ரசிகர்களைத் தம் பாணியில் கிச்சுகிச்சு மூட்டத் தயாராகிறார் சேகர்! ஆமாம்! அவரது அடுத்த நாடக டைட்டில் ''சிரி! வா! மறுபடியும் சிரி!''. ரசிகர்களே! சிரிக்கத் தயாராகுங்கள். ●

—சின்ன கொலம்பஸ்

○ வரிகளைச் சொன்னார்...



○ சிரி மறுபடி சிரி



கட்டிப்போட்ட கவிதை வரிகள்




கட்டிப்போட்ட கவிதை வரிகளை எழுதி அனுப்பிய இவர்கள் தலா ரூ. 10 பரிசு பெறுகின்றனர். கட்டிப்போட்ட கவிதை வரிகள் அடுத்துவரும் சில இதழ்களிலும் இடம் பெறும்.

டி. ஆனந்தி, பெரியகுளம்

காலமென்னும் பூச்செடியில்
கனவுமலர் பூத்தாச்சு!
சாலமிகும் விதிக்கொடுமை
சார்ந்து வர உதிர்ந்தாச்சு!

நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்)

ஏ. ருக்மா, நாமக்கல்



எனக்குச் சம்மதமே;
நீ
மாலையாய் இருப்பின்
அதில்
நான்
மலராய் இருக்க மட்டுமல்ல;
நீ
பாலையாய் இருப்பின்
அதில்
நான்
மணலாய்க் கிடக்கவும்.

—கவிஞர் வைரமுத்து



மகேஷ்வரி, கோயம்புத்தூர்-20

கிளையினிற் பாம்பு தொங்க,
விழுதென்று, குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை எல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

—பாரதிதாசன்

தங்கமனோகரன், மதுரை-16

கள்ளரும்பிய வாயிதழ் மழைக்
கார் அரும்பிய — பூங்குழல்
உள்ளரும்பிய பல்லணி — அதன்
ஊடரும்பிய தேன் மொழி
வெள்ளரும்புகள் பால்நுதல் சிறுவிழி
யரும்புகள் — நாடகம்
துள்ளரம்பையின் சாயலோ இளந்
தோளரும்பிய ''தாய்''க்கிளி.



—கண்ணதாசன்



ஏ. சுமதி, கம்பம்

நாவலங் கனியென் றெண்ணி நங்கை தன்கையிற் கொண்டாள்
மேவிய வண்டு கையை கமலமென் றுமெல்ல வுண்ண
ஆவலோ டதனைக் காண அவள் முகம் மதியென் றஞ்சிப்
பூவினிக் குவியுமென்றே பொன்னெனப் பறந்ததம்மா


—நாமக்கல் கவிஞர்

ஜி. ஷைலாராணி, நாகர்கோவில்
(ஹிந்தியிலிருந்து தமிழாக்கம்)



மலர்ந்து மணம்வீசி அனைவரின் இதயத்தையும்
கொள்ளை கொண்ட நன்மலரே!
உன் உடைமைகள் அனைத்தையும் பிறருக்கே
அர்ப்பணித்து மகிழ்ந்து நின்ற நன்மலரே!
இன்றுநீ வாடி உதிர்ந்தபின் உனக்கே வருந்தாத
இவ்வுலகம், சாரமற்ற வாழ்க்கை வாழும்
என்போன்ற மனிதர்களுக்காகவா வருந்தப்போகிறது?

—மஹாதேவிவர்மா



கே. வைத்தியநாதேஸ்வரன், நெய்வேலி
(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்).

எத்தனைக் கடவுளர்? எத்தனை இனங்கள்?
எத்தனைப் பாதைகள் வளைந்தும், நெளிந்தும்?
துன்பச் சுழலில் உழலும் உலகுக்குத்
தேவையோ ஒன்றுதான் — அன்பெனும் பண்பு.

—எல்லா வீலர் வில்காக்ஸ்

கே. பழனியாண்டி, நீரத்தநல்லூர்

'உனக்கென்ன
சாமி பூதம் கோவில் குளம்
ஆயிரமாயிரம் ஜாலியாய்ப்
பொழுதுபோகும்
வலப்பக்கக் கடல்மணலை
இடப்பக்கம் இறைத்திறைத்து
நகக்கணுக்கள் வலிக்கின்றன
அடியே—
நாளையேனும் மறக்காமல் வா!'

—பாலகுமாரன்



வி. ராஜேந்திர பிரசாத், மதுரை-1



வா, தழுவு; தேகவளம் காட்டு, என்றும் எனக்கு
ஆதரவு, நீஎன்று அணைப்பை இதமாக்கு;
நீயாக்கு; நானுக்கு; வாழ்வை நிஜமாக்கு;
தாயாக்கு; சேயாக்கு; காதல் சுகமாக்கு;
காயாமல் என்னைக் கனியாக்கு; காதல்பற்றி
ஓயாமல் பாட ஓர்க்கவியை உருவாக்கு.

—டாக்டர் அருணகிரிநாயன்

மூ. திருநாவுக்கரசு, வேலூர்—9

காக்கை சிறகினிலே நந்தலாலா — நின்றன்
கரிய நிறந் தோன்றுதையே நந்தலாலா;

பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா — நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா;

கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா — நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா;

தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா — நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா நந்தலாலா.

—மகாகவி பாரதியார்



ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

வையவன்

10

வாளி நிரம்பி விட்டது. அவள் நோஞ்சான் பட்டை தொங்கத் தொங்க வெந்நீர் வாளியைத் தூக்கி வரும்போது கூந்தல் சரிந்து முன்னங்கையில் ஊசலாடிற்று. பனிச்சென்று பூ தெரிந்தது. கூந்தல் நிறைய முல்லை. அதற்குக் கீழ் அடுக்கில் கனகாம்பரம் அவள் இவ்வளவு பூச்சூடி காசி பார்த்த தில்லை. இன்று என்ன விசேஷம்?

மேலும் அவளை ஏறிட்டுப் பார்க்க அவனுக்குக் கண் கூசிற்று.

வாளியைக் கொண்டு வந்து அவள் மேடைமேல் வைத்தாள்.

''ஜெயா.''

போகத் திரும்பியவள் நின்றாள்.

''உனக்கு இன்னு கோவம்?''

பதில் இல்லை.

''புச்சா நான் ஒரு தப்பும் பண்ணலியே''

மௌனம்.

''மனசுலேயே வெச்சுக்கினு இருந்தா கோவம் ஆறாது.''

காலை மாற்றி வைத்ததால் மெட்டி ஓசை மட்டும் கேட்டது. காசி தனக்கும் ஜெயாவுக்கும் மத்தியில் கனமான சுவர் எழுந்து விட்டது போல் உணர்ந்தான். ஒரு கோட்டையின் கருங்கல் சுவர் போலிருந்தது. அந்த ஜெயா... குச்சி மிட்டாய்க்கும், கம்மர்கட்டிற்கும் அவனிடம் சண்டை போட்ட அந்தப் பழைய ஜெயா..

பள்ளிக்கூடம் போகாததற்காகக் கேசவ நாயுடு சரியாக அடித்து விட்டதும், வீட்டில் கோபித்துக் கொண்டு, ஒவர் டாங்கின் மேலே படுத்திருந்த போது பித்தளைத் தூக்கில் தயிர் சாதமும் கருவாட்டுக் குழம்பும் எடுத்து வந்த அந்தச் சின்னஞ் சிறுமியான ஜெயா... அவள் எங்கே போனாள்?

இவளா அவள்? எவ்வளவு வித்தியாசம்?

அவள் ஒன்றுமே பேசாமல் உள்ளே திரும்பிப் போய் விட்டாள்.

'ஒருவேளை இவ என்னிக்குமே என்னை அந்த மாதிரியே நெனைச்சிருப்பாளோ...'

காசி வெந்நீர் வாளியைத் தொட்டுப் பார்த்தான். சுரீரென்று சுட்டது. தண்ணீர் ஊற்றி விளாவும்போது பனிச்சென்று ஜெயாவின் கோபத்திற்குக் காரணம் மூடியிருந்த கதவு திறந்தது போல் விளங்கிற்று.

மேம்பாலத்தின் மீது அவனும் எஸ்தரும் மழையில் ஒதுங்கிப் பேசிக்கொண்டிருந்ததை யாராவது சொல்லியிருப்பார்கள். ஊரி அவளது உள்ளத்தை வெளியிட்டபின் இப்போது எஸ்தர் குறுக்கிட்டது அவள் கோபத்தைக் கிளப்பியிருக்கும்.

காசிக்கு இப்போது அந்தக் கோபத்தின் மீது ஒரு பயம் தோன்றியது. இந்தக் கோபம் எங்கே முடியும்? எஸ்தர் ஒரு போட்டிக்காரி என்று இவள் தீர்மானித்திருந்தால்... தன் மனசு இவளை என்னவாக நினைக்கிறது என்று எப்படி எடுத்துச் சொன்னாலும் இவள் நம்புவாளா? நம்பவில்லையென்றால் அப்புறம் என்னவென்று ஒரு கேள்விக்குறி அவனுள் முளைத்தது.

காசி வெந்நீரை மொண்டு ஊற்றிக் கொண்டான். சோப்புத் தேய்த்தான். அந்தக் கேள்விக்குறி வளர்ந்துகொண்டே போயிற்று.

''என் பேர் எஸ்தர்.''

மேம்பாலத்தில் அவள் மழையின் ஓசையில் கூறியது மீண்டும் காதில் வந்து ஒலித்தது. எஸ்தர். அவன் ஓசைப்படாமல் அந்தப் பெயரை வாய்க்குள் சொல்லிப் பார்த்தான்.

அவள் எதைத் தன்னிடம் கண்டுபிடித்து விட்டாள்? கோயம்புத்தூர் பாலிடெக்னிக்கில் கடைசி வருஷப் பரீட்சையை எழுதி விட்டு வந்திருக்கும் அவள் ஒரு சைக்கிள் ஷாப் வைத்திருக்கும் முரடனிடம் என்ன பார்த்து விட்டாள்?

கேசவநாயுடு அவளைப் பலமுறை கோயம்புத்தூருக்கு வண்டியில் கூட்டிப் போயிருக்கிறார். என்ன நாகரீகம்... என்ன செல்வாக்கு... எவ்வளவு பகட்டு! அங்கெல்லாம் கிடைக்காத எது தன்னிடம் அவளுக்குத் தென்பட்டுவிட்டது?

மழை விட்டதும் மேம்பாலத்திலிருந்து இறங்கி வந்தபோது அவளைக் குடைந்த அதே தாழ்வு மனப்பான்மை காசியை இப்போதும் அலசி எடுத்தது.

கொங்கணியர்களில் 'வஸந்தா' என்ற பெயரில் ஆண் பிள்ளைகள் இருக்கின்றனர். பெண்களுக்கு 'வஸந்தி' என்று பெயர்!

—மஞ்சுதேவன்.



''நீங்களும் வில்வமும் ஒரே 'டைப்...''

கண்டுபிடித்திருந்தால் அதைத்தான் அவன் கண்டிருக்க வேண்டும். தாக்குதல் வந்ததும் சீறிக் கொண்டு நிற்கும் மிருகத்தன்மை. உலகில் உயிர் பிழைத்து நிற்க ஆதாரம் என்று நான் நினைக்கிற முரட்டு வலிமை. அடிதடிகளுக்குஅஞ்சாத உடம்பு. இதுதானுஅவனைக் கவர்ந்திருக்கும். காசி உடம்பைத் துடைத்துக் கொண்டான்.

அப்படியானுல் அந்தவலிமையை என்ஒருபலவீனம் போல், கண்டுபிடித்த குறை போல் எடுத்துச் சொன்னுள்.


காசிக்கு அவள் கட்டிக் காட்டியது இப்போது அவமானமாக இருந்தது.

வில்வமும் நானும் ஒரே 'டைப்பா?' தனக்குள் மீண்டும் கேட்டுக்கொண்டான்.

வில்வம் பதினுறு வயதில் கள்ளச்சாராயம் விற்ருன். சைக்கிளின் பின்னல் ஒரு டின்னைக் கட்டிக் கொண்டு நடுவீதியில் நிமிராகப் போவான். பதினுறு வயசுக்குள் ஜங்ஷன் அவனை ரௌடியாக்கி விட்டது. இரவு ஒன்பது மணிக்கு மேல் ஒரு பெண் சினிமாத் தியேட்டர் ரோடில் தனியாக நடக்கப்பயப்பட்டாள். வில்வத்திற்கு அந்தப் புகழ் வாய்த்து விட்டது.

பொன்னேரியில் ரெட்டியார் வீட்டுக் கொள்ளையில் அவன் மாட்டிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் முட்டிக்கு முட்டி அடி வாங்கி இதோடு வில்வத்தின் கதை முடிந்தது என்று எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டபோது அவனுக்குப் பதினெட்டு வயது.

அதற்கு மேலும் வில்வம் அசுர வித்து மாதிரி வாங்கிய அடிக்கு ஒற்றைக்கு இரட்டையாக வெறி பிடித்துக்கொண்டு வெளியே வந்தான். வக்கணப்பட்டு சிவா, பச்சூர் பட்டாபி முதலியார், தாமுப்பநர்



சந்திரா இந்த மூன்று கொலைகளிலும் ஜங்ஷன் அவன் பெயரைச் சொல்லித்தான் கிசுகிசுத்துக் கொண்டது.

மல்லானூர் கூட்ஸ் வாகன் கொள்ளையில் வில்வத்தின் வெறியை அவன் நேருக்கு நேர் பார்த்தான். அன்றைக்கு எஞ்சினில் கேசவ நைனாவோடு இவனும் பிரயாணம் செய்து கொண்டிருந்தான்.

முன் நிலாக் காலம். ஜங்ஷனை விட்டு ரயில் புறப்பட்டு மேடு ஏறிற்று. தீப்பந்தத்தோடு ஒரு கூட்டம் நின்றது. தீப்பந்தத்தை அசைத்து அசைத்து வண்டியை நிறுத்தச் சொன்னார்கள்.

அன்றைக்கு டிரைவர் மைக்கேல்ராஜ்.

''மேன்... இது ராபர்ஸ்... வண்டியை நிறுத்தக் கூடாது. ஸ்பீட் பிக் அப் பண்றேன்...'' மேடு. மேலே மேலே ஏறிக்கொண்டுபோகும் மேடு. அந்த மேட்டில் பல்லைக் கடித்துக் கொண்டு ஓடும் ஓட்டமாகத் திணறிக்கொண்டு எஞ்சின் ஸ்பீட் எடுத்தது.

திவட்டி வெளிச்சத்தில் வில்வத்தின் முகம் தகதகப்பதைக் காசி, வேகமாக எஞ்சின் அவனைக் கடந்தபோது பார்த்தான். அதற்குள் அந்த ஓட்டத்தில் எஞ்சினுக்கு அடுத்த கூட்ஸ் வாகனில் இரண்டு பேர் தொத்தி ஏறிவிட்டார்கள். தூரத்தில் சிக்னல் போஸ்டில் சிக்னல் விழவில்லை. வண்டியை நிறுத்தியே தீர வேண்டியிருந்தது.

கூட்ஸ் வாகனில் ஏறியவன் பூட்டை உடைக்கும்போது வில்வம் எஞ்சினுக்கு ஓடி வந்தான்.

''திவட்டி காட்டினா ஓட்டிகிறையா வார்றே?'' என்று கூவிக் கொண்டே கேசவ நைனா சற்றும் எதிர்பார்க்காத போது வில்வம் ஒரு நீளமான கட்டிங் பிளேயரால் ஓங்கி அவர் மண்டையில் அடித்து விட்டான்.

காசி அவன் மீது வெறியோடு பாய்ந்தான். அவன் கையிலிருந்த கட்டிங் பிளேயரை எட்டி உதைத்தான். எஞ்சின் படிகளில் அவன் நிலை தடுமாறி உருள இவன் அவன் மேல் உருள, தண்டவாள ஜல்லிக் கற்கள் ஜலஜலவென்று கலைந்து சரிய இருவரும் தரையில் விழுந்தனர்.

கேசவ நைனாவின் மண்டை மீது ஆயுதத்தால் விழுந்த அடி, காசிக்குள்ளேயிருந்து ஓர் எரிமலை மாதிரி சீற்றத்தைக் கிளப்பி விட்டது. அவனது இரண்டு கைகளுக்கும் அன்று ஏற்பட்ட வேகம் எந்த ஆயுதத்திற்கும் நிகரானது. போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்காரர்கள் புகட்ட முயன்ற அதே பாடத்தை நார் நாராகப் பிய்த்து விடுகிற வெறியோடு வில்வத்தின் மீது செலுத்தினான்.

ஏழெட்டுத் தலைகள் தன்னைச் சுற்றிக்கூடி விட்டது தெரியாமல் வில்வத்தை அவன் துவைத்து எடுத்தான். பின் மண்டையில் எதுவோ ஒரு கனமான பொருள் தாக்கிய பின்பு அவன் நினைவிழந்தான். 'அந்த வில்வமும் நானும் ஒரே டைப்பா?'

எந்த அர்த்தத்தில் இதைக் கூறினாள் அவள்?

காசி துண்டைப் பிழிந்து கொடியில் போட்டுவிட்டு வீட்டுக்குள் போனான்.

எவர்சில்வர் தட்டு வைக்கப்பட்டிருந்தது. தட்டில் சாதம். சின்னத் தட்டில் எறா வறுவல். குழம்புக் கிண்ணங்கள். தண்ணீர் டம்ளர். ஜெயா இல்லை.

அவன் போய் உட்கார்ந்தான்.

எங்கிருந்தோ அருகில் முல்லை மணம் கும்மென்று வந்தது. திரும்பினான். தடுப்புச் சுவரில் முதுகைச் சாய்த்துக்கொண்டு ஜெயா வேறெங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

பேசாமல் சாப்பிடத் தொடங்கினான்.

தட்டில் சாதம் தீர்ந்து போயிற்று. கரண்டியால் சோற்றுப் பேசினை அவன் அள்ளுகின்ற சமயத்தில் சத்தம் கேட்டு அவள் வந்தாள். அவன் கையிலிருந்த அன்னக்குத்தியைப் பிடுங்கிவிட்டுச் சாதத்தை அள்ளிப்போட்டாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

முகத்தில் பளிச்சென்று பௌடர் அடித்து மைதீட்டிப் பொட்டு வைத்துப் புதுமணப் பெண் போல் அவள் நின்றாள். சேலையும் ரவிக்கையும் அப்போது தான் புதிதாக அணிந்திருக்கிறாள் என்று எடுத்துக்காட்டின.

காசி தலை குனிந்துகொண்டான்.

எஸ்தர் எனக்குப் போட்டியல்ல.

எஸ்தருக்கு நான் போட்டி என்று அவள் அலங்காரம் சொல்வது மாதிரி இருந்தது. அதற்குமேல் சாப்பிட முடியவில்லை. தட்டில் கைகழுவிவிட்டு வெளியே போனான்.

யாரோ இறங்கிவரும் ஓசை கேட்டது.

''யாரது?'' என்று கேட்டான் காசி. பதில் வரவில்லை. காலடியோசை மட்டும் கனமாகக் கேட்டது.

* * *

சாயங்காலமே டிஸ்சார்ஜ் செய்து விடுமாறு ஹரி கேட்டான்.

''இன்னும் ஒரு வாரம் நீ ரெஸ்ட் எடுக்கணும். டிஸ்சார்ஜ் பண்ணினா ஜங்ஷன்லே சுத்தி வேலைக்குப் போயி ஒடம்பைக் கெடுத்துக்குவே'' என்று மறுத்தார் டாக்டர்.

''மாட்டேன் சார். ஒரு மாசம் லீவ் போட்டுட்டேன். அடிக்கடி வந்து ஒடம்பைக் காட்டிக்கறேன். எங்கியும் சுத்தறதில்லே.'' பணிவாகச் சொன்னான் ஹரி.

பிச்சைக்காரர்: ''வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. பேசாம துபாய் போய் அங்கே பிச்சை எடுக்கலாம்னு தோணுது.''
—எஸ்.வி.எம்.





ஒவ்வொரு நாளையும்
டான்டெக்ஸ்®
அணிந்து துவக்குங்கள்
காலை முதல் இரவு வரை டான்டெக்ஸ் அணிந்து மகிழுங்கள். அதன் கச்சிதமான உடம்போடு ஒட்டும் அமைப்பும், சிறப்பும் உங்களுக்கு நாள் முழுவதும் இதமான சுகத்தை அளிக்கிறது.
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
ப்ரீஃப்ஸ் • வெஸ்ட்ஸ் • காஷுவல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள் • சிறுவர்களுக்கான ரகங்கள்
THE SEAL OF TANTEX QUALITY
ttk தயாரிப்பு
Imageads-M- TT. 1568Tam

''ஆல் ரைட்... டிஸ்சார்ஜ் பண்ணு பண்ணுன்னு நீ தொந்தரவு பண்றதனாலே பண்றேன் ஆனா இன்னிக்குச் சாயந்தரம் இல்லே. காலேலே போயிடு. ராத்திரி ஊசி போடுவாங்க. இங்கேயே நிம்மதியா படுத்துத் தூங்கிட்டுப் போ.''

அதற்குமேல் டாக்டரை வற்புறுத்த முடிய வில்லை. ஆஸ்பத்திரியில் யாருக்குமே ஹரி டிஸ்சார்ஜ் ஆவதில் மகிழ்ச்சியில்லை. இந்த நாலு நாட்களும் அவன் ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளி மாதிரி இல்லை. விருந்தாளி மாதிரி இருந்தான்.

ஊசி போட நர்ஸ் வந்தால் ''ஸிஸ்டர் பத்துக்குள்ளே ஒரு நம்பர் சொல்லுங்க'' பான்.

அவள் ''எட்டு'' என்பாள். பெரிய யோகி மாதிரி கண்ணை மூடிக்கொண்டு இடது கை விரலை எண்ணுவது போல் அபி நயம் செய்வான். ''நீங்க தங்க செய்ன் பண்ண ஆர்டர் கொடுத்திருக்கீங்க. ஒரு வாரத்திலே அது வந்துடும். அது வர்ற நேரம் நல்ல நேரம். அப்புறமா தங்க வளையல் பண்ணப் போறீங்க. அது வந் தால் இன்னும் நல்ல நேரம். வடக்கேயிருந்து ஒரு மாப்பிள்ளை வரப் போறான்.''

நர்ஸுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. முகம் மலர்கிறது. இதெல்லாம் ஹரிக்கு எப்படித் தெரியும்?

''எப்படித் தெரியும் ஹரி?''

''வெளியே சொல்லக் கூடாது. குரு நாதர் கட்டளை'' என்று ருத்திராட்ச மாலை உருட்டுவது போல அபிநயம் செய்துவிட்டுக் கண்ணை மூடி ஆசீர்வாதம் செய்கிற மாதிரி சைகை காட்டுவான்.

''ஏய் ஹரி... நீ கம்பவுண்டர்கிட்டே விசாரிச்சிருக்கிறே.''

உண்மை அதுதான். ஆனால் ஹரி அவரைக் காட்டிக் கொடுக்க மாட்டான். ''கம்பவுண்டர் பெரிய மகான். இப்படி யெல்லாம் பிறத்தியார் சங்கதியைச் சொல் லவே மாட்டார்.''

''அப்ப எப்படித் தெரிஞ்சது?''

''யக்ஷிணி வித்தை. இமயமலையிலே பன்னிரண்டு வருஷம் பனிக்குகையிலே தவம் செஞ்சுட்டு வந்து 'பையா ஹரி, ஒரு வித்தை கத்துக் குடுக்கறேன். புடிச்சுக் கோ'ன்னுட்டுப் பூட்டாரு குருநாதரு.''

அப்புறம் அவள் செல்லமாக அவன் தோளில் ஒரு அடி கொடுப்பாள். பிறகு ஒரு ஜோக் சொல்லுவான். அவள் விழுந்து விழுந்து சிரிப்பாள். அவள் சிரிக்கிற ஒலி கேட்டு வார்டுபாய், ஆயா, கம்பவுண்டர், படுக்கையில் 'அட்மிட்' ஆகியிருக்கிற பேஷண்டுகள் எல்லாரும் வந்து சுற்றிக் கொள்வார்கள். மறுபடியும் ஒரு ஜோக் அடிப்பான். எல்லோரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிப்பார்கள்.

நாலு நாட்களும் அவன் நோயாளி யாக இல்லை. அது ஆஸ்பத்திரியாக இல்லை. ஏதோ கல்யாண வீடு மாதிரி ஒரு களை.... ஒரு கலகலப்பு. ஹரியைப் பார்க்க வருகிற வர்கள் பழம் பிஸ்கெட் என்று கொண்டு வருவதை எல்லோருக்கும் விநியோகித்து விடுவான் ஹரி.



அரசியல் தலைவரின் காரியதரிசி தலைவ ரிடம்:

''அடுத்தவாரம் தாங்கள் தொடங்க இருக்கும் பாத யாத்திரைக்கு எந்தக் காரைத் தயார் செய்யட்டும்?''

—காயத்ரி.

ஹரியிடம் வந்த முகங்கள் பிரகாசம் அடைந்து சென்றன. அன்றாடத் தொல்லை களின் சுமை அங்கே இறங்கின. குறைந் தன. சிரிப்பதற்கு, மகிழ்வதற்கு, நேசிப்ப தற்கு எந்த மூலை முடுக்கிலும் இன்னும் சந்தர்ப்பங்கள் இருப்பதை அவன் உணர்த்தி னான்.

யாருக்கும் அவன் டிஸ்சார்ஜ் ஆவது மகிழ்ச்சி தரவில்லை.

வார்டு பாயைக் கூப்பிட்டுத் தன் வயிற்றில் முடிந்த வரை ஓங்கிக் குத்தச் சொல்வான். அவர் மெலிந்தவர். பயப்படுவார்.

''ஒண்ணும் ஆகாது சார்... குத்துங்க.''

தைரியம் வந்து குத்துவார்.

''ம்ஹூம்... பிரயோசனம் இல்லே. தெனம் காலேலே ஒரு டம்ளர் பால் ஒரு முட்டை... நாப்பத்தெட்டு நாள் ஒரு மண்டலம் சாப்பிடணும்'' என்று மருத்து வம் சொல்லுவான். அடுத்து அதோடு விடாமல் ''இப்படியெல்லாம் குத்தினா பெண்டாட்டி மதிக்க மாட்டா'' என்று சீண்டுவான்.

''பெண்டாட்டியைக் குத்து விடச் சொல் றியா?''

''ஐயையோ சாமி... சும்மா பெண்டாட் டியை மெரட்டற மாதிரி தலையணையை ஓங்கி ஒரு குத்து வெக்கணும். வக்கிற குத்தி லேயே அவ பயந்துடணும். இப்பக் குத்தின குத்து மாதிரி விட்டா அவளுக்குப் பயம் தெளிஞ்சுடும்.''

ஹரியின் மதிப்பு அவன் சிரிக்க வைக் கிறான், மற்றவர்களை மகிழ வைக்கிறான் என்பதில் மட்டுமில்லை என்று எல்லோருக்கும் தெரியும். அவனை நெருங்கியவர் ஒவ்வொருவரும் ஹரி உண்மையாகத்தன்னை நேசிக்கிறான் என்று எப்படியோ தெரிந்து கொண்டனர். அந்த நேசம்... அந்தப் பிரியம் தான் அவன் மதிப்பு. அதனாலேயே அவனைப் பிரிய யாருக்கும் மனசு வரவில்லை.

ஆனால் ஹரிக்கு உள்ளுக்குள் ஒரு கவலை ஓடிக் கொண்டிருந்தது. இன்றோ நாளையோ வில்லம் வந்து விடுவான். காசிக்கு எந்த நேரமும் அடுத்து இன்றோ நாளையோ தொடங்கி விடும். அது எந்த உருவத்தில் வரும் எப்படி வரும் என்பதை ஊகிக்க முடியவில்லை. (தொடரும்)




ஸ்கூல் முடித்தவுடன் நேர புட்பால் விளையாட மைதானத்திற்கு போவேன். நல்லா கை கால் ஓய்ந்து போகும் வரை விளையாடுவேன். எனக்கென்ன கவலை? வீடு திரும்பியவுடன்தான் தினம் அம்மா மறக்காமல் ஹார்லிக்ஸ் தருவாங்களே? ஹா, சத்துள்ள ஹார்லிக்ஸிற்குத்-தான் என்ன 'ஸூபர்' ருசி!
மால்டெட் பார்லி, முழு ஆடைப் பால் மற்றும் பொன்னிற கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையைப்பெற்றது. எனவே, கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின்மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை,
Horlicks
The Great Nourisher
புதிய காலத்திற்கேற்ப
புதிய தோற்றம்
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

மட்டம் தட்டுங்கள்!



முகுந்தன்

மட்டம் தட்டிப் பேசுகிறவர்கள் அத்தனை பேரும் சமுகத்தின் சாபக் கேடுகள்' என்று நினைப்பவர்கள் விவரம் தெரியாதவர்கள். உண்மையைச் சொல்லப் போனால், மட்டம் தட்டுகிறவர்கள் சமூகத்துக்கு நன்மை செய்வதற்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். எதிராளிக்கு மண்டைக்கனம் அதிகரித்து அதனால் அவன் கஷ்டப்படப் போகிறானே, விரோதிகளைச் சம்பாதித்துக் கொண்டு விடப் போகிறானே என்ற நல்லெண்ணத்தில் தான் இக்கலைஞர்கள் செயல்படுகிறார்களே தவிர, சுயநலத்தினால் அல்ல.

இனி இக்கலையை அன்றாட வாழ்க்கையில் எப்படிப் பயன்படுத்துவதென்று பார்ப்போம்.

உதாரணம் 1

உங்கள் மகன் அரையாண்டுத் தேர்வில் வகுப்பில் முதலாவதாக வந்திருக்கிறான்; அதைப் பெருமையுடன் உங்களிடம் வந்து தெரிவிக்கிறான். அவனுக்குத் தலைக்கனம் ஏறாமலிருக்க வேண்டுமல்லவா? தட்டுங்கள் மட்டம்!

''வெறும் புத்தகப் புழுவாக இருந்து என்ன பிரயோசனம்? அவனவன் ஸ்போர்ட்ஸிலே எத்தனை கப், மெடல்களை வாங்கிக் குவிக்கிறான் பார்... நீ?''

ஒருவேளை, உங்கள் மகன் ஸ்போர்ட்ஸில் சாம்பியனாக இருந்து விட்டால்?... அவன் கப், மெடல்களைக் கொண்டு வந்து பெருமையுடன் காட்டும்போது...

''இதெல்லாம் இருக்கட்டும்... படிப்பு என்ன ஆச்சு...? இதிலே காட்டுகிற அக்கறையிலே பாதியையாவது படிப்பிலே காட்டேன், பார்க்கலாம்! உன் பிராக்ரஸ் ரிப்போர்ட் இதுமாதிரி பெருமையாகக் காட்டும்படி இருக்கிறதா?''

தப்பித் தவறி உங்கள் மகன் படிப்பு, ஸ்போர்ட்ஸ் இரண்டிலுமே முதலாவதாக வந்திருந்தால்...?

''படிப்பு, ஸ்போர்ட்ஸ் – இந்த ரெண்டு மட்டும் வாழ்க்கைக்குப் போதுமா? ஜெனரல் நாலெட்ஜ் வேண்டாமா?... அதிலேதான் நீ சைபர்... எங்கே, மொஸாம்பிக் நாட்டு ரயில்வே மினிஸ்டர் யார்னு சொல்லு பார்ப்போம்!''

உதாரணம் 2

உங்கள் மனைவி பழைய துணிகளைப் பாத்திரக்காரனிடம் போட்டு ஒரு எவர்சில்வர் டபரா – தம்ளர் வாங்கியதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறாள்.

''ஹூம்! உன்னாலே இதுதான் முடியும்.. நம்ம ராகவன் மனைவியைப் பார்... அவள் வேலைக்குப் போய் மாசாமாசம் கனையாக எண்ணூறு ரூபாய் கொண்டு வருகிறாளாக்கும்!''

ராகவன் சார்! உங்கள் மனைவி உங்களிடம் சம்பளக் கவரைக் கொண்டு வந்து நீட்டும்போது(?) நீங்கள் எப்படி மட்டம் தட்டலாம், தெரியுமா?

''இந்தக் காலத்திலே வேலைக்குப் போய்ச் சம்பாதிக்காத பெண்கள் யார் இருக்கிறார்கள்?... சிக்கனமாக் குடும்பம் நடத்தத் தெரியணும். அதுதான் முக்கியம். கோவிந்த

ராஜன் மீசையைப் பார்... வீட்டிலே இருக்கிற பழந்துணிகளைப் போட்டுப் பாத்திரங்களா வாங்கி அடுக்கி வச்சிருக்கா அந்தச் சாமர்த்தியம் உனக்கு இருக்கிறதா''..

உதாரணம் 3

உங்களுடன் வேலைபார்ப்பவர் வீடியோ வாங்கி இருக்கிறாரா...? அவரை மட்டம் தட்ட வேண்டுமா...?

''என்ன இருந்தாலும் தியேட்டரில் படம் பார்க்கிற 'த்ரில்' இதிலே உண்டா?... இன்ட்டர்வெல்லின்போது 'தம்' அடிக்கலாம். பாப்கார்னோ சாக்லேட் கேக்கோ வாங்கி, வீட்டிலே கொண்டு வந்து சாப்பிடலாம்... தவிர, ஃபர்ஸ்ட் டே ஃபர்ஸ்ட் ஷோ பார்க்கிற சுகமே தனிதான்!''

நிலைமையைத் திருப்பிப் போடுங்கள். அதாவது உங்கள் நண்பர் ஒரு படத்தை முதல் நாளன்றே பார்த்து விட்டு வந்ததாகப் பெருமையாகச் சொல்லிக் கொண்டு திரிகிறார். அவரது வாயை அடைப்பது எப்படி?

''தியேட்டர் கும்பலிலே நசுங்கி, புழுக்கத்துக்கு இடையிலே படம் பார்க்கிறது என்ன வேண்டியிருக்கு? வீட்டிலே சோபாவிலே கால்மேலே கால் போட்டு உட்கார்ந்து வீடியோவிலே படம் பார்க்கிற சுகத்துக்கு இது ஈடாகுமா...? அது மட்டுமில்லே...

வீடியோவிலே நமக்குப் பிடித்த சீனைத் திருப்பித் திருப்பிப் போட்டுப் பார்க்க முடியுமே!... தியேட்டரிலே அது நடக்குமா...?''

உதாரணம் 4

உங்களுடன் ஒண்டுக் குடித்தனம் இருந்தவர், சொந்தத்தில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார். அவரது மூக்கை உடைப்பது போல ஏதாவது சொல்ல வேண்டாமா?

''போயும் போயும் அந்த இடத்திலா வீட்டைக் கட்டுவான் ஒருத்தன்?... அங்கே பகலிலேயே நரி ஓடுமே?... திருட்டுப்பயம் வேறே... வாடகை வீடென்றால் செலவும் குறைச்சல். மாசா மாசம் வாடகையை விட்டெறிந்து விட்டுக் கவலையில்லாமல் இருக்கலாம்... ஏதாவது சௌகரியக் குறைவென்றால் வசதியான வேறு வீடாகப் பார்த்துக் கொள்ளலாம்... சொந்த வீடென்றால் அதை விட்டு நகர முடியாதே!...''


சரி, நீங்கள் சொந்த வீடு வாங்கி விட்டீர்கள். (நரி ஓடுகிற இடத்தில்தான்!) ஆனால் உங்கள் நண்பர் இன்னமும் வாடகை வீட்டில் தான் இருந்து வருகிறார். அதை ஒரு பெருமையாகவும் அவர் நினைக்கிறாரென்றால், சும்மா விடலாமா?

''ஆயிரம்தான் வசதிகள் இருந்தாலும் அது வாடகை வீடுதானே...? நம்ம இஷ்டத்துக்கு ஒரு ஆணி அடித்தோம், பார்ட்டிஷன் போட்டோம் என்பது முடியுமா...? வீட்டுக்கு வெள்ளையடிக்க வேண்டுமென்றால் கூட, வீட்டுக்காரர் கையை எதிர்பார்க்க வேண்டும்... தவிர, எந்த நிமிஷத்திலே வீட்டைக் காலி பண்ணச் சொல்வாரோ என்று பயந்து கொண்டே காலம் தள்ள வேண்டும்... சொந்த வீடென்றால் இந்தத் தொல்லையெல்லாம் இல்லை பாருங்கள்!... வாசலிலே நரி ஓடினால் என்ன, நாய் ஊளையிட்டால் என்ன, கதவைச் சாத்திவிட்டால் கோட்டைக்குச் சமம்!''

மேலே சொன்ன உதாரணங்களிலிருந்து ஒரு விஷயம் புரிந்து கொண்டிருப்பீர்கள். எதிராளி இமாலய சாதனையே புரிந்திருந்தாலும் அதை நாம் கண்டு கொள்ளவே கூடாது. அவன் கையிலிருக்கும் பீச் மெல்பாவை விட, நம்மிடம் உள்ள குச்சி ஐஸ் க்ரீமே உயர்ந்தது என்று தயக்கமில்லாமல் அடித்துப் பேச வேண்டும். அதுதான் இக்கலையின் சூத்திரம்.


ஆசிரியருக்கு ஒரு வேண்டுகோள்: 'ஹ்ஹும்! இதெல்லாம் ஒரு கட்டுரையா? ஒவ்வொருத்தர் எவ்வளவு உயர்ந்த விஷயங்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதுகிறார்கள்...அதையெல்லாம் விட்டுவிட்டு இந்த மட்டமான கட்டுரையைப் பிரசுரித்திருக்கிறீர்களே!' என்று மட்டம் தட்டி வாசகர்கள் கடிதம் எழுதக்கூடும். அவற்றைக் கண்டு கொள்ளாதீர்கள்!







தூரம் அதிகமில்லை



இப்ப சாகவா இப்ப சாகவா என்று கேட்கிற நோஞ்சான் கதை

இருவருக்கிடையில் வழக்கமாக மலரும் காதல். அதைவிட வழக்கமாக வரும் சண்டை சச்சரவுகள். முடிவில் காமெடியா, டிராஜிடியா என்று சீட்டுக் குலுக்கிப் போட்டுக் காமெடி என்று முடிவெடுத்துக் கொண்ட பின்பு — திரைக்கதை என்ன அப்படி ஒரு கஷ்டமான காரியமா?

சிதிலமான கோயில்- புதுமையான பின்னணிக்கு என்று சொல்ல. சவுண்ட் ஆராமுது — வித்தியாசமான பாத்திரப் படைப்பு என அறிவிக்க. இரண்டு மூன்று பாடல்கள். கொஞ்சம் அழுகை. சாப்டர் க்ளோஸ்.

கார்த்திக் அடிக்கடி ஆடு திருடிய கள்ளனைப் முழிப்பதைக் குறைத்துக் கொண்டால் நன்ருக இருக்கும். 'காதல் தோல்வி' சால்வை போர்த்தி போஸ் கொடுக்கும் போது பரிதாபமாய்(!) இருக்கிறது பார்க்கிற நமக்கு.

ஜி. ஸ்ரீனிவாசன் ஆரம்ப முதல் இறுதி வரை இறுக்கமான முகபாவத்தோடு வருகிற கையாலாகாத நாடகக் கலைஞர். இவர் திறமையை இந்தப் படத்திற்காக வீணடித்திருக்க வேண்டுமா என்ன?

ஜனகராஜ் — வாலு போச்சு கத்தி வந்தது டும், டும் என்கிற மாதிரி காமெடியன் ரோல் போய் வில்லன் ரோல் போட்டுக் கொண்டிருக்கிறார். போகப் போகத் தெரியும்.

விஜி, சாமிக்கண்ணு, ஜூனியர் பாலையா இன்னும் சில உபரிப் பாத்திரங்கள். இப்ப சாகவா, இப்ப சாகவா என்று படம் நெடுகக் கேட்கிற நோஞ்சான் திரைக்கதை.

இவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் இக்கித் திணறிக் கடைசியில், சொப்பு வைத்துக் கொண்டு அப்பா அம்மா ஆட்டம் ஆடுகிற 'பசங்களுக்காக' என்று ஒரு படத்தை எடுத்து முடித்திருக்கிறார்கள் டைரக்டர்கள். (ராபர்ட் — ராஜசேகரன்).



சிலுக்குக்கு இது மிக வித்தியாசமான படம்.

கல்யாணத்திற்கு முன்னால் அவசியத் தேவைக்காகத்தான் என்றாலுங்கூட நிர்வாண மாடலாய் நின்றவள் தன் மனைவி என்று தெரிந்து, கொதித்து அவளை விவாகரத்து செய்து குழந்தையுடன் தள்ளி வைக்கிற கணவனாய் சிவகுமார். அவரிடம் ஜீவனாம்சம் வாங்குகிற அழுகை மனைவியாய் பூர்ணிமா ஜெயராம். இவர்கள் ஜோடி நம்பர் ஒன்.

தன் கணவனின் கூடாத பழக்கங்களுக்கு (மது, சிகரெட்) முற்றிலும் கடைபோடாமல் அவ்வப்போது சிறைப்படுத்துகிற மனைவியாய் சிலுக்கு. இந்த மனைவியின் கண்டிப்பும் அன்பும் கட்டிப் போடுகிற தாராள மனசுக் கணவனாய் ஜெய்சங்கர். ஜோடி நம்பர் டூ. சண்டையும் சிநேகமுமாய் மல்லுக்கு நின்று மசிந்து போகிற கவுண்டமணியும், காந்திமதியும் ஜோடி நம்பர் த்ரீ. இதில் பிரிந்து போன முதல் ஜோடியைச் சேர்த்து வைக்க, ஜோடி நம்பர் இரண்டு என்னென்ன நாடகங்களை எல்லாம் நடத்துகிறார்கள், இறுதியில் ஒரு கறுகறுப்பான, வழக்கமான க்ளைமாக்ஸில், எப்படிச்சண்டை போட்டுச் சேர்த்து வைக்கிறார்கள் என்று கதை.

ஜில் ஜில்லென்று ஒரு நடனத்தைக்காட்டி விட்டு அதே கையுடன் ஜெய்யின் மனைவியாக அறிமுகமாகிற சிலுக்குக்கு இது மிக வித்தியாசமான படம். அன்பான கண்டிப்பும், அடுத்தவர் பால் ஆதரவான அனுதாபமுமாய் அநாயாசமாய்த் திறமை காட்டிப் படத்தில் தனி இடத்தைப் பிடிக்கிறார். சற்று சூடான இரண்டாவது நடனத்தையும் கதையோடு சேர்த்து அழகாய்ச் செருகியிருக்கிறார்கள். இரண்டு அர்த்தம் கொடுக்காமலேயே சிரிக்க வைக்க முடியும் என்று புரிந்திருக்கும் ஆறுதலான மனோரமா. எழுத்துப் பிழைகளுடன் இவர் வார்த்தைகளைக் கொட்டுகிற போதெல்லாம் தன் வித்தையாய்க் கொட்டகை அதிர்கிறது.

அப்பாவின் அன்றைய வித்தியாசமான அசைவுகளையும் முகத்துச் சுளிப்புகளையும் (இரண்டு குரல்கள் மட்டும் தான் மைனஸ்) அப்படியே மறுபடி திரையில் காட்டுகிற வில்லனாய் ராதாரவி. அந்த அழகிற்காகவே ரசிக்க முடிகிறது.

எம். எஸ். வி. யின் நிதானமான இசையை விட அறிமுகப் பாடகி ஜெயஸ்ரீயின் இனிமையான குரல் வளம் மனத்தில் நிற்கிறது.

ஜீரணிக்கக் கஷ்டமான சில சினிமாத்தன சம்பவங்களைத் 'தள்ளி' வைத்து விட்டுப் பார்த்தால், இத்தனை பெலித்த கதையை இவ்வளவு சுவையாய்க் கொடுத்திருக்கிற என். எஸ். ராஜேந்திரனின் டைரக்‌ஷனைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

— ஜெயமன்மதன்


திருமணம் மற்றும் இதர சுபநிகழ்ச்சிகளுக்கு
சாரதா'ஸ் பட்டுப் புடவைகள்
விசேஷ புகழ் பெற்றவை
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
SARATHA'S
MADRAS & TRICHY

சில பல

மீ.ப.சோமு



இந்தப் புண்ணியத் தமிழ்நாட்டை இப்போது ஆண்டு கொண்டிருக்கிற தமிழக அரசுக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை என்று எந்த வெங்காயம் சொன்னது? வேறு எந்தத் துறைக்கு இருக்கிறதோ இல்லையோ, தமிழக அரசின் மின்சாரத் துறைக்கு அதன் மேனி முழுவதும் மின்சாரமாக ஓடுகிறது தெய்வ நம்பிக்கை!

நேயர்கள் செய்தி பார்த்திருப்பீர்கள். கடவுள் செயலாக அறுந்து விழுந்த ஒரு மின்சாரக் கம்பியானது, கடவுள் செயலான ஒரு மனித உயிரைக் கடவுளிடம் சேர்ப்பித்து விட்டது. உயிரிழந்த அந்தப் பேராசிரியரின் (கோயம்புத்தூர்) மனைவி தம் சார்பிலும் தமது இரண்டு குழந்தைகளின் சார்பிலும் ஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்தார். கடவுளிடம் அல்லவா அவர் வழக்கைத் தொடர்ந்திருக்க வேண்டும். அதை விடுத்து அந்த அம்மை, பாவம், மின்சாரத் துறையிடம் நஷ்ட ஈடு கோரி வழக்குப் போட்டார். மின்சாரம் எப்படி வாதாடியது என்கிறீர்கள்? மழை பெய்ததும், இடி இடித்ததும், மின்சாரக் கம்பி அறுந்து வீழ்ந்ததும், எல்லாம் கடவுளுடைய செயல், ஆகையால் நஷ்ட ஈடு எதுவும் தன்னால் கொடுக்க இயலாது!


ஆஸ்திக பூர்வமான இந்த வாதத்தைச் சென்னை உயர்நீதி மன்றம் அப்படியே ஒப்புக் கொண்டு, 'கடவுளானவர், இந்த நஷ்ட ஈட்டைக் கொடுக்கக் கடவாராக!' என்றல்லவா தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும்? அப்படிச் செய்யாமல், அதற்குமாறாக, மின்சாரத் துறைக்குரிய காப்பு விதிகளை மேற்கோள் காட்டி, அந்த விதிகளின்படி அறுந்து விழுந்த கம்பிக்கு மின் எதிர்ப்புக் கவசம் போடாத நிலையில், வேறு தக்க காப்பு உபாயம் செய்யாதது மின்துறையின் கடமைத் தவறு என்றும், எனவே மரணத்துக்கு முழுப் பொறுப்பு மின்துறைதான் என்றும் அறுதியிட்டு, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியது மின் துறைதான் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி விட்டது! கடவுளுக்கு வக்காலத்து வாங்கித் தோற்றுப் போன மின்துறைக்கு நாம் ஆறுதலாகச் சொல்லக் கூடியது வேறு என்ன உண்டு? எல்லாம் கடவுள் செயல்!

• • •

இன்னொரு கடவுள் செயலை இங்கே சொல்கிறேன்.

சென்ற மாதம் எங்கள் பேட்டையில் இதேபோல அந்தப் பரம்பொருளாகிய கடவுள், மின்சாரக் கம்பியை எட்டாவது நேர் சாலையிலே விழுந்து புரளும்படி அறுத்து விட்டார்! மேலும் அந்தக் கடவுள் செய்த செயலைப் பாருங்கள். ஒரு விலையுயர்ந்த பசுமாட்டை அந்தப் பக்கமாக நடந்து செல்லும்படியாகப் பண்ணினார். அதோடு கடவுள் நிறுத்தினாரா? இல்லை! அந்தப் பசுமாட்டின் காலை அந்த அறுந்த கம்பியின் மீது தூக்கி வைத்தார்! சரி! கடவுள் செயலால் பசுவின் உயிராவது போகாமல் நின்றிருக்கக் கூடாதா? அந்த உயிர் உடனேயே அந்த இடத்திலேயே போய் விட்டது! கடவுள் செயலை என்னவென்று சொல்வது போங்கள்! கம்பியைப் பழுது பார்த்தார்கள். யார்? கடவுளில்லை. மின்சார வாரியத்தினர். அப்போதாவது இந்தக் கடவுள் சும்மா இருக்கக் கூடாதா? மறுபடியும் அதே இடத்தில் அதே கம்பியை அதேபோல இருபத்து நான்கு மணி நேரத்





நிற்குள் அறுந்து விட்டார்! மறுபடியும் பழுது பார்த்தார்கள்! இப்போதாவது அந்தப் பொல்லாத கடவுள் அப்படியே தமது செயலை நிறுத்தியிருக்க வேண்டியது தானே முறை? கடவுள், அப்படிச் செய்ய வில்லை! இரண்டே நாளில் மறுபடியும் விடியற் காலையில் அதே கம்பியின் இன்னொரு ஓரத்தை அறுத்துப் பொறி சிதற வைத்தார். வாரியத்தினர் மினக்கட்டு வந்து, கம்பியை ஒக்கிட்டுவிட்டுப் போனார்கள்! இன்னொரு முறை மட்டும் அந்தக் கடவுள் இதே மாதிரியாகச் செய்யட்டும், ''ஐயா கடவுளே, நீர் அறுத்த கம்பியை இனிமேல் நீரே வந்து தான் ஒக்கிட வேண்டும்'' என்று ஒரே தீர்மானமாகச் சொல்லி விட வேண்டியதுதான், கடவுளிடம் வரி கொடுக்கிற பொது மக்களாகிய நாம்! ஏனென்றால், ''எல்லாம் கடவுள் செயல், நம் செயலால் ஆவது ஒன்றுமில்லை'' என்ற மனப்பான்மையை எல்லா வட்டாரங்களிலுமுள்ள மின்சாரக் கிளை அலுவலகங்களில், முக்கியமாக இரவு நேரங்களில், பார்க்கிறோம். உங்கள் வீட்டில் மின்சாரம் இரவு நேரத்தில் தெய்வாதீனமாக நின்று விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். வைத்துக் கொள்வதென்ன? அடிக்கடி நிகழ்வதுதானே அது! உடனே, தொலைபேசியிலே சம்பந்தப்பட்ட கிளை அலுவலகத்தைக் கூப்பிட்டுச் சொல்லிவிட முடியுமா? கடவுளுக்கே 'ட்ரங்கால்' போடுவது மாதிரிதான்! ரிசீவரை எடுத்துக் கீழே வைத்துவிட்டுப் பரம்பொருளோடு அத்துவைதமாகி இருப்பார் இரவுக் கடமையின் அவசர ஊழியர்! கடவுளை நம்பினோர் கண் இமை திறவார்!

அதெல்லாம் சரி; குடும்பங்கள் வாழ்கிற குடியிருப்புக்களிலாவது இந்தத் தலைமேல் கம்பிகளை எடுத்து விட்டு நிலத்தடிக் கம்பிகளைப் போட்டால் என்ன?

• • •

ஏழைகளின் வாக்குச் சீட்டிலே இறைவனைக் காணுகிற நமது தமிழக அரசு, அண்மையில் ஒரு பங்களாவின் வெளிக் கவுதகம் இடிந்து விழுந்ததால் நரநாராயணர்கள் பலர் உயிரிழந்தார்கள் என்பது கண்டு மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தது! அதைப் பார்த்து மாநகராட்சி, பாவம் கண்ணீர் வடித்தது. அதைப் பார்த்துக் காவல் துறையும் பாவம், கண்ணீர் வடித்தது! உடனே சென்னை மாநகராட்சியும் அதற்கு வலதுகையும் இடது கையுமான காவல் துறையும் ஒன்று சேர்ந்து, சென்னையிலுள்ள மிகவும் பழைய கட்டடங்களை இடித்துத் தள்ளும் நடவடிக்கையை அறிவித்துள்ளன! செய்தியை நேயர்கள் பார்த்திருப்பீர்கள்! மரியாதையாகத் தாமே இடிக்க முன்வராத வீட்டார்களின் கட்டடங்களில் இவர்களே வந்து இந்தக் கைங்கரியத்தைச் செய்துவிட்டு, அதற்கான செலவையும் இடிபாடுகளோடு சேர்த்து வீட்டுக்காரர்களின் தலையிலேயே போடுவது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

இந்தச் செய்தி வெளிவந்த அதே நாளிதழின் இன்னொரு பக்கத்தில், வீட்டு வசதி வாரியத்தின் கோட்டூர் வீடுகளிலே விழுந்துள்ள பயங்கரமான வெடிப்பு விரிசல்கள் பற்றி விரிவான செய்தி பிரசுரமாகியிருக்கிறது! ரசமாக இருக்கிறது அல்லவா? கோட்டூர் மட்டும் என்ன? அண்ணாநகரும் மற்றும் பல புதிய நகர்களும் கோட்டூருக்கு மோட்டூராகவே இருக்கின்றன! இந்த வெடிப்புக்கள் எல்லாம் அரசாங்க வெடிப்புக்களாக இருப்பதால், அவை ராஜ பிளவைகளாக உள்ளன! புற்றுநோய் போல 'மளமள'வென்று வேகமாகப் பரவுகிற இந்த ஆபத்தான விரிசல்களுக்காக, வீட்டு வசதி வாரியத்தின் இந்த வீடுகளை நாமே இடித்து நொறுக்கிவிட்டு, அதற்காகும் செலவையும் வாரியத்தின் தலையிலே போட்டால் என்ன என்று நேயர்கள் கேட்பதற்கில்லை! ஏனென்றால் வீட்டு வசதி வாரியம் கட்டிக்கொடுத்துள்ள 'ஒட்டை உடைசல்' வீடுகள் எல்லாம் புத்தம் புதிய வீடுகள்! அரசின் கருணை கூர்ந்த நடவடிக்கை மிகவும் பழைய வீடுகளிலுள்ள ஆபத்துக்களுக்கு மட்டுமே!


• • •

யானைப்பாகன்: எனக்கு ஒரு முழுச் சாப்பாடு என் யானைக்கு ஒரு அளவுச் சாப்பாடு கொடுங்க!



அண்மையில் மதுரைக்குப் போயிருந்தேன். மீனாட்சி கோயில் சந்நிதியில் ஒரு ஜேப்படி! நல்லவேளை, பணத்தைப் பறிகொடுத்தவர் ஓடித் துரத்தி அவரே திருடனைப் பிடித்துக் கையும் களவுமாகப் போலீஸ்காரரிடம் ஒப்படைத்து விட்டார்! திருடனுக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! போலீஸ்காரர் ஊக்கத்தோடு திருடனை அழைத்துச் சென்று விட்டார்!

இப்போதெல்லாம் பல கோவில்களிலே ஜேப்படிக் கில்லாடிகள் பூஜை வேளைகளில் நிலையாக நின்று சுவாமி தரிசனம் செய்து வருகிறார்கள்! குருக்கள் தீபாராதனைத் தட்டை எடுத்து வரும்போது பக்தர்கள் இரண்டு கைகளையும் சட்டையிலிருந்து எடுத்துச் சூடனை ஒற்றுகிற ''தருணம்'', இந்த நிபுணர்களுக்கு வாய்ப்பாக இருக்கிறது! லாகவமாகக் காணிக்கையைச் சட்டைப் பையிலிருந்து கழற்றி விடுகிறார்கள்! பாவம், காவல்துறை என்ன செய்யும்!



ரிஹேஸ்ண்ட் ஆட்டோ ப்ராடக்ட்ஸ் தொழிற்சாலையின் ஒரு தோற்றம்.

சோதனை சவாரி

சில வருடங்களுக்கு முன் ஹோஸூர் ஒரு சாதாரணச் சிற்றூராக இருந்தது. தூங்கி வழிந்து கொண்டிருந்த இந்த ஊர் இன்று தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் தொழில் நகரமாக வளர்ந்துவிட்டது. ஹோஸூர் தொழிற்சாலைகள் சுமார் பத்தாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றன. இன்னும் ஐந்து ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை ஐந்து மடங்காகப் பெருகி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு வேலை வாய்ப்பைப் பெருக்க உதவும் நிறுவனங்களுள் ஒன்று 'ரிஹேஸ்ண்ட் ஆட்டோ புராடக்ட்ஸ் அண்டு சாக்ஸ் லிமிடெட்.' இந்த நிறுவனம் மோட்டார் சைக்கிள்கள், லாரிகள், கார்களுக்குத் தேவையான ஷாக் அப்ஸார்பர்கள் தயாரிப்பில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சமீப காலம் வரை இந்திய நிறுவனங்கள் எண்ணெய் நிரம்பிய ஷாக் அப்ஸார்பர்களையே தயாரித்தன. 1967–இல் மேற்கத்திய நாடுகளில் வாயு நிரம்பிய ஷாக் அப்ஸார்பர் அறிமுகமாயிற்று. இதை முதன் முதலில் தயாரித்தது மேற்கு ஜெர்மானிய நிறுவனம். பென்ஸ் போன்ற பல மேல் நாட்டுக் கார் உற்பத்தி நிறுவனங்கள் பயன்படுத்தி வருகிற இந்த ஷாக் அப்ஸார் பர்களை இந்தியாவில் அறிமுகப்படுத்திய பெருமை ரிஹேஸ்ண்ட் ஆட்டோ புராடக்ட்ஸைச் சாரும்.

ரஞ்சித் பிரதாப் அயல்நாட்டில் பயிற்சி பெற்றவர். இவர் குடும்பம் தான் உலகப் புகழ் ஹால்டா டைப்ரைட்டர்களை இந்தியாவுக்கு அளித்தது. ரிஹேஸ்ண்டு ஆட்டோ புராடக்ஸின் நிர்வாக இயக்குனரான இவர் அரும்பாடுபட்டு சிட்காட்டிடமிருந்து பொருளுதவியும், மேற்கு ஜெர்மானிய நிறுவனத்தின் கூட்டுறவையும் பெற்றுள்ளார்.

வழக்கமான ஷாக் அப்ஸார்பர்கள் 20 முதல் 25 ஆயிரம் கிலோமீட்டர்களுக்கு நிலைத்திருக்கும் என்றால் வாயு நிரம்பியவை அதைக் காட்டிலும் இரட்டிப்புக் காலம் உழைக்கும். இவை பொருத்தப்பட்ட கார்கள் குண்டும் குழியுமான சாலையில் அதி வேகமாய்ச் சென்றாலும் பயணி அதிர்ச்சியை உணர்வதில்லை. விலை? மேற்கு ஜெர்மனியில் இந்த ரக ஷாக் அப்ஸார்பர்கள் சாதாரண ரகத்தைக் காட்டிலும் நூறு சதவீதம் விலை உயர்ந்தவை. இந்தியாவில் இவற்றுக்குக் கொடுக்க வேண்டிய கூடுதல் தொகை ஐம்பது சதவீதமே.

—ஆர். டி.

ஒருவர்: "டாக்டர் சார்... எனக்குப் பத்திரிகைகளில் வருகிற கதைகளைப் படித்தாலே சிரிப்பு... சிரிப்பா வருது!"
டாக்டர்: "அப்ப ஜோக்குகளைப் படியுங்க... சிரிப்பு தன்னால நின்னுடும்."
—கோவை, தங்கபாரதி






மோ மார்ட்டில் தேவாலயம்



மோ மார்ட் வீதி

வர்செய் அரண்மனையில் பதினான்காம் லூயி மன்னனின் ஓவியம்



வர்செய் அரண்மனைத் தோற்றம்



8

சித்திரமே தொழிலாச்சு! சுதந்திரமே உயிர்மூச்சு!

அத்தனை சுருக்கில் நீஸ் மகாநாட்டு விஷயத்தில் அவர்கள் முடிவுக்கு வருவார்கள் என்று நினைத்திராத எங்களுக்கு ஆன் சொன்ன செய்தி மிகுந்த சந்தோஷத்தை அளித்தது.

''எங்கள் மினிஸ்ட்ரி நிர விசாரித்தார்கள். சில நல்ல எழுத்தாளர்கள் வருவதாகக் கேள்விப்பட்டோம். அதனால் உங்களை அக்டோபர் 5-ம் தேதி மாலை விமானத்தில் நீஸுக்கு அனுப்புவதாகத் தீர்மானித்திருக்கிறோம்.''

திரு. ஸந்துவின் ஏமாற்றத்தையும் கோபத்தையும் தங்கள் மந்திரியின் காரியாலயத்துக்கு ஆன் தெரிவித்திருப்பாரோ என்று எனக்குச் சந்தேகம். திருமதி ஆப்பில் பீக்கு மேல் இருந்த உயர் அதிகாரி திரு. ஃபேவியரையும் பிந்தைய தினம் நாங்கள் கண்டு எங்கள் நிலையை விளக்கியிருந்தோம். திரு. ஸந்து தமது ஏமாற்றத்தைத் தெளிவாகத் தெரிவித்திருந்தார். அதன் பலன் தான் இந்தத் திடீர் முடிவு என்று தெரிந்தது. மினிஸ்ட்ரியின் ஆரம்பத் தயக்கத்துக்கான காரணத்தை நான் ஆனிடமிருந்து தெரிந்து கொண்டேன். நீஸில் நடக்கவிருந்த எழுத்தாளர் மகாநாட்டை நீஸின் மேயர் ஏற்பாடு செய்திருந்தார். அவர் ஆளும் கட்சிக்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவராம்! தன் பிரசாரத்துக்காக இந்த மாநாட்டை ஏற்பாடு செய்கிறார் என்று அரசாங்கம் அனுமானித்ததாம். எதிர்க்கட்சி நடத்தும் மகாநாட்டுக்கு அரசாங்க விருந்தாளிகளை அனுப்புவது அதை ஆதரிப்பது போல் ஆகாதா? விருந்தாளிகளின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்கிற பண்பில் கடைசியில் ஒப்புக் கொண்டு எங்களை அனுப்ப இசைந்தது பெரிய கௌரவம் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

பாரீஸிலிருந்து சில மைல்கள் தள்ளி இருந்த பதினான்காம் லூயி மன்னனின் வர்ஸெய் அரண்மனையைப் பார்க்கவும், பல மைல்கள் தள்ளி இருந்த லூவார் வாலி என்ற பன்னிரண்டாம் நூற்றாண்டு மாளிகைகளும் அரண்மனைகளும் கொண்ட அழகிய இடத்திற்குச் செல்லவும் ஏற்பாடுகளை மினிஸ்ட்ரி செய்தது. நீஸுக்குச் செல்ல இன்னும் ஐந்து நாட்கள் இருந்தபடியால் நாங்கள் வெகு உற்சாகத்துடன் பார்க்க முடிந்த இடங்களையும், மனிதர்களையும் பார்க்கத் தயாரானோம்.

பாரீஸ் நகரத்தில் இயங்கிய எழுத்தாளர் கூட்டுறவு சங்கத்தினரால் அழைக்கப்பட்டுச் சில எழுத்தாளர்களைச் சந்தித்துப் பேசினோம். நமது சங்க அலுவலகங்கள் போல் பரதேசிக் கோலம் பூணாமல் நல்ல வசதியுடன் தெரிகிறது அவர்களது அலுவலகம். பொதுவாக வாழ்வின் தரம் அங்கு உயர்வாக இருப்பதால், புத்தகம் வாங்கும் வழக்கம் அங்கு மக்களிடையே இருப்பதால் நம் எழுத்தாளர்க் கும்பலைவிட அங்கிருக்கும் எழுத்தாளர்க் கும்பல் வசதியாகத் தோற்றமளித்திருக்கலாம்.

ஒன்று மட்டும் எனக்குப் புரியவில்லை. அங்கு ஓவியத்தைத் தொழிலாகக் கொள்ளத் துடிக்கும் இளைஞர்கள் ஏராளம். எந்த மியூஸியத்துக்குச் சென்றாலும் தாளும் பென்ஸிலுமாக வரைந்து கொண்டிருக்கும் இளைஞர்களைப் பார்க்கலாம். பாம்பீடோ என்று மிக நவீனமான மியூஸியம் (பிரஸிடென்ட் பாம்பிடோவால் கட்டப்பட்டது.) இருக்கிறது. எனக்கே அதன் கட்டிட அமைப்பு பின்புலத்துக்கு ஒட்டாத குரூரமாகத் தோன்றிற்று. ஃப்ரெஞ்சுக்காரர்கள் கட்டிடத்தை 'அசிங்கம்' என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த மியூஸியத்தைத் தினமும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வந்து பார்க்கிறார்களாம். பிரபல ஓவியங்கள் முன் பல மாணவர்கள் அமர்ந்து வரைவதை நான் பார்த்தேன். பாம்பீடோவின் மைதானம் போன்ற காம்பவுண்டில் அமர்ந்தபடி வரைவதையும் பார்த்தேன். நிறைய இளைஞர்களும் யுவதிகளும் ஓவியத்தைத் தங்கள் தொழிலாக மேற்கொள்ளுவதாக ஆன் சொன்னார். போதிய ஊதியம் கிடைக்குமா என்று நான் வியந்தேன். ''கஷ்டம் தான். ஆனால் ரத்தத்தில் ஊறிவிட்ட ஆர்வத்தை நீங்கள் எப்படிக் கட்டுப்படுத்துவீர்கள்?'' என்றார் ஆன்.

இளைஞர்களும், யுவதிகளும் மிக சகஜமாகப் பழகுவதையும் கவனித்தேன். கூட்டம் என்றோ, ஜனங்கள் தங்களைப்பார்ப்பார்கள் என்றோ கூச்சம் எதுவும் இல்லை. பாரீஸ் தெருக்களில் அவர்கள் பாட்டுக்கு இறுக அணைத்து முத்தம் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். பாதசாரிகள் கண்டு கொள்ளவே மாட்டார்கள்!

பாம்பீடோ மியூஸியமுக்கு முழுக்க முழுக்க எஸ்கலேட்டரிலேயே செல்ல வேண்டும். Z வடிவத்தில் இருக்கும் எஸ்கலேட்டர்களைக் கண்ணாடிக் குழாய்கள் மூடியிருக்கும். அதில்

வாஸந்தி

போகும் ஜனங்களை வெளியிலிருந்து பார்க்க முடியும். எஸ்கலேட்டரில் ஜாக்கிரதையாக, கவனமாக நிற்க வேண்டும். அப்படிப்பட்ட ஓர் இக்கட்டான இடத்தில் கூட ஆணும், பெண்ணும் தங்களை மறந்து அணைப்பில் இருப்பார்கள். அதைக் கண்டு யாரும் முகம் சுளிக்க மாட்டார்கள்.

இத்தகைய ஈடுபாட்டை (!) அவர்கள் படிப்பிலும் காட்டுவதை அதே பாம்பீடோவில் இருக்கும் பிரும்மாண்ட நூலகத்தில் பார்த்தேன்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கங்கே இருக்கும் மேஜை நாற்காலிகளில் அமர்ந்து சுற்றியிருக்கும் ஜனத்திரளை, பார்வையாளரைச் சட்டை செய்யாமல் தங்கள் கையிலிருந்த புத்தகத்தில் ஒன்றி நோட்ஸ் எடுத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எதிரில் இருக்கும் சின்னத் திரையில் அவர்களது பாட சம்பந்தமான ஸ்லைடுகளைப் போட்டுப் பார்த்து எழுதிக் கொண்டிருப்பார்கள். பல தேசத்து மாணவர்கள். கறுப்பர்கள்; இந்தியர்கள். கவனம் சற்றுப் பிறழ வேண்டுமே! பல மொழிப் புத்தகங்கள் அந்த நூலகத்தில் இருந்ததால் தமிழ்ப் புத்தகங்கள் அங்கு என்ன இருக்கின்றன என்று பார்க்கும் ஆவலுடன் அந்தப் பகுதியைக் கவனிக்கும் நூலகரிடம் விசாரிக்கச் சென்றேன்.

அவை இருக்கக் கூடிய இடத்தைப்பற்றி வேகமாக ஃப்ரெஞ்சில் சொல்லிக் கொண்டிருக்கையில் இடையில் சற்று நிறுத்தி ஆனிடம்,

''இவருடைய கண்கள் மிக அழகானவை'' என்றார்!

அவர் சொன்ன இடத்தில் அரசாங்கம் வெளியிட்ட சில தமிழ் ஆய்வுப் புத்தகங்களே இருந்தன.

''உங்கள் புத்தகங்கள் கிடைத்ததா அங்கு?'' என்றார் சந்து.

''இல்லை — என் கண்ணைப் பற்றின பாராட்டுக் கிடைத்தது!'' என்றேன்.

''என்னிடம் எடைக்குப் போடுவதற்கு பழைய பேப்பர் ஏதுமில்லை...''

''தொகுதி மக்களைச் சந்தித்துக் குறை மனு வாங்கினீர்களே! அது என்ன ஆச்சு?''



மோ மார்ட் (Mont Martre) என்ற மிகப் பிரசித்திபெற்ற இடம் ஒன்று பாரீஸ்ஸில் இருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டு காலமாகப் பல எழுத்தாளர்களும் ஓவியர்களும் பலவிதமான கலைஞர்களும் நடத்தும் உந்துதலைத் தேடி வந்து தன்னிச்சையான வாழ்க்கை (Bohemian life.) வாழும் இடம் இது. ஒரு மலை மேட்டில் மிக அழகிய கிராமமாக இருக்கிறது. இதன் உச்சியில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தேவாலயம் ஒன்று இருக்கிறது. இந்த இடத்துத் தெருக்கள் முழுவதையும் அடைத்தபடி சித்திரக்காரர்கள் சித்திரம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். வரும் சுற்றுலாப் பயணிகளிடம் சித்திரங்களை விற்கிறார்கள். பல ஓவியர்கள் உருவம் தீட்டுபவர்கள். ''மாடம் உங்களுக்கு உங்கள் 'போர்ட்ரெய்ட்' வேண்டுமா?'' என்று என்னைப் பிய்த்தெடுத்து விட்டார்கள். பல பேர்கள் உட்கார்ந்திருப்பதை நான் கவனித்தேன். சித்திரம் தீட்டுபவர்கள் மிகத் தேர்ந்தவர்களாகவே தோன்றினார்கள். அங்கு மிக உற்சாகமான சூழலாக இருந்தது. சிரிப்பும் பாட்டுமாக. இத்தனை இளைஞர்களும் சித்திரம் தீட்டுவதைத் தொழிலாகக் கொண்டார்களானால் இவர்களது ஜீவனம் எப்படியிருக்கும் என்று எனக்குத்தான் கவலையேற்பட்டது. அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றி எந்தக்கவலையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தவிரவும் இவர்களுக்கெல்லாம் குடும்ப பாரத்தைச் சுமக்கும் வழக்கம் இல்லை. ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் ஒரு வயதுக்கு வந்த பிறகு தனிப் பிரஜை. கல்லூரியில் படிக்கும் போது கூடப் பெற்றோர்களுடன் சேர்ந்து வசிக்காமல் தனியாக அறை எடுத்துக் கொள்கிறார்கள். அவரவர் எதிர்காலத்துக்கு அவரவரே பொறுப்பு.

ஆன் தன் மகளும் (கல்லூரி மாணவி) சர்வகலாசாலை அருகில் தனி அறை எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்.

''உங்களுக்கு அவளைப் பற்றிக் கவலையிருக்கிறதா? பொதுவாகப் பெற்றோர்களுக்கு, இந்த மாதிரி ஒரு அமைப்பு பாதிப்பை ஏற்படுத்தாதா?'' என்று கேட்டேன். ''அதாவது குழந்தைகள் மிகவும் சுதந்திரமாகப் போய் விட மாட்டார்களா? ஒட்டுதல் போய் விடாதா?'' என்றேன்.

''சமூக அமைப்பு இப்பொழுது அப்படி ஆகிவிட்டபின், நான் எப்படி வித்தியாசமாக இருக்க முடியும்?'' என்றார் ஆன்.

''ஓரளவுக்குத்தான் நாம் குழந்தைகளை வளர்க்க முடியும். எத்தனை நாட்களுக்குப் பாதுகாப்பையும் கடிவாளத்தையும் போட முடியும்? சுதந்திரம் கொடுத்தால் பொறுப்புணர்ச்சியும் அதிகரிக்கும் என்று நான் நம்புகிறேன். இப்பொழுது என் பெண் தன் அறைக்கு யாரை அழைத்து வருகிறாள் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் பொறுப்புடன் நடந்து கொள்வாள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என் 22 வயதுப் பிள்ளையும் தனியாகத்தான்



உங்கள் டாக்டரைச் சந்திப்பதற்கு
நீங்கள் மணிக்கணக்கிலே
காத்திருக்க வேண்டி
இருக்கும். ஆனால் இருமல்
காத்திருப்பதில்லை!



உங்களுக்கு இருமல் ஆரம்பித்தவுடனேயே அதற்கு சிறப்பான சிகிச்சை அளியுங்கள். வொகாஸில் சாப்பிடுங்கள்.

வொகாஸில்—ஆன்ட்டிஸெப்டிக் மற்றும் இதமளிக்கும் ஆறு பொருட்கள் அடங்கியுள்ளது: நீலகிரித் தைலம், பென்ஸைல் ஆல்கஹால், பால்ஸம், கற்பூரம், தைமால் மற்றும் மெந்தால்.

இவை அனைத்தும் சேர்ந்து வேலை செய்கிறது ஒரு சிறிய பச்சை நிற சதுரத்திற்குள்.

உங்கள் அருகிலேயே ஒரு டாக்டர்.

வொ கா ஸி ல்

ஆன்டிஸெப்டிக் இருமல் மாத்திரைகள்

Trikaya PPV 2.85 TAM

இருக்கிறான். ஆனால் நல்ல சமர்த்தான ஒரு அழகிய பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறான். சனி, ஞாயிறு கிழமைகளில் எங்களுடன் கழிக்கக் குழந்தைகள் வந்து விடுகிறார்கள். ரொம்ப சந்தோஷமான குடும்பம் என்னுடையது'' என்றார்.

''நம் குடும்பங்களில் இருக்கும் கட்டுப்பாட்டையும், சமூக அமைப்பையும் பற்றிக் கேட்டு ஆச்சரியப்பட்டார். நிச்சயிக்கப்பட்டு நடக்கும் திருமணங்களைப் பற்றிச் சொன்னதும் வியந்து போனார்.

''முன் பின் தெரியாத ஒருத்தரை எப்படித் திருமணம் செய்து கொள்ள உங்களால் முடிந்தது?'' என்று அதிசயித்தார்.

நாங்கள் வர்செய் (Versailles) அரண்மனையைப் பார்க்கச் சென்றபோது



★ ஒருவர்: ''அந்தக் கடையில் காலண்டர் விலை எப்படியிருக்கு...?''
மற்றவர்: ''போனவருஷத்துக்கு இந்த வருஷம் பரவாயில்லீங்க! பத்து ரூபாய்க்கு ஒரு புதுக் காலண்டர் வாங்கினால், இனமா மூணு பழையகாலண்டர் தர்றாங்க...!''

★ மானேஜர்: ''அந்த வாடிக்கைக்காரர் என்ன சத்தம் போட்டுப் பேசிட்டுப் போறார்...?''
கிளார்க்: ''போன வருஷம் காலண்டருக்கு ஆர்டர் கொடுத்ததை இந்த வருஷமாவது சப்ளை பண்ணுங்கன்னு தான்...!''
மானேஜர்: ''இப்படி அர்ஜண்ட் ஆர்டரையெல்லாம் ஏன்யா வாங்கறே...!''

★ தொண்டன் 1: ''ஜனவரி ஒண்ணாந் தேதி, பொதுக் கூட்டத்திற்கு நம்ம தலைவரை அழைத்தது தப்பாப் போச்சு...!''
தொண்டன் 2: ''ஏன்...?''
தொண்டன் 1: ''எடைக்கு எடை காலண்டர் கேட்கிறார்...!''
—ஆர். சுப்பு.

அங்கு அவருடைய கணவரும் வந்து எங்களைச் சந்தித்தார்.

''வாஸந்தியைப் பார்க்கும் ஆவலுடன் வந்திருக்கிறார்'' என்று ஆன் கணவரைப் பரிகசித்தார். உண்மையில் அன்று அவர்களது திருமண நாள் என்பதையும் அந்த வர்ஸெய் தோட்டத்தில் தான் இருபத்திமூன்று வருஷங்களுக்கு முன் ஆனின் கணவர் தன் காதலை அவரிடம் தெரிவித்தார் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன்.

நீஸில் நாங்கள் இருக்க வேண்டிய நாட்களில் சனி ஞாயிறும் இருந்ததால் தன்னால் எங்களுடன் வர இயலாது என்று வருத்தத்துடன் ஆனால் வெகு கண்டிப்புடன் ஆன் மறுத்து விட்டார். வார இறுதியைக் கண்டிப்பாகத் தன் குடும்பத்துடன் கழிப்பதைத் தன் வழக்கமாகக் கொண்டிருப்பதாகவும் தன் கணவனை விட்டுப் பிரிந்திருப்பது தனக்கு இஷ்டமில்லை என்றும் சொன்னார்.

''I have to be careful you know!'' என்று சிரித்தார். ''கணவன்மார்களிடம் மனைவிமார் காட்டும் அன்பில் எந்த கவனப் பிசகும் ஏற்படக் கூடாது. நான் என் கணவரை மிகவும் காதலிக்கிறேன். அவரை இழக்க நான் தயாராயில்லை.''

அவருடைய விவாதம் எனக்கு வேடிக்கையாக இருந்தது.

''ஒரு வார இறுதியை வெளியில் நீங்கள் கழித்தால் உங்கள் கணவரின் பிரியம் குறைந்து விடும் என்று பயப்படுகிறீர்களா? அப்பொழுது உங்கள் அன்புக்கு என்ன பலம்?'' என்றேன்.

''பலத்தை நான் சந்தேகிக்கவில்லை. ஒரு வார இறுதியை வெளியே செலவழித்தேன் என்றால் மெல்ல மெல்ல அதுவே வழக்கமாகிப் போகலாம். எந்தக் கணவனுக்கு வீட்டில் தனியாக இருக்கப்பிடிக்கும்? அவனும் வெளியில் போகலாம், புதிய சினேகிதம் ஏற்படலாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களை ஏன் உருவாக்க வேண்டும்? லாரி, வாஸந்தி, என் குழந்தைகளும் வருவார்கள். அவர்களுக்குப் பிடித்தமான உணவை நான் செய்து கொடுப்பேன் என்கிற ஆசையுடன் வருவார்கள். நான் அவர்களுக்கு ஏமாற்றமளித்தேனானால் அவர்களுக்குப் பிடிமானம் விட்டுப் போகும். வேறு ஒரு மொழி பெயர்ப்பாளர் உங்களுடன் நீஸுக்கு வருவார் கவலைப்படாதீர்கள்!'' என்றார்.

நான் ஆனைத்தவிர பழக நேர்ந்த இன்னும் சில ஃப்ரெஞ்ச் பெண்மணிகள், படித்து உத்தியோகம் பார்ப்பவர்கள் — இதே மாதிரி கருத்தைக் கொண்டிருந்ததைக் கவனித்தேன். பொதுவாக ஃப்ரான்ஸ் தேசத்துப் பெண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கத் தயங்காத சுதந்திரப் பறவைகள் என்று எல்லோரும் பேசுவது எத்தனை தவறானது என்று நினைத்துக் கொண்டேன்.

மிக அதிசயமான ஒரு சுதந்திர மனுஷியைச் சந்திக்க நேர்ந்தது வெகு விரைவில்.

(தொடரும்)



வி. மஹாதேவன்

லஞ்சம் நுழைந்தது எப்படி?

பம்பாயிலிருந்து வந்திருந்த மாமா, என்னிடம் ஒரு துண்டுக் காகிதத்தில் சில குறிப்புகள் எழுதிக் கொடுத்து, ''பைய னுடைய 'பர்த் சர்டிபிகேட்' வாங்கி அனுப்பிடு'' என்று சொல்லிக் கையில் ஒரு பத்து ரூபாய் நோட்டைத் திணித்தார். ஏதோ தூக்கக் கலக்கத்திலிருந்த நானும் சரியென்று ஒப்புக் கொண்டு விட்டேன். அது பெரிய செலவிலும் அலைச்சலிலும் அவஸ்தையிலும் கொண்டு விடும் என்பது சத்தியமாய் எனக்கு அப்போது தெரியாது.

முதலில் தாசில்தாருக்கு ஒரு மனு கொடுத் தேன். இதுபற்றியொரு உண்மை. எனக்கு மனு எழுதவே தெரியவில்லை. தாலுகா ஆபீஸ் வாசலில் இருக்கும் மனு எழுதுபவ ரிடம் கொடுத்து எழுதச் சொல்லவும் எனக்குத் தயக்கம். நமக்கு மனு எழுதத் தெரியாது என்று ஒப்புக் கொள்வதாகும் அல்லவா?

பிறகு, நம்மைப் போன்றவர்கள் சொந்த மாகவே மனு எழுத ஆரம்பித்து விட்டால், 'அப்புறம் இவர்கள் பிழைப்பு எப்படி?' என்று ஒரு நொண்டிச் சமாதானம் செய்து கொண்டு 'மனு எழுதி'யிடம் கொடுத்து மனு எழுதச் சொல்லி, ஒரு ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்டி உதவி தாசில்தாரிடம் கொடுத்தேன். மேலோட்டமாகப் படித்து விட்டு உடனே கையெழுத்துப் போட்டு, பக்கத்தில் உள்ள பெட்டியில் போட்டு விட் டார் அவர்.

வெளியில் வந்து விசாரித்ததில் இது போதாது என்றும் உள்ளே 'கிளார்க்'கைத் தனியாகப் போய்ப் பார்க்க வேண்டும் என்றும் 'மனு எழுதி' தெரிவித்தார்.

'கிளார்க்'கை அணுகி விஷயத்தைச் சொல்லி முடித்த கையோடு ஐந்து ரூபாயை எடுத்து நீட்டினேன்! அவர் 'கூல்'லாகச் சிரித்து விட்டு, ''இருக்கட்டும் முதல்லே சப் – ரிஜிஸ்ட்ரார் கிட்ட ஒரு மனுகொடுத்துப் பிறப்பு பதிவாகியிருக்கா பாருங்க. அப்புறம் இங்க வாங்க'' என்றார். பணம் அழுத்தும் முறை நமக்குத் தெரியவில்லை என்று ஒரு புறம் நான் எண்ணிக் கொண்டாலும், அந்தக் கிளார்க் சிரிப்புடன் மறுத்த போது என்னை வெட்கம் பிடுங்கித் தின்றது.

மறுபடி 'மனு எழுதி'யிடம் வந்து சப்– ரிஜிஸ்திராருக்கு ஒரு மனு எழுதிக் கொண்டு போனேன். அவர் கையெழுத்திட்டு மனுவை என்னிடமே கொடுத்து, ''அவரிடம் கொடு'' என்று மற்றொருவரைச் சுட்டிக் காட்டினார். அந்த அவரிடம் கொடுத்ததும், படித்துவிட்டு ''கொஞ்சம் வராந்தாவிலே இருங்க, கூப்பிட றேன்'' என்றார்.

நானும் வராந்தாவில் உள்ள பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு, சற்று நேரத்துக் கொருதரம் ஜன்னல் வழியே 'அந்த அவரை'ப் பார்த்துக் கொண்டிருந்தேன். பின்பு பொறுமை இழந்து மறுபடி அந்த அவரின் அருகில் சென்றேன். மனுவைச் சுட்டிக் காட்டி, ''பிறப்பு பதிய வைச்சிருக்கா



பார்க்கனும்'' என்றேன். பார்த் ரெஜிஸ்டரை அலசிவிட்டுப் பிறப்பு பதிவு செய்யப்படவில்லை என்று தெரிவித்தார் அவர். ''பர்த் ரெஜிஸ்டரைப் பரிசீலித்ததற்கு ரெண்டு ரூபாய் கட்டனும் தம்பி'' என்றார். ''ஆகட்டுங்க'' என்று சொல்லிவிட்டு 'மனு எழுதி'யிடம் வந்து விவரம் சொன்னேன். ஐந்து வருடங்களாகியும் பதிவாகாத ஒரு பிறப்பைப் பதிவு செய்து, 'பர்த் சர்டிஃபிகேட்' பெறும் முறையை அவர் விளக்கினார்.

''நான் காண்பிச்ச 'கிளார்க்' கிட்டே போய் வெவரம் சொல்லுங்க... அவர் தாசில்தாருக்கு எழுதி வைப்பாரு... அப்புறம் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் 'ரிப்போர்ட்' வேண்டியிருக்கும். அது தாசில்தாருக்கு வந்த பிறகு, அரியலூர் கோர்ட்டுக்குப் போயி, அங்கிருந்து உத்தரவு கொடுத்ததற்குப் பிறகு தான் இங்கே பதிவு பண்ணுவாங்க; வெரட்டிஞருப்பு'' என்றார்.

மீண்டும் கிளார்க்கை அணுகி, 'பதிவாகவில்லை' என்ற விவரம் சொன்னேன். 'அதை எழுதிக்கிட்டு வாங்க'' என்றார் அவர். திரும்பவும் சார் பதிவாளர் அலுவலகம் சென்று அந்தக் கிளார்க்கை அணுகி, வற்புறுத்தி, மனுவின் பின்புறம் 'பதிவாகவில்லை' என்று பென்சிலால் குறிப்பெழுதி வாங்கினேன்.

மறுபடியும் தாலுகா ஆபீஸ் 'கிளார்க்'கை அணுகி; 'பதிவாகவில்லை' என்ற குறிப்பைக் காட்டினேன். ''அவசரப் படாதீங்க. தாசில்தாருக்கு எழுதி வைக்கிறேன்... அப்புறம் வாங்க''என்றார். மேற்சொன்ன அனுபவங்கள் அனைத்தும் மனு கொடுத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் நடந்தவை. அப்புறம் இரு வாரங்களுக்கு ''நாளைக்கு வாங்க'', ''அந்த கிளார்க் லீவுங்க'', ''எழுதி வைச்சிருக்கேன். தாசில்தார் கையெழுத்து ஆவலீங்க.'' என்ற சலிப்பைத் தரும் பதில்கள்.

போதும் போதும் என்றாகிவிட்டது. மொத்தத்தில் இந்த 'பர்த் சர்டிபிகேட்டு'க்காக ஐந்து மாதங்கள் அலைய வேண்டிய திருக்கும் என்று எனக்கு அன்று தெரிந்திருந்தால் இந்த முயற்சியையே கைவிட்டிருப்பேன்!

நாட்கள் நகர்ந்தன. நானும் தவங்கிடந்தேன். ஒருநாள் மாலையில், ஆறுமணிக்குப் பிறகு, நல்ல காலம் பிறந்தது. என்னைக் கூப்பிட்டு உட்காரச் சொல்லி, ரிப்போர்ட் எழுதினார் ரெவின்யூ இன்ஸ்பெக்டர். நான் விவரங்கள் சொல்ல, அவர் ரிப்போர்ட் எழுதிக் கொண்டு வருகையில்,

''தம்பி, நீங்க என்ன படிக்கறீங்க?'' என்று கேட்டார்.

''எம். எஸ்ஸி. முதல் வருஷம் சார்...''

''எந்த வேலைக்கு 'வேணும்'னாலும் போங்க. ஆனக்கா, இந்த ஆர். ஐ. யாக மட்டும் வந்துராதீங்க. 'ரெஸ்டா' வீட்டுக்குப் போனோம், வந்தோம்னு இருக்காது. ஒரு ஆக்ஸிடெண்டானா உடனே ஓடனும். சண்டைன்னா ஓடனும். தீப்புடிச்சிக்கிச்சின்னா ஓடனும்...'' என்றுஅலுத்துக் கொண்டார்.

''ரொம்பக் கஷ்டம் தான் சார்'' என்றேன்.

''உங்ககிட்டே இருபத்தஞ்சு ரூபா வாங்கறது ஏதோ என்னோட சொந்த செலவுக்கு மட்டும்னு நினைக்காதீங்க... எனக்கு மேலே உள்ள அதிகாரிங்களோட வெளியே போக வேண்டியதிருக்கும் போது, கார்ல தான் போக வேண்டிவருது... பெட்ரோல் செலவிலேருந்து இடையிலே ஏற்படற எல்லா செலவும் நம்ம தலையிலே தான் உளுவுது. வெரட்டிஞருப்பான உத்தியோகம் தம்பி. ராத்திரி, பகல், தூக்கம், சாப்பாடு இதெல்லாம் பார்க்க முடியறதில்லை...'' என்றார்.

ஒருவழியாய் நான்கு பக்கங்கள் ரிப்போர்ட் எழுதி கையெழுத்திட்டு, ''படித்துப் பார்த்தோம், படிக்கக் கேட்டோம்' என்று எழுதி, கிராமத்திலிருந்து ஒன்பது பேரிடம் கையெழுத்து வாங்கி வா... நான் கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து வாங்கித் தரேன்'' என்றார். ஒரு வழியாய் அந்த ரிப்போர்ட் மீண்டும் தாலுகா அலுவலகம் சென்றது. அங்கே குமாஸ்தா என்னை மூன்று மாதத்திற்கும் மேலாக அலைய விட்டுக் கொண்டிருந்தார். தினமும் நான் அவரைப் போய்ப் பார்ப்பதும், அவர் ''நாளைக்கு வாங்க; ''அடுத்த வாரம் வந்து பாருங்க''; என்ற பதிலைச் சொல்வதுமே வாடிக்கையாய்ப் போய் விட்டது. அவருடைய வேலை ஆர். ஐ. யின் ரிப்போர்ட்டை தாசில்தாரின் பார்வைக்கு அனுப்ப வேண்டியது மட்டுமே! அவரிடம், பணம் கொடுக்க நான் தயார் என்றும் காரியம் சீக்கிரம் முடிய வேண்டுமென்றும் பலமுறை தெரிவித்து விட்டேன்.

அவரோ, எதற்கும் மசியக் கூடியவராகத் தெரியவில்லை. ''வேலையை முடிச்சதுக்கப்புறம் பணத்தைப் பார்த்துக்கலாம். அப்

நட்சத்திரங்கள்!

வானமெனும்
வாசலிலே
கோலமொன்று போடவேண்டி
வைக்கப்பட்ட
புள்ளிகள் தாமோ—
புள்ளியிட்டும்
பூரணமாய் கோலத்தை
முடிக்காத
காரணம் தான் யாதோ?
புதிரான புள்ளிகள்
எண்ணிக்கையில்
ஏராளம்
என்பதனால்
ஏற்பட்ட குழப்பம் தானோ?

எம். எஸ். முத்துக்கிருஷ்ணன்
இளம் அறிவியல்,
மூன்றும் ஆண்டு கணிதம்,
நந்தனம் கலைக்கல்லூரி,
சென்னை—35.



ஓம் சாந்தி

அன்பு கடலாகவும் சாந்தி கடலாகவும் முழுதூய்மையின் இருப்பிடமாகவும் உள்ள எல்லாம் வல்ல இறைவன் சதாசிவன் "என் இனிமையான குழந்தைகளே என்னை சதா நினைப்பதால் தொடர்ந்து 21 தேவதை பதவிகளைப் பெறுவீர்கள்" என்று சொல்லுகிறார்.

உலக அமைதி விழா

எம்.யு.ஸி. விளையாட்டு அரங்கம், எஸ்பிளனேடு, சென்னை-1

தேதி: 23-12-83 முதல் 4-1-84 வரை தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ராஜயோக பயிற்சி மூலம் தன்னையும் இறைவனையும் அறிக.

கலந்து கொள்க
அமைதி மாநாடு வள்ளுவர் கோட்டத்தில்

கருத்தாய்வு மன்றங்கள்: தினமும் மாலை 2-30 & சிறப்பு நிகழ்ச்சி மாலை 6 மணி

தேதி: 5-1-84 முதல் 8-1-84 வரை அனுமதி இலவசம்

அமைப்பாளர்கள்: பிரம்மா குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகம்
26, ஜம்புலிங்கம் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34

(ஐக்கிய நாடுகள் சபையின் அரசு சார்பற்ற ஆலோசக நிறுவனங்களில் ஒன்றாக இணைந்துள்ளது)

விவரங்களுக்கு அணுக: தொலைபேசி: 422468 நுங்கம்பாக்கம், 24108 எம்.யு.ஸி, 426411 வள்ளுவர் கோட்டம்.



Dr. S. K.

ஆண் — பெண் நல்வாழ்வு வாழ அழைக்கின்றோம்

உலகப் புகழ் பெற்ற பழனி சித்த வைத்தியபதி

Dr. S. காளிமுத்து

R.M.P. (IND) V.V.C., A.M.I.H., R.A.M.P., R.H.M.P.,

அவர்களின் சுற்றுப் பயணத்தில் அல்லது பழனியில் நேரில் சந்தித்து ஆலோசனை பெற்று இது வரை கஷ்டத்துடன் அனுபவித்த வியாதிகள் நீங்கிச் சுகவாழ்வு பெறலாம். உங்கள் பிரச்சினையான தாம்பத்திய வாழ்வில் மாறுபாடு — சோர்வு அணுக்கள் குறைவு — வீரியமின்மை — குடும்ப உறவில் முன்மாதிரி செயல்படுத்த முடியாமை — நரம்பு தளர்ச்சி — தேக உறுப்பு மெலிவு — கெட்ட கனவுகள், தூக்கம் இல்லாமை — குழந்தைச் செல்வம் இல்லாமை — வெட்கம் — நடுக்கம் - தோல்வி — ஆ. இருமல் — வாத நோய் — சரும நோய் குடல் புண் — வயிற்றுக் கோளாறுகள், நவ நூல வியாதிகள் மற்றும் இதர வியாதிகளும் 86 வருட அனுபவ மருந்துகள் பெற்று சுகவாழ்வும் மறு மலர்ச்சியும் பெறலாம்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்

தங்க பஸ்பம்	தங்க பஸ்பம்	மிக உயர்தரம்	ஆ. இருமல் செட்
மிக உயர்ந்த ரகம் ரூ. 330	சிட்டுக்குருவி லேகியம்	மிக உயர்தரச் செட் ரூ. 90	ரூ. 124 — 226
சுபர் செட் ரூ. 600	90 வேளை ரூ. 180	சரும நோய் செட்	வயிற்று வலி செட்
சுபர் செட் A. ரூ. 900	60 வேளை ரூ. 120	ரூ. 140 முதல்—260 வரை	ரூ. 92
	30 வேளை ரூ. 60		

சென்னை விஜயம்: 1, 2, 10, 11, 17, 18, 19

நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல், எட்வோர்ட் எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4 போன்: 83111

நேரில் ஆலோசனை பெற: 1ந் தேதி திருநெல்வேலி, நெல்லை லாட்ஜ், காலை 8 முதல் 12மணி; 1ந் தேதி நாகர்கோவில் ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன் பகல் 2 முதல் 4 மணி; 2ந் தேதி மதுரை மணீஸ் கபே காலை 8 முதல் 12 மணி; மாலை 2 முதல் 4 மணி 3ந் தேதி புதுக்கோட்டை சாந்தி லாட்ஜ் (வசந்தா லாட்ஜ்) காலை 11 முதல் 12 மணி; 3ந் தேதி காரைக்குடி AVM.PL ரெஸ்ட் ஹவுஸ் காலை 8 முதல் 10 மணி; 3ந் தேதி பட்டுக்கோட்டை ஹோட்டல் அலங்கார் பகல் 2 முதல் 3–30 மணி; 3ந் தேதி மன்னார்குடி மன்னை லாட்ஜ் மாலை 3 முதல் 4 மணி; 4ந் தேதி திருச்சி ஹோட்டல் அஜந்தா காலை 8 முதல் 2 மணி; 4ந் தேதி கரூர் பெரியார் லாட்ஜ் மாலை 3–30 முதல் 5 மணி; 5ந் தேதி தஞ்சாவூர் ராஜா ரெஸ்ட் ஹவுஸ் காலை 10 முதல் 12 மணி; 5ந் தேதி திருவாரூர் அபூபக்கர் பில்டிங்ஸ் மாலை 2 முதல் 4 மணி; 5ந் தேதி நாகப்பட்டினம் நிலைா விலாஸ் மாலை 5 முதல் 6 மணி; 5ந் தேதி காரைக்கால் அசோக் லாட்ஜ் மாலை 6–30 முதல் 7–30; 6ந் தேதி கும்பகோணம் தாஜ்மஹால் லாட்ஜ் பகல் 12 முதல் 2 மணி; 6ந் தேதி மாயவரம், காளியாகுடி லாட்ஜ் மாலை 3 முதல் 4–30 மணி; 6ந் தேதி சிதம்பரம் ஜெயராம் லாட்ஜ் மாலை 5–30 முதல் 7 மணி; 7ந் தேதி பாண்டிச்சேரி (அருணா லாட்ஜ்) பாரிஸ் லாட்ஜ் காலை 8 முதல் 9–30 மணி; 7ந் தேதி திருவண்ணாமலை மாடர்ன் கபே காலை 10 முதல் 12 மணி; 7ந் தேதி செங்கல்பட்டு கணேஷ் லாட்ஜ் மாலை 4 முதல் 6 மணி; 7ந் தேதி கடலூர் (என்.டி.) ஹோட்டல் பிருந்தாவனம் காலை 10–30 முதல் 12 மணி.

23ந் தேதி முதல் 31ந் தேதிவரை பழனி தலைமை வைத்தியசாலை

பழனி சித்தர் வைத்தியசாலை, (REGD) பழனி-624 601

• போன்: 316, 316-ஏ, 420, 630. தந்தி: சித்தர்

புறம், 'பணம் கொடுத்தேனே... வேலை ஆகல்லியே'னு நீங்க வருத்தப்பட்டுக்கக் கூடாது பாருங்க.'' என்று சொல்லியே என்னைக் கழித்துக் கட்டிக் கொண்டிருந்தார்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட்டைப் படித்த தாசில்தார், ஐந்து வருடங்களாகியும் குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப் படாததற்கான காரணத்தை விளக்குமாறு கேட்டு அனுப்பினார். அந்தக் கடிதத்தைத் தூக்கிக் கொண்டு ஆர். ஐ. அலுவலகத்துக்கு சென்றேன். இரண்டாவது தடவையாக ஆர். ஐ. ரிப்போர்ட் எழுதினார். ''நான் 'போஸ்ட்'லே தாலுகா ஆபீஸுக்கு அனுப்பிச்சுர்றேன், நீங்க கவலைப்படாதீங்க'' என்றார்.

இடையே, தாம் திருப்பதி சென்று வந்த விவரங்களைச் சொல்லி, ''சாப்பாடு வாங்கி வர ஆளைப் பார்த்துக்கிட்டிருக்கேன்.... காணும்'' என்றார்.

''நான் வாங்கி வரேன் சார்'' என்றதும் டிபன் கேரியரை மட்டும் கொடுத்து, ''உங்களுக்கெதுக்கு தம்பி சிரமம்'' என்றார். சாப்பாட்டிற்கான பணம் தருவாரோ என்னவோ என்று சற்று காத்திருந்து விட்டு, பிரயோஜனமில்லை என்று உணர்ந்து நகர்ந்த பொழுது,''பிரில் இங்க ஒரு பாட்டில் வாங்கி வந்துருங்க...'' என்று கட்டளை பிறந்தது.

இதற்கிடையே என் மாமா, 'பையனுக்கு ஸ்கூல்லே 1500 டொனேஷன் குடுத்தாச்சு. பர்த் சர்டிஃபிகேட் இல்லாமல் சேத்துக்க மாட்டானாம்...' என்று சில கடிதங்களும் எழுதி, இரண்டு தந்தியும் அடித்து விட்டிருந்தார். என் சித்தப்பாவிற்கு வேறு தனியாகக் கடிதமெழுதி — எனக்கு உதவச் சொல்லி — அவரையும் இந்த வேலையில் — இழுத்து விட்டு விட்டார். அவர் வந்து, என் சார்பாகத் தாலுகா அலுவலக கிளார்க்கிடம் பேசவும் ஒரு வாரம் கழித்து, அரியலூர் கோர்ட்டிற்கு நான் கொண்டு செல்ல வேண்டிய தபால் என்னிடம் வந்து சேர்ந்தது.

மறுநாளே அரியலூர் கோர்ட்டைத் தேடிச் சென்று அங்கிருந்த கிளார்க்கிடம் ஆவலாய் ரிப்போர்ட்டை நீட்டினேன்.


''எல்லா ரிப்போர்ட்டும் இருக்குதில்லே... கவனிச்சு அனுப்பிடறோம் போங்க''என்றார்.

நான் போகவில்லை. கையோடு காரியம் முடிய வேண்டும் என்று நான் திரும்பத் திரும்பச் சொன்னதும் கிளார்க் என்னைப் பற்றி விசாரித்தார்.

பிறகு, ''நானும் உங்க காலேஜிலேதான் படிச்சேன். இன்னமும் பி. ஏ. கம்ப்ளீட் செய்யலே... ஒரு பேப்பர் பாக்கி... சரி, பணம் கொடுத்துட்டுப் போங்க... நான் உங்க காரியத்தை முடிச்சு, கையோடு கடுதாசு போடறேன்'' என்றார். அவரைத் தவிர இன்னொருவரும் அங்கே நின்று கொண்டிருந்ததால், சங்கடப்பட்டு,

''வெளியே வந்து தரலாமா?'' என்றேன்.

''சும்மா குடுங்க.. இதிலென்ன பயம்?'' என்றார் அவர்.



எதிரிக்கு ஒரு எச்சரிக்கை!

என் அன்பு எதிரிகளே!
நீங்கள் அனைவரும்
நெருப்புக் குச்சிகள்.
நான் உங்களை
பொதிந்து இருக்கும்
நெருப்புப் பெட்டி
என்னிடம் உரசாதீர்கள்.
இறுதியில்
எரிந்து போவது
நெருப்புக் குச்சிதான்.
ஞாபகமிருக்கட்டும்!

சு. நீலகண்டன்,
தெ. தி. இந்து கல்லூரி,
பி. எஸ்ஸி. மூன்றும் ஆண்டு(பௌதிகம்)
நாகர்கோவில்—2.

நீதிமன்றத்தின் உள்ளே நின்றுகொண்டு இருபத்தைந்து ரூபாய் அழுது விட்டு வெளியே வர யத்தனிக்கையில் மஹாத்மாவின் உருவப்படம் என்னைப் பார்த்துச் சிரித்தது.


மறுதினமே, அரியலூர் கோர்ட்கிளார்க், கடிதம் கிடைத்தது. ''உம் அதிர்ஷ்டம் அன்றே காரியம் முடிந்து விட்டது. அன்றைய தபாலிலேயே சேர்த்து விட்டேன். தாலுகா ஆபீஸில் விசாரித்து பின் எனக்கு மறக்காமல் பதிலெழுதவும்...''

அதன் பின்பு ஒரு மாதம் நானும் என் சித்தப்பாவுமாக அலைந்து, பர்த் சர்டிஃபிகேட்டை வாங்கினோம்.

நான் எத்தனையோ முறை பணம் தரத் தயார் என்று வற்புறுத்தியும் மசியாத அந்த கிளார்க், — பொறுத்திருந்து —கடைசியில் என் சித்தப்பாவிடம் 'வன்னிசாக' நூற்றிருபத்தைந்து ரூபாயைக் கறந்து விட்டார். 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பது எப்படி என்பது எனக்குப் புரிந்தது.

ஏற்கெனவே ஐந்து மாதங்களாகி விட்டதாலும், மாமா அவசரப்படுத்தியிருந்ததாலும் பர்த் சர்டிஃபிகேட்டை வாங்கிய கையோடு சித்தப்பா, அதை பம்பாய்க்கு அனுப்பி விட்டார். இவ்வளவு அலைந்தும், அந்த சர்டிபிகேட்டைக் கண்ணால் காணும் பாக்கியம் கூட எனக்குக் கிட்டவில்லை. அதுவாவது போகட்டும் என்றால் மாமாவிடமிருந்தும், மூன்று மாதங்களாகியும் பர்த் சர்டிஃபிகேட்டைப் பெற்றுக் கொண்ட விவரத்திற்கோ, பையனை ஸ்கூலில் சேர்த்த விவரத்திற்கோ, நன்றி தெரிவித்தோ இன்று வரை ஒரு கடிதமும் வந்த பாடில்லை!

வி. மஹாதேவன்
எம். எஸ்ஸி, இறுதியாண்டு, (பௌதிகம்)
நேஷனல் ஈவினிங் கல்லூரி
(பாரதிதாசன் சர்வகலாசாலை)
கருமண்டபம், திருச்சி—1


CHARMINAR
THE VAZIR SULTAN
TOBACCO CO. LTD.
உங்களைப் போன்றவர்களை திருப்தி செய்ய சார்மினாரால்தான் முடியும்
சற்றே இளைப்பாறுவீர்! ஒரு சார்மினார் புகைப்பீர்



இந்தியாவில் ஜேம்ஸ்பாண்ட்

ஆக்டோபஸ்ஸி திரைக்கதையின்
தமிழ் வடிவம்
முதல் பாகம்

கால்களை எதிரே இருந்த முக்காலியின் மீது நீட்டியவாறு சோஃபாவில் சாய்ந்து விஸ்கியை ருசித்தான் ஜேம்ஸ்பாண்ட். அவன் எதிரே டீ. வி. மௌனமாய் இயங்கிக் கொண்டிருந்தது. ஒலியைக் கேட்காமல் ஒளியை மட்டும் பார்ப்பதில் சௌகரியம். மனம் யோசனைகளிலும் பழைய நினைவுகளிலும் ஆழ்ந்திருக்க அவ்வப்போது திரையில் வந்து போகும் அழகிகள் கண்ணுக்கு விருந்தளித்தனர்.

திடீரென்று தனக்குள் சிரித்துக்கொண்ட போது பாண்டின் கையிலிருந்த மதுக் கோப்பையில் ஐஸ் 'கிளிங்'கியது. அபாயம் நிறைந்த அவன் வாழ்க்கையில் சிரிக்கவைக்கும் சம்பவங்களும் நிகழ்வதுண்டு. ஒரு வாரம் முன்னர் ஜெட் விமானம் ஒன்றில் ஏறி, மயிரிழையில் எதிரிகளிடமிருந்து தப்பி உயரே உயரே பறக்கையில்... பெட்ரோல் கேஜ் '0' காட்ட, அவசரமாக, கீழே இறங்கி, போக்குவரத்து அற்ற ஒரு தேசிய நெடுஞ்சாலையை ரன் வேயாகப் பயன்படுத்தி, தரை தட்டிய பின் விமானத்தின் இறக்கைகளை மடித்துக் கொண்டு கார் போலச் செலுத்திச் சென்று பெட்ரோல் பங்க் ஒன்றில் நிறுத்தி, சிப்பந்தியிடம் 'டாங்கை நிரப்பு' என்றான். அந்தப் பெட்ரோல் பங்கு சிப்பந்தியின் முகம் போன போக்கை நினைத்த போது... ''டிரிங்'' — சிந்தனை ஓட்டத்தைச் சிதறடித்த ஃபோனின் மணியைப் பிடித்தான் ஜேம்ஸ்பாண்ட். ''உடனே அலுவலகத்துக்கு வா'', என்று மறுமுனையில் அவசரமும் அதிகாரமுமாக அழைத்தார் 'எம்.'

''**நா**ளுக்கு நாள் உன் அழகு கூடுகிறது...'' அலுவலகக் காரியதரிசியின் மேஜை மீது அமர்ந்த பாண்ட், டைப்ரைட்டரில் பறந்த அவன் விரல்களைப் பற்றினான். ''டபுள் ஓ செவன் வந்தாச்சா?'' என்ற அதட்டலான குரல் இண்டர்காமில் ஒலித்

○ சூதாட்ட காஸினோவில் கமல்கான் - ஜேம்ஸ்பாண்ட் முதல் சந்திப்பு



தது. ஏமாற்றத்துடன் கரங்களை விட்டு விட்டுக் கால்களை இயக்கி அகல அடியெடுத்து வைத்தான். அவன் மேலதிகாரி எம். அவா அறையில் அமைச்சர் ஒருவர் அமர்ந்திருந்தார். ''இவர் ஜிம் ஃபானிங். கலைப்பொருள் நிபுணர்'', என்று மற்றொருவரை அறிமுகப்படுத்தினார் 'எம்'. ''இது என்ன தெரிகிறதா?'' என்று பளபளக்கும் உருண்டை ஒன்றை நீட்டினார். வாங்கிப் பார்த்த பாண்ட், ''ஃபேபர்க் முட்டை போல் தெரிகிறது. ரஷ்ய அரச குடும்பத்தினருக்கு ஈஸ்டர் பண்டிகையின் போது கார்ல் ஃபேபர்க் பரிசாக அளித்த நவரத்தினங்கள் பதித்த பொன் முட்டைகள் சிலவற்றுள் ஒன்று இது. விலைமதிப்பற்ற பொக்கிஷம்'' என்றான். அவன் கைகளில் அதை மெல்லத் திருப்பக் குளுகுளு அறையின் செயற்கை ஒளியில் ஜொலித்தது அந்த முட்டை.

''உன் பதிலுக்கு நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது மார்க் தரலாம். இது அசல் ஃபேபர்க் முட்டை இல்லை. அதைப் போலவே தத்ரூபமாகச் செய்யப்பட்ட நகல். இன்று மத்தியானம் 'சாத்பியில்' அசலை ஏலம் விடப் போகிறார்கள்.''

''நான் கவனித்து வருகிறேன். இதோடு மூன்று ஃபேபர்க் முட்டைகள் ஏலத்துக்கு வந்து விட்டன. இது நான்காவது. ஏலத்துக்குக் கொண்டு வருவது வழக்கமான கலைப்பொருள் வியாபாரிகள் அல்ல. ஸ்விஸ் பாங்க் அக்கவுண்ட் வைத்துள்ள ஓர் அநாமதேயம்' என்றவாறே புருவங்களை நெரித்தான் ஃபானிங். ''நாம் இன்று 'சாத்பி'க்குப் போய் ஏலத்தைக் கவனிக்க வேண்டும், பாண்ட். விற்கிறவன் யார் என்று கண்டு பிடிக்க வேண்டும்.''

''ரஷ்யர்களாய் இருக்கலாம்,'' என்று அபிப்பிராயம் தெரிவித்த அமைச்சரின் முகத்தில் கவலை படர்ந்திருந்தது.

!—இந்தக் குறியை ஆச்சரியக்குறி என்று சொல்லக் கூடாது. உணர்ச்சிக் குறி என்றுதான் சொல்லவேண்டும். உணர்ச்சிகள் பல வகைப்படும். உணர்ச்சியை வெளிப்படுத்தப் பயன்படும் குறி உணர்ச்சிக்குறி.

''ஐயோ பாம்பு!'' — இந்த வாக்கியத்தில் ஆச்சரியமா இருக்கிறது?

('ஸ்வீட்' என்ற சிறுவர் பத்திரிகையிலிருந்து) —செந்தில்.



இதே சமயத்தில் மாஸ்கோவில் . ரஷ்ய ராணுவத்தின் உயர் மட்டக் குழு கூடியிருந்தது. ஜெனரல் கோகோல் மேற்கத்திய நாடுகளுடன் அணு ஆயுத பரிகரணம் குறித்து உடன்பாடு கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருந்தார். நாற்பது வயதே நிரம்பிய ஜெனரல் ஆர்லோவ் சீறினார். அணு ஆயுதங்களை ஒழித்துக் கட்டக் கூடாதென்றும் வார்ஸா ஒப்பந்தத்தில் இணைந்த நாடுகள் முந்திக் கொண்டால் உலகின் . ஏனைய பகுதிகளை எளிதாக அழித்து விடலாம் என்றும் அடித்துக் கூறினார். வாக்குவாதம் தொடர்ந்தது. இடையில் குழுத் தலைவர் குறுக்கிட்டு மத்தியஸ்தம் செய்ய வேண்டியதாயிற்று. ''நமது அணு ஆயுதங்களைத் தற்காப்புக்கு மட்டுமே பயன்படுத்துவோம். உலக சோஷலிசம் அமைதியான முறையில் உருவாகும்'', என்று அவர் தீர்ப்புக் கூற 'நற நற'வென்று பல்லைக் கடித்துக் கொண்டு வெளியேறினார் ஆர்லோவ்.

'தேசிய கலைக்கூடம் — பொது வழி அல்ல' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கதவைக் கோபத்துடன் திறந்து கொண்டு உள்ளே சென்றார் ஆர்லோவ். சிப்பந்தி லெனின் பரபரப்புடன் ஓடி வந்தான். ரகசியக் குரலில் ''பயங்கரமான செய்தி ஜெனரல்! இங்கே அசலுக்குப் பதில் காட்சிப் பொருளாக்க ஒரு போலி முட்டை தயாரிக்கச் சொல்லியிருந்தோம் அல்லவா? அது இங்கு வரும் வழியில் திருடு போய் விட்டது'' என்று கைகளைப் பிசைந்தான்.

''முட்டாள்! வேறு ஒரு நகலைத் தயாரிக்க உடனே ஆர்டர் கொடு!'' என்றார் ஆர்லோவ்.

''அதற்கு நேரமில்லை. இரண்டு நாட்களில் இங்கு இடீர்ப் பரிசோதனை நடக்கப் போவதாய்க் கேள்விப்படுகிறேன்.'' என்று லெனின் கூறவும் ஆர்லோவ் ஆடித்தான் போனார். ''லண்டனிலிருந்து அசலையே உடனே திருப்பி அனுப்பச் சொல்கிறேன். நேரத்தோடு செய்தி அவர்களை எட்ட வேண்டும்...''

கலைப்பொருள்களை ஏலம் விடும் திருவனமான 'சாத்பி'யில் திடீரென்று ஒரே பரபரப்பு. ஃபேபர்க் முட்டை ஏலம் விடப்பட்டது. ''எவ்வளவு பெறும்?'' என்று ஜேம்ஸ்பாண்ட் காதைக் கடிப்பதுபோல் கேட்கவும் பக்கத்திலிருந்த ஃபானிங் ஒரு விண்ணளாவும் தொகையைக் குறிப்பிட்டான். எப்போதும் அலைந்து கொண்டிருக்கும் ஜேம்ஸ்பாண்டின் விழிகள் நுழைவாயிலைக் கவனித்தன. அழகுச் சிலை ஒன்று ஒயிலாக நடந்து வந்து அமர்ந்தது. அந்த அழகியின் பக்கத்தில் அமர்ந்திருந்த ஆடவன் ஒரு மேற்கு ஆசிய நாட்டைச் சேர்ந்தவனும் 007-க்குத் தோன்றியது.

''அவன்தான் கமல்கான். ஆஃப்கானிய இளவரசன். சந்தேகத்துக்குரிய வழிகளில் பொருள்களை விற்பனைக்குக் கொண்டு வருபவன்'' என்று ஜேம்ஸ்பாண்டின் நினைவோட்டத்தைப் புரிந்துகொண்டது போல் குறிப்புக்கள் தந்தான் ஃபானிங்.

தொடர்ந்து நடந்த ஏலத்தில் பாண்ட் முட்டையின் விலையை அதிகரித்துக் கொண்டே போக, விடாமல் கமல்கான் போட்டி போட்டு, அரை மில்லியன் பவுண்டுகளுக்கு முட்டையை வாங்கிவிட்டான்.

இத்தனை விலை தந்தாவது முட்டையை வாங்கியே தீர வேண்டிய நிர்ப்பந்தம் கமல்கானுக்கு இருப்பது புரிந்தது. காரணம் என்னவாயிருக்கும் என்று ஜேம்ஸ்பாண்ட் யோசித்தான்.

தனது மேலதிகாரி 'எம்'-ஐச் சந்தித்துத் தகவல் கூறினான் பாண்ட். ''நம்மிடம் இருந்த நகலை சாத்பியில் ஏலம் தொடங்கு முன் இடம் மாற்றி விட்டேன். இப்போது கமல்கானிடம் போய்ச் சேர்ந்திருப்பது நகல். நம்மிடமிருப்பது அசல்.''

''சபாஷ் 007!''' 'எம்' இன் பாராட்டைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை பாண்ட். ''கமல்கான்தான் முட்டையை விற்பனைக்குக் கொண்டு வந்தவன் என்பதில் சந்தேகமில்லை. அதைத் திரும்பி அவனே வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக் காரணம் என்ன?'' என்று பாண்டின் உதடுகள் முணுமுணுத்தன. அவன் அனுபவமும், உள்ளுணர்வும் ரஷ்யாவுக்கு இந்தச் சூழ்ச்சியில் பங்கு இருக்கும் என்று அவனை எச்சரித்தன.

''கமல்கானை நீ பின் தொடர வேண்டும்.''–'எம்' சொல்லி முடிப்பதற்குள் பாண்ட் அறைக் கதவை எட்டிவிட்டான். ''நம் இந்தியக் கிளைக்கு நான் வருவதாகத் தகவல் தெரிவியுங்கள். கமல்கான் அங்குதான் செல்கிறான்'' என்றவாறே வெளியேறினான்.

✲ ✲ ✲

இந்தியா துளிக்கூட மாறவே இல்லை என்று நினைத்துக் கொண்டான் ஜேம்ஸ் பாண்ட். உதய்ப்பூரின் நிரம்பி வழியும் தெருக்கள். வெள்ளை ஆடையில் ஆண்கள், வண்ண வண்ணப் புடவைகளில் பெண்கள், ஓயாத சப்தம், பிச்சைக்காரர்கள், பாம்பாட்டிகள்.

''கமாண்டர் பாண்டுக்கு நல்வரவு!''– திடீரென்று பிரசன்னமான அந்த இளைஞன் ''நான் தான் விஜய். யூனிவர்ஸல் எக்ஸ் போர்ட்ஸின் சிறப்புப் பணியாளன்'' என்றான்.

''ஓ. நீ என்னை ஜேம்ஸ் என்றே கூப்பிடலாம்'', தோழமையுடன் சொன்னான்.

''நோ ப்ராப்ளம்'' என்று பதிலளித்த விஜய்க்கு எதுவுமே பிரச்சினை இல்லை என்பதை பாண்ட் சீக்கிரமே தெரிந்து கொண்டான்.

அவர்களுக்காக மூன்று சக்கர டாக்ஸியுடன் காத்திருந்தான் ஸாத்ருத்தின். ஏறிக் கொண்டதும் ஹோட்டல் ஷிவ்நிவாஸை நோக்கி விரைந்தது அந்த ஆட்டோ.

''கமல் கானைப் பற்றிச் சொல்லு'' என்றான் பாண்ட். ''நாடு கடத்தப்பட்ட ஆப்கானிய இளவரசன். சிறந்த விளையாட்டு வீரன். டென்னிஸ், போலோ, கிரிக்கெட், எல்லாம் விளையாடுவான். சூதாட்டத்திலும் வல்லவன்.'' தகவல்களை அடுக்கிக் கொண்டு போனான் விஜய். ''அதோ தெரிகிறதே. அதுதான் அவன் மாளிகை.''

அவன் சுட்டிக்காட்டிய திசையில் நோக்கினான் பாண்ட். ஒரு சிறு குன்றின் உச்சியில் கோட்டைச் சுவர்கள் சூழ்ந்த மாளிகை தெரிந்தது. பலத்த காவல் இருப்பது நிச்சயம் என்பதை அறிந்த பாண்ட், கமல் கானை எப்படிச் சந்திப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தான்.



மகள்: மம்மி! இந்தத் தடவையும் பெண் குழந்தை பிறந்திருக்கேன்னு கவலைப் படாதே! அப்பா வயித்தை வலிக் கிறதுன்னு சொல்லிக் கொண்டிருக் கார். தம்பிப் பாப்பா பிறக்க சான்ஸ் இருக்கு!

கமல்கான் அன்றாடம் சூதாடச்சென்ற காஸினோவுக்கு அன்று மாலை பாண்ட் விஜயம் செய்தான். ஸாத்ருத்தினும் விஜய்யும் அவனுக்காகக் காத்திருந்தனர். ஆங்கிலேய மேஜர் ஒருவர் கமல்கானுடன் ஆடித் தோற்றுக் கொண்டிருந்தார்... அருகே... சாத்பியில் ஏலத்தின் போது கமல்கானுடன் வந்திருந்த அந்த உயரமான அழகி.

பாண்டின் கண்கள் எல்லா விவரங்களையும் விழுங்கின. அவன் செவிகள் ஆட்டத்தின் போக்கை அவ்வப்போது கவனித்தன. கமல்கான் ஒவ்வொரு முறை தாயத்தை உருட்டிய பொழுதும் சராசரி பன்னிரண்டு விழுந்தது. ''நூறாயிரம் ரூபாய்'' – கமல்கான் கூறக் கேட்டு ஆட்டத்திலிருந்து பின் வாங்கினார் மேஜர்.

''இருநூறாயிரம்!'' என்றான் பாண்ட் அமைதியாக. ஆச்சரியத்துடன் நிமிர்ந்தான் கமல்கான். ''உன்னிடம் அவ்வளவு பணம் இருக்கிறதா?''

அருகே இருந்த நாற்காலியில் சாவகாசமாய் அமர்ந்த பாண்ட் ஃபேபர்க் முட்டையை மேஜை மீது வைத்தான். கமல்கானின் முகம் கறுத்துச் சிறுத்தது.

''ஆடுங்கள் மிஸ்டர். இதிலிருந்து தப்புவதற்கு உங்களுக்கு ரொம்ப அதிர்ஷ்டம் வேண்டும்'' என்றான் விகாரமான புன்னகையுடன். பாண்ட் அநாயாசமாய்த் தாயக் கட்டைகளைக் குலுக்கி வீச, இரண்டு ஆறுகள் விழுந்தன.

பணத்துக்காகக் கையை நீட்டி விரல்களை அசைத்தான் ஜேம்ஸ்பாண்ட். கத்தை கத்தையாய் நோட்டுக்களை அள்ளிக் கொடுத்த கமல்கான் கர்ஜித்தான்: ''சீக்கிரமே பணத்தைச் செலவு செய்து விடுங்கள்.''

கமல்கானின் சொற்களில் தொனித்த பயங்கரமான அர்த்தம் பாண்டுக்குப் புரியாமல் போகவில்லை. வலையை விரித்தாகிற்று. ஜேம்ஸ் பாண்டிடம் உள்ளதுதான் அசல் பொக்கிஷம், தன்னிடம் உள்ள முட்டை போலி என்பது இப்போது கமலுக்குத் தெரிந்திருக்கும். அடுத்த அடியைக் கமல் தான் எடுத்து வைக்க வேண்டும். அதற்குக் கமல்கான் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை.

மற்றொரு ஆட்டோ தங்கள் ஆட்டோவைப் பின் தொடர்கிறது என்று சீக்கிரமே தெரிந்து கொண்டான் பாண்ட். ஓட்டி வந்த விஜய் வேகத்தை அதிகரித்தான். சாதாரண வெளித் தோற்றம் உடையவையாய் இருந்தாலும் இரண்டு வண்டிகளும் சக்தி வாய்ந்த என்ஜின்கள் பொருத்தப்பட்டவை.

பின்னாலிருந்து துப்பாக்கிக் குண்டுகள் சரமாரியாகப் பொழிய ஆரம்பித்தன. பாண்ட் குனிந்தும், திரும்பியும் அவற்றிடமிருந்து தப்பினான். தொடர்ந்து வந்த வண்டி இப்போது மிக அருகே பக்கவாட்டில் வந்து விட்டது. அதிலிருந்து குண்டன் ஒருவன் தாவி விஜய்யின் வண்டிக்குள் குதித்தான். கையிலிருந்த குத்துவாளை ஓங்கி பாண்டின் நெஞ்சில் பாய்ச்சினான். அவனை உதறித் தெருவில் தள்ளிய பாண்ட் தன் ஓவர் கோட்டைத் திறந்து விஜய்யிடம் காண்பித்தான். கத்திக் குத்தைக் தடுக்க கவசமாக அமைந்த ரூபாய் நோட்டுக் கத்தைகளைப் பார்த்த விஜய் அட்டகாசமாய்ச் சிரித்தான். ''ரூபாய் நோட்டுக்களுக்கு நல்ல உபயோகம்தான்.''

''மற்றொரு சிறந்த உபயோகமும் இருக்கிறது'' என்றவாறே பாண்ட், இரண்டு கத்தை நோட்டுக்களைப் பிரித்துத் தெருவில் பின்னோக்கி வீசினான். கரன்ஸி நோட் மழை பொழிவதைக் கண்டு திரண்டு வந்த மக்கள் வீதியை அடைத்துக் கொண்டனர். பின்னால் வந்த ஆட்டோ முன்னேற முடியாமல் திணற, எய்த்து விட்டுச் சென்றது விஜய்யின் ஆட்டோ.

பிரிட்டிஷ் அரசின் ஒற்றர் பிரிவின் இந்தியக் கிளை அலுவலகம். எலக்ட்ரானிக்ஸ் நிபுணன் ஒருவன் பாண்டிடமிருந்து ஃபேபர்க் முட்டையை வாங்கி அதன் உச்சியில் கண்ணுக்குத் தெரியாத வடிவில் ஒரு சின்னஞ்சிறு விசையைப் பொருத்தினான். ''இதோ, இந்தப் பேனாவை வைத்துக் கொள். — இதில் நுணுக்கமான ஸ்பீக்கர் உள்ளது. இதன் உதவியுடன் நீ இந்த முட்டையின் அருகில் பேசப்படும் எதையும் துல்லியமாய்க் கேட்க முடியும்.'' நன்றி கூறிவிட்டுப் பேனாவையும் முட்டையையும் பெற்றுக் கொண்டு புறப்பட்டான் பாண்ட்.

ஹோட்டல் ஷிவ்நிவாஸை அடைந்து உணவு விடுதிக்குள் நுழைந்த பாண்டின் கண்கள் அகல விரிந்தன. கமல் கானுடன் அவன் பார்த்த அழகி அங்கு அவனுக்காகக் காத்திருந்தாள். பொன்னைப் போல் ஒளிர்ந்த புடவை அவள் அழகிய மேனியை இறுகத் தழுவியிருந்தது. ''நைஸ் டு ஸீ யூ.'' என்றவாறே ஒரு கரத்தை அவள் இடையைச் சுற்றி வளைத்தான் பாண்ட்.

''நிஜமாகவா?'' என்று போலி ஆச்சரியத்துடன் அவன் கண்களை ஊடுருவினாள் மகதா. 'கமல்கானிடம் ஃபேபர்க் முட்டை திரும்பப் போய்ச் சேர்ந்தால் பாண்டுக்கு உயிர்ப் பிச்சை கிடைக்கும்' என்று எச்சரித்தாள். இல்லையென்றால் சதா உயிராபத்தை எதிர்நோக்க வேண்டியதுதான். பாண்டுடன் சேர்ந்து ஒரு புகைப்படம் மட்டும் எடுத்துக் கொண்டாள் மகதா. ''என்னுடைய ஆல்பத்துக்கு நான் இனிய நினைவுகளைச் சேகரிக்கிறேன்'' என்று விளக்கினாள்.

''இன்னும் சில இனிய நினைவுகளை உருவாக்கலாமே'' என்று அவள் காதருகில் கிசுகிசுத்தவாறே அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான் ஜேம்ஸ்பாண்ட்.

அவள் முதுகின் கீழ்ப்பகுதியில் எட்டுக் கரமுடைய கடல்வாழ் ஜந்துவான ஆக்டோபஸ் உருவம் பச்சைக் குத்தியிருந்தது. ''அது என் ஆக்டோபஸ்ஸி'' என்று புன்னகையுடன் விளக்கினாள் மகதா. ஆக்டோபஸ்ஸின் பெண்பாலுக்கு அந்தப் பெயராம்! — காலையில் கண் விழித்ததுமே பாண்டுக்கு அவள் சொன்னது நினைவுக்கு வந்தது. அறையில் மறுமூலையில் மகதா புடவையைக் கொசுவிக் கொண்டிருந்தாள். தலைப்பைத் தோள் மேல் வீசிவிட்டு, அருகே ஹாங்கரில் தொங்கிய பாண்டின் கோட் பாக்கெட்டுக்குள் மெல்லக் கைவிட்டுத் துழாவி ஃபேபர்க் முட்டையை எடுத்தாள்.

'தூண்டிலில் மீன் சிக்கி விட்டது' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு எழுந்து வந்தான் பாண்ட். அவளை மார்போடு அணைத்துக் கொண்டான். இடது கையில் இருந்த முட்டையை அவன் கண்களில் படாமல் மறைக்க அரும்பாடு பட்டாள் மகதா. மெல்ல நகர்ந்து அறையை ஒட்டியிருந்த பால்கனியை அடைந்தார்கள். அவன் கவனியாதபோது புடவைத்தலைப்பை பால்கனிக் கம்பியில் இறுக்கிக் கட்டினாள் அவள். கண்ணிமைக்கும் நேரத்தில் பாண்டின் பிடியை உதறிவிட்டு பால்கனியிலிருந்து கீழே குதித்தாள். ஆறு கஜப் பட்டுப்புடவை கயிறாகப் பயன்படக் கீழே இறங்கியவள் தனக்காகக் காத்திருந்த கமல்கானின் காரை அடைந்தாள். அதேசமயம் கமல்கானின் அடியாள் கோவிந்தா பாண்டின் அறைக்குள் ஓசைப் படாமல் புகுந்து அவன் பிடரியில் ஓங்கி அடிக்க 007க்கு உலகமே இருண்டது. (தொடரும்)

எதிரே : ஆக்டோபஸ்ஸி திரைப்படத்தில் ஒரு காட்சி.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



OBM/1656